Volume : 8 Issue - 1

# வைகறை வெளிச்சம்

ஜனவரி : 2015

விலை: ரூ.20

ஆசிரியர் மு.குலாம் முஹம்மது

ரபியுல் அவ்வல் : 1436



## காந்தியை கொலை செய்தது ஏன்?



## விடுதலைப் போரில் அன்றைய முஸ்லிம்களும் இன்றைய ஆட்சியாளர்களும்



## குண்டு வெடிப்பு வழக்கில் 14 ஆண்டுகளுக்கு பின் 12 முஸ்லிம்கள் விடுதலை



## அமெரிக்காவின் உளவுத்துறை செய்த அநியாயங்கள்

بسم الله الرحمن الرحيم




கவர் ஸ்டோரி 04

## மகாத்மா காந்தி ஏன் கொலை செய்யப்பட்டார்?


காந்தி கொலை : பாடநூல்களில் மறைக்கப்பட்ட வரலாறு........................................05

காந்தியைக் கொலை செய்தவர்கள்.................06

காந்திஜியை கொலை செய்த செயல்முறை...........................................................11


## தொடர்கள்


எது முதலில்?...............................................39

முஸ்லிம்களின் வீழ்ச்சியால் உலகம் இழந்தது என்ன?...........................................32

முஹம்மத்(ஸல்) அவர்கள் நமது காலத்திற்காக அனுப்பப்பட்ட நபி.......................................35

குழந்தை வளர்ப்பு.......................................43


சிறப்பு கட்டுரை 14



## விடுதலைப் போரில் முஸ்லிம்களும்! இன்றைய ஆளும் வர்க்கத்தினரும்!


இந்திய சுதந்திரப் போராட்டமும்! ஆர்.எஸ்.எஸ்.ஸூம்!!..............................................24

வாஜ்பேயின் தேசப் பக்தி கேள்விக்குள்ளாகிறது!.........................................28

எஸ்.பி.பட்டிணம் தொடரும் காவல் துறையின் சூழ்ச்சிகள்!...............................31

ஆஸ்திரேலியா - ஊடக புறட்டுகளும் பிரதமரின் உண்மை அறிக்கையும்........................47

2027 இல் இஸ்ரேல் இருக்காது!........................56





இந்திய சிறைச் சாலைகள் முஸ்லிம்கள் மற்றும் தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்விடங்களா?......................52





குண்டுவெடிப்பு வழக்கு மேலும் 12 முஸ்லிம்கள் விடுதலை!..54

அமெரிக்காவின் உளவுத்துறை செய்த அநியாயங்கள்!........58





தள்ளாடும் தமிழகம்!...63





அதிசயப் பெண் இரோம் ஷர்மிளா......44





மீத்தேன் திட்டம் ஒரு பார்வை............44



# வைகறை வெளிச்சம்

ஜனவரி - 2015 ரபியூல் அவ்வல் - 1436

ஆசிரியர்

**மு.குலாம் முஹம்மது.**

(Journalism & Mass Communication)

துணை ஆசிரியர்

**கே.எம். இலியாஸ் ரியாஜி.**

தனி இதழ் : ரூ.20/-

ஆண்டுச் சந்தா

உள் நாடு : ரூ.240/-

வெளி நாடு : ரூ.1500/-

பணவிடை மூலம் சந்தா செலுத்துவோர்

DARUL ISLAM FOUNDATION TRUST

என்ற பெயரிலேயே அனுப்ப வேண்டுகிறோம்.

இன்ஷா அல்லாஹ்.


இன்னும் நீங்கள் அல்லாஹ்வின் பாதையில் அவனுக்காக போராட வேண்டிய முறைப்படி போராடுங்கள்; அவன் உங்களைத் தேர்ந்தெடுத்துக் கொண்டான்; இந்த தீனில் (மார்க்கத்தில்) அவன் உங்களுக்கு எந்த சிரமத்தையும் ஏற்படுத்தவில்லை; இது தான் உங்கள் பிதாவாகிய இப்றாஹீமுடைய மார்க்கமாகும்; அவன்தாம் இதற்கு முன்னர் உங்களுக்கு முஸ்லிம்கள் எனப் பெயரிட்டான். இ(வ்வேதத்)திலும் (அவ்வாறே கூறப் பெற்றுள்ளது); இதற்கு நம்முடைய இத்தூதர் உங்களுக்குச் சாட்சியாக இருக்கிறார், இன்னும் நீங்கள் மற்ற மனிதர்களின் மீது சாட்சியாக இருக்கிறீர்கள் எனவே நீங்கள் தொழுகையை நிலை நிறுத்துங்கள் இன்னும் ஜகாத்தைக் கொடுத்து வாருங்கள், அல்லாஹ்வைப் பற்றிக் கொள்ளுங்கள், அவன்தான் உங்கள் பாதுகாவலன்; இன்னும் அவனே மிகச் சிறந்த பாதுகாவலன்; இன்னும் அவனே மிகச் சிறந்த பாதுகாவலன், இன்னும் மிகச் சிறந்த உதவியாளன்.

(அல்குர்ஆன் : 22;78)


விளம்பரங்களுக்கு – 81481 29887



**VAIGARAI VELICHAM**

52/1,Mannady Street, Room No.7,
Mannady, Chennai - 600 001.
Tel - 044 25224887
Mob: 9841675657
E-Mail: darultrust@yahoo.com
Web: www.darultrust.in



All disputes arising out of any publication in this monthly will come under the jurisdication of Chennai courts. Peivet circulation to promote the original issue.

https://www.facebook.com/vaigaraivelichammagazine

* * * * * * * * * * * * * * * * * * * * * * *



தலையங்கம்

# கட்டாய மதமாற்றம்

பன்னாட்டு நிறுவனமான ஆப்கோ (APCO) விற்கு பலகோடிகள் தாரை வார்த்து பொய்களை பரப்பி மதக்கலவரங்களை நடத்தி பித்தலாட்டங்களை செய்து ஆட்சிக் கட்டிலில் ஏறிய இந்துத்துவம் நாளொருமேனியும், பொழுதொரு வண்ணமாய் தனது சித்து வேலைகளை அரங்கேற்றி வருகின்றது. முஸ்லீம்களையும், கிறிஸ்த வர்களையும் ஆசை வார்த்தைகளை கூறியும் நிர்பந்தத்தை ஏற்படுத் தியும் கட்டாய மதமாற்றங்களை நாடு முழுவதும் செய்து வருகின்றது. இந்த மனித தன்மையற்ற செயலின் ஒரு முகமாக கடந்த டிசம்பர் மாதம் 8ம் தேதி "ஆக்ராவில் 57 குடும்பங்களை சர்ந்த 200 முஸ்லீம் களை அவர்களின் தாய் மதமான இந்து மதத்திற்கு மாறிவிட்டார்கள் என மதமாற்ற விழாவினை நடத்திய இந்து தர்ம ஜாக்ரன் மஞ்ச் மற்றும் பஜ்ரங்கள் ஆகிய அமைப்புகள்தெரிவித்தன." ("Times Of India. 9,12, 2014")

இந்நிலையில் திங்கள் கிழமை ஆக்ராவில் நடைபெற்றதாக கூறப்படும் கூட்டு மதமாற்ற நிகழ்வில் பங்கேற்று ராஜ்குமார் எனப்பெயர் சூட்டி இந்துவாக தன்னை மாற்றிக் கொண்டார் என்று சங்கபரிவார அமைப்புகளால் பரப்புரைச் செய்யப்படும் இஸ்மாயில் சித்திக் என்பவர் கூறுகையில் 'ரேசன் கார்டுகளை ஏற்பாடுச் செய்து தருவதாக கூறி அவர்கள் எங்களை அழைத்துச் சென்றனர்.ஆனால் அது மதமாற்றத்திற்கான சடங்கு என்பது எங்களுக்கு தெரியாது. அவர்கள் எங்களை இந்து மதத்தில் சேர்த்ததாக பின்னர் தாம் அறிந்தோம். ஆனால் நாங்கள் மதம் மாறவில்லை இப்போதும் நாங்கள் முஸ்லீம்கள் தாம் முஸ்லீம்களாகவே தொடர்வோம் என்றார்." "வறுமைக் கோட்டின் கீழ் உள்ள பட்டியலில் உட்படுத்தி குடும்ப அட்டைககளையும், இதர ஆவணங்களையும் ஏற்பாடு செய்து தருகின்றோம் என வாக்குறுதி அளித்து இரண்டு ஆர்.எஸ்.எஸ் உறுப்பினர்கள் சடங்கிற்கு அழைத்துச் சென்றதாக நிகழ்விற்கு சென்ற நூர் முஹம்மது மற்றும் அவரது அண்டை வீட்டுக்காரர் ஜஹாங்கீர் ஆகியோர் தொவித்தனர்". ("Hindusthan Times.9,12, 2014")

பீகார் மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களிலிருந்து வந்து குடியேறி ஆக்ராவின் வேத் நகரின் சேரிப்பகுதியில் வாழும் முஸ்லீம் களைத்தான் மேற்கண்ட ஆர்.எஸ்.எஸ். அமைப்புகள் ஏமாற்றி மத மாற்ற சடங்கில் பங்கேற்க வைத்துள்ளது. இதன் மூலம் முஸ்லீம்கள் தாங்களாகவே தங்கள் விருப்பபடி இந்து மதத்திற்கு மாறினார்கள் என்ற சங்கப்பரிவாரத்தின் பரப்புரைகள் பசபசத்துப் போனது.

"சிறுபான்மையினர் இங்கே வாழவேண்டுமாயின் அவர்கள் தேசிய இனமான இந்துக்களின் மதம், மொழி மற்றும் கலாச்சாரங் களை பின்பற்ற வேண்டும். இல்லையென்றால் அவர்களுக்கு இந்த தேசத்தில் எந்த உரிமையும் இல்லை, ஏன் அவர்கள் இந்துஸ்தானின் குடிமக்களாக கூட கருதப்பட மாட்டார்கள்". (கோல்வால்கர்; எழுதிய "We and our Nationhood defined" பக்கம் - 47)

கோல்வால்கரின் இந்த வார்த்தைகளை தான் ஆட்சிக்கு வந்த வுடன் இந்துத்துவ ஆட்சியாளர்கள் நடைமுறைப்படுத்துகிறார்கள். இப்படியான மனிதனின் எண்ணத்திற்கு மதிப்பளிக்காமல், இந்துத் துவத்தின் கட்டாய மதமாற்றத்திலிருந்தும் நாட்டில் நடக்கும் அவலங் களும், அக்கிரமங்களையும் ஒடுக்கி பாசிசத்தின் பிடியிலிருந்து

பாரதத்தை பாதுகாக்க வேண்டுமாயின் அது இஸ்லாத்தால் மட்டுமே முடியும். ஏனெனில் இஸ்லாத்தின் மென்னம் பெரிய ஆட்சியில்தான் அனைத்துத் தரப்பு மக்களும் நிம்மதியாகவும் மகிழ்ச்சியாகவும் வாழந்தனர். இஸ்லாம் என்றைக்கும் அடக்குமுறைகளையும் கட்டாய மதமாற்றத்தையும் ஆளும் பகுதியில் உள்ள மக்களிடம் உட்புகுத்தியதில்லை அப்படி உட்புகுத்தியிருந்தால் முஸ்லீம்களின் 800 ஆண்டு கால ஆட்சியில் என்றோ இந்தியா முஸ்லீம் நாடாக மாறியிருக்கும்.

உலகின் சரிபாதியை இஸ்லாம் ஆண்டபோது கட்டாய மதமாற்றத்தினை செய்திருந்தால் என்றோ உலகின் சரிபாதி இஸ்லாமிய மயமாகிப் போயிருக்கும். ஆனால் முஸ்லீம்கள் அப்படி செய்ததில்லை. காரணம் அப்படி செய்வதற்கு அவர்களின் இறைவன் அவர்களுக்கு கட்டளையிடவுமில்லை. இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டுதான் ஆகவேண்டும் என்று யாரும் எந்த நிலையிலும் கட்டாயப்படுத்தப்பட மாட்டார்கள். விரும்புவோர் ஏற்றுக் கொள்ளலாம், விரும்பாதவர்கள் ஏற்காமல் விட்டு விடலாம்.

“உம் இறைவன் விரும்பியிருந்தால், பூமியிலுள்ள அனைவருமே ஒன்றுபட்டு விசுவாசித்திருப்பார்கள். எனவே மனிதர்கள் யாவருமே விசுவாசிகளாகி விட வேண்டுமென்று அவர்களை நீர் நிர்ப்பந்திக்க முடியுமா? (அல்குர் ஆன் 10:99)

இன்னும் இறைவன் கூறுகின்றான்.

இஸ்லாம் மார்க்கத்தில் நிர்ப்பந்தமே இல்லை. (ஏனென்றால்) வழிகேட்டிலிருந்து (விலகி) நர்வழியடைவது எவ்வாறு என்பது தெளிவாகி விட்டது. ஆகவே எவன் ஷைத்தானை நிராகரித்து விட்டு அல்லாஹ்வை விசுவாசிக்கின்றானோ அவன் நிச்சயமாக அறுபடாத பலமானதோர் கயிற்றைப் பற்றிப் பிடித்துக் கொண்டான். அல்லாஹ் செவியுறுவோனும், அறிவோனுமாக இருக்கின்றான். (அல்குர் ஆன் 2.256)

இப்னு அப்பாஸ்(ரழி) அவர்கள் கூறியதாவது:

மதினாவில் யூதமதத்தை தழுவியிருந்த தன் பிள்ளையை முஸ்லிம் பெற்றோர்கள் நாங்கள் யூதர்களிடம் எங்கள் பிள்ளையை விட்டு வைக்க மாட்டோம் அவர்களை நாங்கள் இஸ்லாத்திற்கு மாற்றியே தீருவோம். என்று கூறும்போது தான் இந்த வசனம் அருளப்பெற்றது.

மேலும் இப்னு அப்பாஸ் (ரழி) கூறியதாவது:

இந்த வசனம் அன்ஸாரிகளில் பனூ சாலிம் பின் அவ்ஃப் எனும் குடும்பத்தை சேர்ந்த ஹுசைனி என்பவர் தொடர்பாக அருளப்பெற்றது. இவர் ஒரு முஸ்லிம். இவருடைய இரண்டு மக்களும் கிறிஸ்தவர்களாக இருந்தனர். எனவே இவர் நபி(ஸல்) அவர்களிடம் “ மக்கள் கிறிஸ்தவ மதத்தில் பிடிவாதமாக இருக்கின்றனர். இஸ்லாத்தில் சேருமாறு நான் அவர்களை கட்டாயப்படுத்தலாமா? எனக் கேட்டார். அப்போது தான் அல்லாஹ் இந்த வசனத்தை அருளினான் என்றார்கள்.

இதுபோன்ற வசனங்களை இஸ்லாம் என்றும் ஏட்டோடு நிறுத்திக் கொள்ளவில்லை. அது என்றைக்குமே தன்னுடைய வார்த்தைகளை வர்ணனைகளாக வர்ணிக்காமல் அதனை வாழ்வியல் நெறியாக ஏற்று வாழ்பவர்களின் வாழ்வோடு பின்னிப்பினைத்துள்ளது. அதற்கு ஓர் உதாரணம் தான் சில வருடங்களுக்கு முன்பு இஸ்லாத்தை தனது வாழ்வியல் நெறியாக ஏற்ற யுவான்னி ரிட்லி அவர்களின் வாழ்வில் நடந்த சம்பவமாகும். : யுவான்னி ரிட்லி தான் இஸ்லாத்தை ஏற்றவுடன் தனது பொறுப்பில் இருக்கும் தான் பெற்றெடுத்த மகளை இஸ்லாத்தை ஏற்குமாறு நிர்பந்திக்கவில்லை. பின்பு அவரின் மகள் இஸ்லாத்தின் ஒப்பற்ற ஒழுங்கு நெறிமுறைகளையும், வனப்பான வாழ்வியல் வழிமுறைகளையும் படித்து பக்குவப்பட்டு இஸ்லாத்தை ஏற்றார். அல்ஹமதுலில்லாஹ்.

தனது மகள் இஸ்லாத்தை வாழ்வியல் நெறியாக ஏற்றதே “தனக்கு கிடைத்த மிகப்பெரும் வெற்றி” என்றார். ஆக தன் பொறுப்பில் இருக்கும் தான் பெற்றெடுத்த பிள்ளைகளாக இருந்த போதிலும் அவர்களை தன்னுடைய மார்க்கத்திற்கு நிர்ப்பந்திக்க கூடாது என்று இஸ்லாம் கூறுகிறது.

ஆக இஸ்லாமியர்களோ இஸ்லாமிய ஆட்சியாளர்களோ என்றைக்கும் யாரையும் கட்டாய மதமாற்றம் செய்ததில்லை. மாறாக தான் ஆட்சி செய்த பகுதியில் வாழும் மக்களோடு இஸ்லாம் பண்பாக நடந்துக் கொண்டது. அவர்களின் ஒழுக்கம், நீதி, நேர்மை ஆகியவற்றைக் கண்டு கவர்ந்து காலப்போக்கில் இஸ்லாத்தில் தன்னை இணைத்திட வேண்டும் அதன் படி தன் வாழ்வை அமைத்திட வேண்டும். என்று மக்கள் விரும்பினர்.

பாசிசத்தை அடிப்படையாகக் கொண்ட இன்றைய ஆட்சியாளரிடம் மதச் சுதந்திரத்தையோ சகிப்புத் தன்மையையோ எதிர்ப்பார்ப்பதற்கில்லை. எனவே இஸ்லாம் இந்தியாவை ஆட்சி செய்தா லொழிய இந்த தேசத்திற்கு விடிவில்லை!

அதற்காக ஓய்வுக்கு ஓய்வு தந்து உழைப்போம். பாசிசத்தின் பிடியிலிருந்து பாரதத்தை காப்போம். இன்ஷா அல்லாஹ்.



# காந்தியை கொலை செய்தது ஏன்?

காந்திஜி அவர்கள் பிறந்த நாள் அக்டோபர் 2. அவரைக் கொலைச் செய்த நாள் ஜனவரி 30.

காந்திஜி பிறந்த நாளுக்குத் தரப்படும் கீர்த்தியும் கித்தாப்பும் காந்தியைக் கொலை செய்த நாளுக்கு தரப்படுவதில்லை. உண் மையைச் சொன்னால் காந்திஜி கொலைச் செய்யப்பட்ட அந்த செய்தி திட்டமிட்டே மறைக்கப்படுகின்றன. காந்தியை கொலை செய்த பாசிஸ்டுகளுக்கு இந்திய அரசியலில் அத்துனை அங்கீகாரம்.

காந்திஜியைப் பற்றி எடுக்கப்பட்ட திரைப்படத்திலும் அவர் கொலைச் செய்யப் பட்டார் என்ற செய்தி மறைக்கப்பட்டது. ஏதோ அவர் தானாகவே இறந்தார் என்பதை போல மக்கள் மன்றத்தில் காட்டிட எல்லா முயற் சிகளும் மேற்கொள்ளப்பட்டன. இதில் காங்கி ரஸ் முதல் அனைத்துக் கட்சிகளும் ஏற்றத் தாழ்வின்றி கட்சி பேதமின்றி ஒன்றுபோலவே நடந்துக் கொள்கின்றன,

ஆமாம் காங்கிரஸ் ஆட்சியின் பொது அரசு செலவில் அள்ளி இறைத்து எடுக்கப்பட்ட எல்லா காட்சிப் படங்களிலும் இதே நிலைதான் கடைபிடிக்கப்பட்டு வருகின்றது. காலப் போக்கில் நிலைமை தலைகீழாக மாறிப் போயிற்று. காந்தியை கொலை செய்த நாதுராம் கோட்சேயும், அவனுடன் இணைந் திருந்த பாசிச பயங்கர பரிவாரத்தின் முன்னோ டிகளும் கதாநாயகர்களாக" தங்களைக் காட்டிடத் தலைப்பட்டு விட்டார்கள்.

ஏன் அவர்கள் நாடாளவும் வந்து விட்டார்கள். சில்லறைப் பதவிகளுக்காகவும், அந்த பதவிகள் தரும் பெரும் பணத்திற் காகவும் அரசியல் கட்சிகள் தனது கொள்கைகளைக் காற்றில் பறக்கவிட்டு விட்டு பாசிசத்தின் காலில் விழும் கேவலமான கோலத்திற்கு இந்தியா வந்து விட்டது.

அதனால்தான் காந்தியைக் கொலை செய்த கோட்சே தூக்கிலிடப்பட்ட நாளில் அந்தக் கோட்சேயின் குடும்பத்திற்கு பொற்கிழி வழங்கும் விழா தங்கு தடையின்றி நடை பெறுகிறது.

இத்தோடு நிற்கவில்லை பாசிசத்தின் பச்சோந்தித் தனம் காந்தியை கொலை செய்வதற்கு ஆக்கமும், ஊக்கமும், பணமும், இன்னுமுள்ள வசதிகளை செய்து வந்த வீர சாவர்க்கரின் உருவச் சிலையை நமது நாடாளுமன்ற வளாகத்தில் நட்டிடும் நரித் தனமும் நடந்தேறி இருக்கின்றது 26.02.2003 அன்று.

இந்த பின்னணியில் தேசத் துரோகிகளைத் தோலுரித்துக் காட்டி மக்களை விழிப்படையச் செய்யும் பொறுப்பு நம்மை சாரும். பாசிசத்திற்கெதிராக நாம் நடத்தி வரும் பெரும் போரில் இது ஒரு பிரிக்க இயலாத பகுதி.

இந்த உண்மையை இன்றைய பாசிஸ்டுகளின் தேசபக்த வேஷத்தை தோலுரித்துக் காட்டும் வகையில் முன்பு நாம் நிறுவி நடத்தி வந்த மனித நீதி பாசறை" சென்னையில் ஒரு பொதுக் கூட்டம் நடத்திற்று. கூட்டம் நடந்த செய்தியை நாம் விடியல் பிப்ரவரி 2003 இதழில் வெளியிட்டிருந்தோம்.

இங்கே காந்தியின் கொலையைப் பற்றிய தகவல்களையும் கிடைத்தவரை இடம் பெறச் செய்துள்ளோம். இந்தத் தகவல்களைப் பட்டி தொட்டிகள் எனத் தொடங்கி பட்டினக் கரை வரை கொண்டு செல்வோம். அதன் மூலம் பாசிசத்தின் தீவிரவாத முகத்தை பாரெல்லாம் தோலுரித்துக் காட்டுவோம். இந்தியாவை பாசிசத்தின் கோரப் பிடியிலிருந்து காப்போம் இன்ஷா அல்லாஹ்.



# காந்தி கொலை பாடநூல்களில் மறைக்கப்பட்ட வரலாறு

இந்திய சுதந்திர வரலாற்றின் கதாநாயகரும், இந்தியர் அனைவரின் உள்ளங்களிலும் இடம் பிடித்தவருமான காந்திஜி அவர்கள்.

ஆவர் பாசிச வெறியர்களால் திட்ட மிடப்பட்டு கொலைச் செய்யப்பட்ட ஜனவரி 30 ஆம் நாளை அனைவரும் நினைவு கூறும் தருணத்தில் பள்ளிக்கூடங்களில் மாணவர்கள் பயிலும் வரலாற்றுப் பாடநூல்களில் அவர் கொலையைப் பற்றி மறைக்கப்பட்ட வர லாற்றையும் நினைவு கூற வேண்டியது நமது கடமை.

இன்று கல்வி பயிலும் இளைய தலை முறை அந்தப் படுகொலையையும் அதன் பின் னணியையும் அறியாமலேயே வளர்ந்துக் கொண்டிருக்கிறது.

கல்வி ஆய்வு மற்றும் பயிற்சிக்கான தேசிய கழகத்தால் (**NCERT**) வடிவமைக் கப்பட்ட 9 ஆம் வகுப்பிற்கான சமூக அறிவியல் பாடத்தில் சமகால இந்தியா" என்ற தலைப்பில் இந்திய சுதந்திர வரலாற்றை குறிப்பிடும் பொது சற்றும் வரலாற்று பின்னணி இல்லாத விடயமான, முஸ்லிம் லீக் இந்திய அரசியலில் மத துவேஷத்தைத் தூண்டியது. முஸ்லிம் லீக்கால் உருவாக்கப் பட்ட இந்து துவேஷம் மோசமான விளைவுகளையும் ஏற்படுத்தியது, இதனால் சாதாரன மக்களும் பாதிக் கப்பட்டனர்." எனவும் காந்தி போன்ற தலை வர்கள் இதனைக் கட்டுப்படுத்த எடுத்த முயற்சி களில் ஓரளவுதான் வெற்றியடைந்தனர்" எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இத்தகைய சூழ்நிலைக்கு மத்தியில் தான் ஆகஸ்ட் 15, 1947 அன்று இந்தியா சுதந்திரம் பெற்றது" எனவும் எழுதப்பட்டுள்ளது.

(மத துவேஷத்தைத் தூண்டியது யார், பிரி வினைக்குக் காரணம் யார் என்ற விடயங்களை தேசப் பிரிவினைக்கு யார் காரணம்?" எனும் நமது நூலில் தெளிவுப்படுத்தப்பட்டுள்ளது. இந்நூல் புத்தம் புதுப் பொலிவுடன் வரும் புத்தக சம்கமத்தில் கிடைக்கும் இன்ஷா அல்லாஹ்)

ஆனால் சுதந்திரத்திற்குப் பிறகு நடந்த காந்தி கொலை பற்றியோ அதன் பின்னணி பற்றியோ ஒரு சிறு வார்த்தைக் கூட வராமல் கவனாமாக எழுதப்பட்டுள்ளது. ஆனால் 5 மற்றும் 6 ஆம் வகுப்பு பாடநூல்களை நோக்கும் பொது காந்தி கொலைப் பற்றி ஒரு நிசப்தம் நிலவுகிறது.

தி இந்து ஆங்கிலம் 04.02.2003

இப்பாடத்திட்டத்தைத் தயாரித்த ஜம்மு பல்கலைக்கழகப் பேராசிரியரும், இந்திய வரலாற்று ஆய்வுக் கழகத்தின் (**ICHR**) உறுப்பினருமான பேரா. ஹரி ஓம் அவர்கள் தான் திட்டமிட்டு காந்தியின் கொலையை மறைக்கவில்லை என்றும், அதனை எழுது வதற்கு நேரமும், நூலில் இடமும் இல்லை என்றும், அதாவது 400 வருட கால வரலாற்றை 64 பக்கத்திற்கு 8 மாதத்திற்குள் எழுத வேண்டியிருந்ததால் இந்தத் தவறு நடந்து விட்டது என விளக்கமளித்துள்ளார்.

தி இந்து ஆங்கிலம் 13.02.2003

நேரமின்மை இடமின்மை காரணமாக காந்தியின் கொலையையும் அதன் பின்னணியும் வரலாற்றில் விடுபட்டு விட்டது என்றால் இந்திய இளைஞர்களின் கல்வித் தரத்தைப் பற்றி துக்கப்படுவதைத் தவிற வேறு வழியில்லை.

தி இந்து ஆங்கிலம் 15.02.2003

சற்றும் வரலாற்று பின்னணியில்லாத விடயங்களை எழுதி வருங்கால இளைஞர்களின் மனதில் பாசிச விவரத்தை ஊட்ட இருந்த நேரமும் இடமும் காந்தியைக் கொன்றவன் ஒரு பாசிஸ்ட் என்பதால் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த காந்தியின் கொலையை முழுமையாக மறைப்பதிலிருந்து கல்வித் துறையில் குறிப்பாக **NCERT** லும் **ICHR** லும் கல்வி ஆதரவாளர்கள் (பாசிஸ் டுகள்) முழுமையாக நுழைந்து விட்டார்கள் என்பதைக் காட்டுகின்றது.

இனியாவது நடுநிலையாளர்களும் கல்வியாளர்களும் ஒருங்கிணைந்து பாசிசத் திற்கு எதிரான விடுதலைப் போரை முழு மூச்சுடன் தொடங்கி, பாசிசத்தை வீழ்த்தி மனிதம் நிலைக்க உறுதி பூன வேண்டும்.



# காந்தியைக் கொலை செய்தவர்கள்!

ஆகஸ்ட் 15, 1947 - இந்தியா விடுதலை அடைந்த நாள்.

மராட்டிய மாநிலத்தின் பாசிசப் பாசறை சித்பவன் என்னும் இடத்தைச் சார்ந்த நாதுராம் கோட்சே நாடு விடுதலையடைந்த நாளன்று தேசியக் கொடிக்கு வணக்கம் செலுத்தச் செல்லவில்லை. இந்தக் கொடி RSS அமைப் பினுடையது என்கின்றார்கள். லாரி காலிங்ஸ், டேமிங் லெப்பேரி

(Freedom at Midnight P. 451)

மாறாக அவன் 'சுவஸ்திகா' என்ற மனித இனத்தின் கொலை வெறிச் சின்னம் பொறித்த ஒரு மங்கள மஞ்சள் கொடிக்கு வணக்கம் செலுத்தி விட்டு திரும்பினான். இந்த சுவஸ்திகா ஹிட்லரின் சின்னம். சுவஸ்திகா என்பது குஜராத் போல படுகொலையைச் செய்பவர்களின் இடுகுறச் சின்னம்.

இந்தியப் பெருங்குடி மக்களெல்லாம் வெள்ளையன் ஆதிகத்தை ஒழித்த மகிழ்ச்சியில் திளைத்துக் கொண்டிருக்கும் போது இவனுக்கு மட்டும் ஏன் இப்படியொரு விபரீத புத்தி?

ஆம், அவனை வளர்த்தவர்கள் அப்படி! அவன் பாடம் பயின்றது ஃபாசிஸ்டுகளின் பள்ளிக்கூடங்களில், கொலைகளை மைய மாகக் கொண்டு கதைகளைப் படைப்பவன் ஆங்கில எழுத்தாளன் ஏர்ள் ஸ்டேன்லி கார்ட்னர் (Earl Stanly Gardner) அவருடைய கொலை கதைகள் 'பெரிமேசன்' என்ற பெயரில் வெளிவரும் இன்றும் வெளிவந்து கொண்டி ருக்கின்றன.

இந்தக் கொலைகளைப் படிப்பதில் அலாதியான ஆர்வம் அவனுக்கு! கோயில்களுக்குப் போவதில்லை. ஆர்.எஸ். எஸ்.ஸின் தலைமையகம்தான் இவனுக்கு ஆலயம்.

(Freedom at Midnight P. 458)

ஆமாம். அவன் சார்ந்த ஃபாசிச இயக்கம் அவனுக்கு அதைப் பாடமாக படித்துக் கொடுத்தது. அவன் சிக்கன மானவன். ஆனாலும் சினிமாவுக்குப் போவான். பூனாவின் Capital Theatre என்ற திரையரங்கில் ஓடும் வன்முறை வெறியாட்டத் திரைப்படங் களை இரவெல்லாம் கண் விழித்துப் பார்ப்பான். அவன் திருமணம் செய்து கொள்ளவில்லை. தன் இச்சைகளை நிறைவேற்றிட பாதை தவறி யதுமில்லை. வாழ்க்கையின் கடைசி வரை அவன் இதில் உறுதியாக இருந்தான்.

அவனுக்கொரு குரு. அவர் பெயர் தான் வீரசாவர்க்கர். இவர் ஒரு கொடுஞ் செயலைச் செய்து அரசியலில் பெயர் பெற்றார். ஆங்கிலேய அதிகாரி ஒருவரைத் தான் நடத்தி வந்த இரகசிய கொலைக் கும்பலைக் கொண்டு கொலை செயதார்.பின் சிக்கிக்கொண்டார். ஆயுள் தண்டனை வழங்கப் பட்டு அந்தமான் ஜெயிலுக்கு அனுப்பப்பட்டார். ஆங் கிலேயர்களுக்கு ஆயுள் பரியந்தமும் அடிமைப் பட்டுக் கிடப்பேன் என மன்னிப்புக் கடிதம் எழுதித் தந்தார். அங்குள்ள சிறை அதி காரிகளுக்கு எழுதிய கடிதத்தில் 'என்னை வெளியே விட்டால் நான் என்னுடனிருக்கும் இளைஞர்களுடன் ஆங்கிலேயர்களின் அடி வருடி வாழ்வேன்' என்றார்.

இவர் இப்படி மன்னிப்பு கடிதம் எழுதித் தந்ததை அறியாத இளைஞர்கள் பலர் இவரை ஒரு கதாநாயகராகக் கருதி இவருக்குப் பின்னால் அணிவகுத்தார்கள். அப்படி அணி வகுத்தவர்களில் ஒருவர்தான் நாதுராம் கோட்சே. இந்தக் கோட்சேயைக் கொண்டுதான் கொலை செய்தனர் காந்திஜியை.

வீரசாவர்க்கர் மே 15, 1942ல் தொடங்கிய "இந்து ராஷ்ட்ரா தள்" என்ற அமைப் பில் கோட்சே உறுப்பினரானான். அத்தோடு வீரசாவர்க்கரை அந்த அமைப்பின் ஏகபோக 'சர்வாதிகாரி' என ஏற்று, உறுதி மொழியும் வழங்கினான்.




நாதுூரம் கோட்சேக்கு முதல் ஆதரவும் அரவணைப்பும் வீரசாவர்க்கர் என்ற ∴பாசிச வெறியரிடமிருந்துதான் கிடைத்தது என்று வர லாற்றாசிரியர்கள் கூறுவது இதனால்தான்.

இவர் 1944 ஜனவரியில் கோட்சேயை அழைத்து தான் நடத்தி வந்த அங்ராணி என்ற பத்திரிக்கையைத் தொடர்ந்து நடத்தும்படி ஒப்படைத்தார். பதினைந்தாயிரம் ரூபாயும் கொடுத்தார்.

ஆனால் அதே பெயரில் அந்தப் பத்திரிகையை நடத்த இயலவில்லை. ஏனெனில் அப்போது அரசு அதைத் தடை செய் திருந்தது. ஆதலால் பத்திரிகைக்கு 'இந்து ராஷ்ட்ரா' எனப் பெயர் மாற்றம் செய்தனர்.

இவற்றால் ஊட்டம் பெற்று வளர்ந்தான் நாதுூரம் கோட்சே. அது முதல் அவனுக்கு எப்போது பணம் வேண்டும் என்றாலும் தங்கு தடையின்றி கிடைத்து வந்தது. காந்திஜியை அவன் கொலை செய்யும் வரை இந்தப் பணம் எந்தக் குறையுமின்றி கிடைத்துக் கொண்டே இருந்தது.

இந்தப் பணத்தின் உதவியே அவனுக்கோர் நண்பனும் கிடைத்தான். அந்த நண்பனின் பெயர்தான் நாராயண் அப்தி.

நாராயண் அப்தி வாழ்வை ரசிப்பவன். மனைவியின் உடல் நிலை சரியில்லை. ஆதலால் அவளை இம்சிக்க விரும்பவில்லை அவன்.

அவன் தன் தேவைகளை வெளியே நிறைவேற்றிக் கொண்டு கோட்சேயின் இலட்சி யத்திற்கு துணை நிற்பது, வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் மது அருந்தி மகிழ்வது எனத் தன் வாழ்க்கையை உல்லா சமாக ஓட்டினான்.

ஒய்யாரமாகவும், உல்லாசமாகவும் அவன் தன் வாழ்க்கையை ஓட்டினாலும் ∴பாசிசத்தின் அணியில் அவனும் ஓர் அங்கம்.

இந்து ராஷ்ட்ரா என்ற பத்திரிக்கை யையும் பணத்தையும் வீர சாவர்க்கர் கோட் சேயிடம் மட்டும் ஒப்படைக்கவில்லை. அவர் நாராயணன் அப்தி என்பவனிடமும் சேர்த்து தான் ஒப்படைத்தார்.

கோட்சே அப்தி இருவருக்கும் ஒரு நண்பன். அவன் பெயர்தான் டிகம்பர் பாட்ஜ். இவனும் இதே ∴பாசிசப் பாசறையில் பயிற்று விக்கப்பட்டவன்தான்.

வெடிகுண்டுகள், துப்பாக்கி, இன்னும் இது போன்ற ஆயுதங்கள் என்றால் இவனுக்கு மிகவும் பிடிக்கும். தனது புத்தகக் கடைக்குப் பின்னால் இந்த துப்பாக்கி, வெடிபொருள் ஆகியவற்றை விற்பனை செய்தான். கோட்சேயும் அவனோடு சேர்ந்த ∴பாசிச இயக்கத்தவர்களும் இங்கேதான் தீவிரவாத ஆயுதங்களோடு தங்களை அறிமுகப்படுத்திக் கொள்வார்கள்.

விடுதலைப்போரின் போது இவர்கள் ஒரு முறை தங்கள் பயிற்சிகளை ஆங்கி லேயர்களுக்கெதிராகப் பயன்படுத்தியதாக வரலாறு இல்லை.

ஆனால் இந்தியர்களுக்கெதிராக இந்தப் பயங்கரவாத ஆயுதங்களைப் பலமுறை பயன்படுத்தி விட்டார்கள். 1947 ஜுன் மாதம் மட்டும் ரூ.3000க்கு ஆயுதங்கள் வாங்கி விட்டார்கள் பாட்ஜிடமிருந்தது.

இந்தியாவில் இந்தியர்களை முதன் முதலில் குண்டெறிந்து கொலை செய்தவர்கள் இவர்கள்தாம். அதுவும் காந்திஜியின் பிரார்த்தனைக் கூட்டத்திலேயே எறிந்தார்கள். இந்தியாவில் தீவிரவாதத்தின் முன்னோடி இவர்களேயாவார்கள்.

இவர்களின் கொலை வெறித்தாக்குதல் நாடு விடுதலையடைவதற்கு முன்னரே தொடங்கி விட்டது.

1942ல் இவர்களின் அணியைச் சார்ந்த மதன்லால் பேஷ்வா முஸ்லீம்கள் நடத்திய ஊர்வலம் ஒன்றில் வெடிகுண்டு ஒன்றை வீசினான். தொடர்ந்து பம்பாயில் வைத்து இந்திய விடுதலைப் போர் வீரர் முஹம்மத் அலி ஜின்னாவைக் கொலை செய்ய முயன் றார்கள். இதே வெடிகுண்டுகளைப் பயன் படுத்தி.

டெல்லியில் நடந்த முஸ்லீம் லீக் கூட்டம் ஒன்றில் குண்டெறிந்திடவும், அதில் முஹம்மது அலீ ஜின்னாவைக் கொலை

செய்ய சென்றார்கள். ஆனால் இயலவில்லை.

பின்னர் அவரை லாகூருக்கு (இது அப்போது பாகிஸ்தானில் இருக்கின்றது. இங்கே தான் அத்வானி பிறந்தார்.) பின் தொடர்ந்து சென்று கொல்ல முயற்சி செய்தார்கள் முடியவில்லை.

இருந்தாலும் அவர்கள் தங்கள் முயற்சியை நிறுத்தவில்லை. முஹம்மது அலீ ஜின்னா அவர்கள் ஜெனிவாவுக்கு போகும் போது கொலை செய்ய நாராயண் அப்தி ஒரு குழுவை சுவிட்சர்லாந்து அனுப்பி வைத்தார்.

அங்கேயும் வெடிகுண்டுகளுடனும் துப்பாக்கிகளுடனும் சென்றார்கள். ஆனால் அவர்களின் திட்டம் நிறைவேறவில்லை.

இவர்களது தீவிரவாத கொலைப் பட்டியலில் இடம் பெற்ற இன்னொரு நபர் ஐதரபாத் நிஜாம். இவரைக் கொலை செய்யவும், பல முறை ஹைதராபாத் பயணம் செய்தார்கள். இயலவில்லை, பின்னர் ஹைதராபாத் நிஜாம் அவர்களை எதிர்த்து ஒரு கொரில்லா போருக்கான ஏற்பாடுகளைச் செய்தார்கள். அதுவும் ஈடேறவில்லை.

காந்திஜியைக் கொலை செய்ய வேண்டும் என இவர்கள் போட்ட திட்டத்தில் பண்டித நேருவும், சுக்ரவர்த்தி அவர்களும் இருந்தார்கள்.

கோட்சேயும், அப்தியும் காந்தியைக் கொலை செய்ய பயங்கர வெடிகுண்டுகளுடன் டெல்லி புறப்பட்டபோது, தங்களுக்கு உதவி செய்ய பாட்ஜ்-ஐ அழைத்தபோதுதான், இவர்களின் திட்டம் காந்தியை மட்டும் கொலை செய்வதல்ல. மாறாக நேருவும், சுக்ரவர்த்தியையும் இணைத்தே கொலை செய்வது என்ற உண்மை வெளிப்பட்டது. அப்தி பாட்ஜ்-ஜ இப்படி அழைத்தார்.

> **"Come to Delhi with us, Savarkar Wanted Gandhi, Nehru and Suhara Wardy finished off" (Freedom at Midnight; new Edition 1997 page 486 )**

இந்த ஃபாசிஸ்டுகள் தங்களுடைய வழியில் யார் வந்தாலும் விடமாட்டார்கள் என்பதை நாம் இதிலிருந்து நன்றாக தெரிந்து கொள்ளலாம்.

சாவர்க்கர்தான் ஃபாசித்தை இந்தியாவுக்கு இறக்குமதி செய்தவர். காந்திஜியைக் கொலை செய்ய அனுப்பட்ட குழுவில் திட்டம் போட்டுத் தந்தவர், அனைத்து உதவிகளையும் செய்தவர் இவர்தான்.

பிப்ரவரி 26ம் நாள் காந்தி கொலையோடு நேரடியாக தொடர்புடைய சாவர்க்கரின் சிலையை நாடாளுமன்ற வளாகத்தில் திறந்திட வேண்டும் என்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டவுடன் நாட்டு விடுதலைக்



காகப் போராடி அந்தமான் சிறையில் இருந்தவரும், சிறந்த வரலாற்று வல்லுநரான விஷ்வனாத் மாத்துார் அவர்களும் மற்றோர் வரலாற்று வல்லுநரான பிபான் சந்தரா அவர்களும் டெல்லியில் ஒரு பத்திரிக்கையாளர்கள் சந்திப்பிற்கு ஏற்பாடு செய்தார்கள்.

பல உண்மைகளை வெளிச்சத்திற்குக் கொண்டு வந்தார்கள். இந்தத் தகவல்கள் 'தி ஹிந்து' 26.02.2003 இதழில் வெளிவந்துள்ளன.

அவ்வாறு வெளிவந்த உண்மைகளுள் ஒன்று.

சாவர்க்கர் காந்தியைக் கொலை செய்த வழக்கில் தண்டிக்கப்படவில்லை. காரணம், இந்தக் கொலை வழக்கோடு தொடர்புடைய டிகம்பர் பாட்ஜ், சாவர்க்கருக்கும் இதில் பங்குண்டு என்பதை மிகவும் தெளிவாகவே ஒத்துக் கொண்டார். எனினும் அப்போதிருந்த சாட்சித் தெளிவு விதிகளின்படி வீர சாவர்க்கரைத் தண்டிக்க சட்டம் இடந்தரவில்லை.

ஆனால் பின்னர் காந்திஜியின் கொலையைப் பற்றி முழு அளவு தகவல்களையும் ஒன்றிணைக்கவும், முழு அளவில் விசாரிக்கவும் விசாரணைக் குழு ஒன்றுப் போடப்பட்டது. அந்த விசாரணைக் குழு 1969ம் ஆண்டு தனது அறிக்கையைச் சமர்பித்தது. அந்த அறிக்கையில் அது சாவர்க்கரை எந்தச் சந்தேகதிற்கும் இடமின்றி குற்றவாளியாகக் காட்டிற்று.

இந்த வழக்கிலிருந்தும் தன்னை விடுவித்துக் கொள்ள பழைய பாணியில் ஒரு வாக்குறுதியையும் வழங்கினார் வீர(?)

சாவர்க்கர், அவர் வழங்கிய வாக்குறுதியில் இப்படிக் குறிப்பிட்டார்.

“எல்லாவிதமான சந்தேகத்தையும் ஒழித்திடுவதற்கு, நான் ஓர் உறுதிமொழியைத் தந்திட தயாராக இருக்கின்றேன். நான் அரசாங்கம் விதிக்கும் ஒரு காலம் வரை வகுப்புவாத நடவடிக்கைகளிலோ அரசியல் நடவடிக்கைகளிலோ ஈடுபட மாட்டேன். ஆனால் நான் இந்த நிபந்தனையின் கீழ் விடுவிக்கப்பட வேண்டும்.”

இப்படி காந்தி கொலையில் நேரடியான தொடர்புயைடவர் என்பதை அப்போதைய உள் துறை அமைச்சர், துணை பிரதமர் சர்தார் வல்லபாய் பட்டேல் அவர்கள் பிரதமர் நேருவுக்கு எழுதிய கடிதத்தில் இப்படி குறிப்பிட்டார். சாவர்க்கர் அவர்களுடைய நேரடி கட்டுப்பாட்டின் கீழுள்ள இந்து மஹாசபையின் தீவிரவாத பிரிவு ஒன்றுதான் (காந்தியைக் கொலை செய்யும்) சதியைத் தீட்டியது. அது நிறைவேறும் வரை கண்காணித்தது.

**(The Hindu 26.02.2003 Quoted from Sardar Vallapai Pate's letter to Nehru Dt. Feb. 2,1948)**

இந்தக் கொலைக் கும்பலின் அடுத்தப் பங்காளி, அதே சாவர்ககரின் சிஷ்யன் கோபால் கோட்சே, இவன் நாதுராம் கோட்சேயின் சகோதரன், இந்தியத் திருநாட்டை நாசக் காடாக ஆக்கிட இந்தியாவிலேயே ஓர் இடம் உண்மையைச் சொன்னால் ஒரே இடம் சித்பவன். அங்கே பிறந்தவன் தான் இவன்.

திருமணம் செய்து கொண்டவன். மனைவியோடு மங்களகரமாகக் குடும்பம் நடத்திக் கொண்டிருப்பவன்.

இவனிடம் பாராட்டதக்க சில சிறந்த குணங்கள். காந்தியைக் கொலை செய்யப் போகின்றோம் என்பதை எந்த ஒளிவும் மறைவுமின்றி சொன்னவன். தன் மனைவியிடமே அதனைச் சொல்லி தன் மனைவியையும் அதற்காகத் தயார் செய்தவன்.

எந்த அளவுக்கென்றால் தன் மனைவியிடம் வழி சொல்லி விடை பெற்றும் சென்றான். ஆயுள் தண்டனைக்குப் பின் தானும் தன் தம்பியும் ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தைச் சார்ந்தவர்கள் என்பதையும் ஒத்துக் கொண்டான். அதில் பெருமைப்படுவதாகவும் கூறினான்.

கோபால் கோட்சேயின் மனைவி தன் கணவன் மகாத்மா காந்தியைக் கொலை செய்ய டெல்லி நோக்கிப் போகும் போது புகை வண்டி நிலையம் வரை வந்து வழியனுப்பி வைத்தாள். அத்தோடு “என்னைப் பற்றிக் கவலைப்படாதீர்கள். நான் என் வாழக்கையை எப்படியேனும் நடத்திக் கொள்வேன்” என நெஞ்சுரம் காட்டி வழியனுப்பி வைத்தாள்.



அந்தப் புகைவண்டி நிலையத்தில் எல்லோரும் போய் வாருங்கள் என வழியனுப்பி வைத்தபோது, கோபால் கோட்சேயின் மனைவி மட்டும்தான் 'போங்கள்' என வழியனுப்பி வைத்தாள். ஏனெனில் அவன் உயிரோடு வருவான் என எதிர்பார்க்கவில்லை.

ஆண்டாண்டு காலமாய் இந்தியாவை ஆண்டு, இந்தியாவைச் சுரண்டி, இந்திய குடிமக்களை அடிமைகளாகவும், புழுக்களாகவும், புன்மைத் தேரைகளாகவும் நடத்திய ஆங்கிலேயர்களை அழித்து வா எனக் கோட்சேக்களை அனுப்பி இருந்தால் நாமும் பாராட்டி இருக்கலாம் இந்த நங்கை நல்லாளை.

ஆனால் விடுதலைப் போரின் கடைசி கதாநாயகனைக் கொலை செய்து வர இப்படி ஒரு கொலைக் கோலம் பூண்ட அந்த நங்கையை ஃபாசிசதத்தின் கோரப்பிடிக்குள் சிக்கிக் கொண்ட பெண்மணி என்றுதான் சொல்ல வேண்டும்.

இதே கொலைகார அணியில் ஒரு ஹோட்டல் உரிமையாளர். அவரது பெயர் விஷ்ணுகார்காரி இவருடைய அறையை எப்போது சோதனை போட்டாலும் விதவிதமான துப்பாக்கிகள், கைக்குண்டுகள்தாம் காணக் கிடைக்கும் இவர் ஹைதராபாத் நிஜாமுக்கு எதிராக ஒரு பெரும்போரை நடத்த எத்தனித்து தோற்றுப் போனவர்.

அடுத்தவர் மதன்லால் பேஷ்வா இந்த மதன்லால் பேஷ்வாவும், கார்கரியும் வித்தியாசமான ஃபாசிஸ்டுகள். இவர்கள் பணம் தேவைப்படும் போதெல்லாம் பம்பாய், பூனா போன்ற பகுதிகளிலுள்ள முஸ்லீம் வியாபாரிகளுக்கு வரி விதிப்பார்களாம். இவர்கள்



விதிக்கும் வரியைச் செலுத்தத் தவறினால் கடைகளைக் கொளுத்தி விடுவார்களாம். இப்படி வழி வகுத்துச் செயல்பட்டவர்கள்.

இப்படி இந்த பரிவாரம் காந்தி ஜியையும், வாய்ப்புக் கிடைத்தால் நேரு, சுக்ரவார்த்தி ஆகியோரை கொலை செய்து வர மராட்டிய மாநிலத்திலிருந்து டெல்லியை நோக்கி தங்கள் பயணத்தை மேற்கொண டார்கள்.

நாதுாரம் கோட்சேவும் நாராயண் அப்தியும் டெல்லிக்குப் புறப்படும் முன் ஹோட்டல் கிரீன் ஹவுஸ் என்ற தங்கும் விடுதியில் இரண்டு அறைகளை தங்களுக் கென போட்டுக் கொண்டார்கள். அப்தி அன்றிரவு ஓர் அழகிரிக்கு ஏற்பாடு செய்து கொண்டான்.

விமான நிலையம் சென்று இரண்டு பயணச் சீட்டுகளைப் பெற்றுக் கொண்டான். ஒரு பயணச்சீட்டின் விலை ரூ. 308, இரண்டு பயணச் சீட்டுகளை அவன் வாங்கியபோது பயணச் சீட்டு விற்பவர் திரும்பி வர டிக்கட் வேண்டுமா? என்றார். வேண்டாம். நாங்கள் திரும்பிவருவதாக இல்லை' எனப் பதில் சொல்லி திரும்பினான் அப்தி.

பயணச் சீட்டு ஜனவரி 17, 1948 பம்பாய் - டெல்லி டிசி3 விமானத்தில் விமானம் பிற்பகல் புறப்படும். பயணச் சீட்டு 15.01.1948 அன்று காலை மணி 7.20க்கு வாங்கப்பட்டது. பயணச் சீட்டு அவர்களின் பெயர்களில் வாங்கப் படவில்லை. மாறாக அவை டி.என். கர்மார்கர் என்ற பெயரிலும், மராத்தி என்ற பெயரிலும் வாங்கப்பட்டன.

மதன்லால் ஏனையோர் கார்காரி பேஷ்வா, கோபால் கோட்சே, டிகம்பர் பாட்ஜ் ஆகியோர் ஒரு நாள் விட்டு ஒரு நாள் ரயிலில் டெல்லியை நோக்கி பயணம் செய்ய திட்டம் போட்டுக் கொண்டார்கள்.

பயணத்தைத் தொடங்கும் முன் தனது பெயரிலிருந்த இரண்டு இன்ஷூரன்ஸ்களில் ஒன்றை அண்ணனின் மனைவியின் பெயரிலும், பிறிதொன்றை தன் நண்பனான நாராயண் அப்தியின் பெயரிலும் மாற்றி விட்டான் கோட்சே.

ஜனவரி 17, 1948 அன்று அனைவரும் டெல்லியை, அதாவது கொலைப் பட்டணத்தைச் சென்றடையும் வகையில் பயணத்தை அமைத்துக் கொண்டார்கள். தங்கள் கொலைத் திட்டத்துடன் அதே ரயிலில் இவர்களை அன்று வரை கண்காணித்துக் கொண்டிருந்த உளவுத்துறையினரும் பயணம் செய்தனர்.

உளவுத் துறையின் கண்களைக் கடந்து அவர்கள் தாங்கள் சேகரித்த ஆயுதங்களை எடுத்துச் சென்று விட்டார்கள். அனைத்தையும் அழகுறு கண்காணித்துக் கொண்டிருந்த வீரசாவர்க்கர் 'செல்லுங்கள்..... வெல்லுங்கள்' என வழியனுப்பி வைத்தார்.


**மால்கம் - எக்ஸ்**




**விலை : ரூ. 80/-**

# காந்தியை கொலை செய்த செயல்முறை!



20ம் நூற்றாண்டின் மிகப்பெரிய படுகொலை என்று காந்தியாரின் கொலையை வர்ணிப்பார்கள் வரலாற்றாசிரியர்கள்.

காந்திஜியின் படுகொலைக்கு இந்த நூற்றாண்டின் கொலை **(The Crime of the Century)** என்று பெயர்.

ஜனவரி 17, 1948 அன்று காந்திஜியைக் கொலை செய்ய விரும்பியவர்கள் டெல்லி வந்து சேர்ந்து விட்டார்கள். பயணத்திற்குப் பஞ்சமில்லை. ஆதலால் வசதியான ஹோட்டல் ஒன்றில் தங்கினார்கள்.

தங்கியிலிருந்து காந்திஜி அவர்கள் பிரார்த்தனை நடத்தும் பிர்லா இல்லம் சென்று ஒத்திகை பார்க்கப் புறப்பட்டனர். பெரிய பாதுகாப்பு வளையங்களுக்குள் வாழ்ந்து கொண்டிருப்பார் காந்திஜி என்று அவர்கள் எதிர்ப்பார்த்தார்கள். அப்படி ஒன்றும் இல்லை.

காந்திஜி குடியிருந்த பிர்லா மாளிகையின் பின் வாயிலும், முன் வாயிலும் திறந்தே கிடந்தன. தங்களை வரவேற்காத குறையாக அது திறந்து கிடந்தது அவர்களையே ஆச்சரியத்தில் ஆழ்த்திற்று, காந்திஜி அமர்ந்து பிரார்த்தனை நடத்தும் இடத்திற்குப் பின்னால் பிர்லா மாளிகை. அதில் பல அறைகள், அந்த அறைகளில் வருவோர் போவோரைக் கேட்க ஆளில்லை. போக முடியாத அறை, நுழைய முடியாத இடம் என்று ஒன்றும் அங்கில்லை.

ஆகவே காந்திஜி பிரார்த்தனை நடத்தும் இடத்திற்கு நேர் பின்னால் இருந்து மதன்லால் பேஷ்வா ஒரு குண்டை எறிய வேண்டும். கோட்சே தனது துப்பாக்கியால் சுட வேண்டும் எனப் பேசி முடிவு செய்து கொண்டார்கள். யார் யார் எந்தெந்த அறையில் இருக்க வேண்டும் என்பதையும் முடிவு செய்து கொண்டார்கள்.

பின்னர், மாலையில் பிரார்த்தனை நடப்பதையும் எப்படி காந்திஜியை நேருக்கு நேர் சுட வேண்டும் என்பதையும் ஒத்திகை பார்த்துக் கொள்ள திட்டமிட்டார்கள்.

காலையில் பிர்லா மாளிகையின் பின்னால் உள்ள ஒத்திகை முடிந்தது என்றால் மாலையில் பிரார்த்தனைக் கூட்டத்தின் ஒத்திகை தொடங்கிற்று.

எதிர்பாரத விதமாக காந்தியார் தன்னுடைய உண்ணாவிரதத்தை முடித்திருந்தார். அவரது கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டுவிட்டன.

இந்த உண்ணாவிரதத்தை முடித்து வைக்க வந்த ஜவஹர்லால் நேரு அவர்களும், மௌலானா அபுல்கலாம் ஆஸாத் அவர்களும், வல்லபாய் பட்டேல் அவர்களும் உரையாற்றினார்கள்.

நேரு அவர்கள் உரையாற்றும் பொழுது காந்திஜிதான் என்னுடைய சிற்பி என்றும், நான் ஆசிய கண்டத்தின் எதிர்காலம் குறித்தே ஒரு திட்டம் வைத்திருக்கின்றேன் என்றும் பேசி விட்டார்.

உடனே பிரார்த்தனைக் கூட்டத்தில் கோட்சேவிற்குப் பக்கத்தில் நின்ற நாராயண் அப்தி 'இல்லை' என்று உரக்க கத்தி விட்டான்.

அங்கே நின்ற காவலர்கள் அவனைப் பிடித்துச் சென்று விட்டார்கள்.

மொத்த கதையும் திட்டமும் உழைப்பும் கெட்டுப் போய் விட்டது. என்றே நினைத்தான் கோட்சே. ஆனால் நாரயண் அப்தியை அழைத்துச் சென்ற காவலர்கள் அவனை எந்த விசாரணையுமின்றி பிரார்த்தனைக் கூட்டம் கலைந்த பின் விட்டு விட்டார்கள். அவர்கள் அவனது பெயரைக் கூட கேட்கவில்லை.

தப்பித்தோம், நம்மோடு நமது திட்டமும் தப்பித்தது என்றே எண்ணினார்கள் அந்தச் சதிகாரர்கள்.

பின்னர் தங்கள் ஒத்திகையை அறையில் நடத்தினார்கள். மதன்லால் ஒரு குண்டை எடுத்துக் கொண்டு போய் ஹோட்டலில் உள்ள குளியலறையில் உடைத்துப் பார்த்தான். வெடித்தது, சப்தமும், புகையும்

வந்தது. உடனே அனைவரும் சிகரெட் பற்ற வைத்தனா். சிகரெட் புகையால் வெடிகுண்டுப் புரளியைச் சமாளிக்கத் திட்டம் போட்டார்கள்.

அந்தச் சபத்த்தை என்னவென்று கேட்பாரும் அந்த ஹோட்டலில் இல்லை. புகையைப் பற்றிக் கவலைப்படுபவரும் அங்கு இல்லை.

குண்டு வெடித்தது. வேண்டிய புகையைக் கக்கியது. ஆனால் துப்பாக்கி வெடிக்கவில்லை. குண்டும் வெளியே வர வில்லை. குண்டு வெடிப்பது புகையைக் கிளப் பதான். ஆனால் துப்பாக்கிதான் காந்திஜியைக் கொலை செய்ய வேண்டும் என்ன செய்வது? கோபால் கோட்சே வித்தியாசமானதொரு துப்பாக்கியைத் தந்தான். அது தன் வேலையைச் செய்யும் போல் இருந்தது.

ஆக ஜனவரி 20, 1948 அன்று தங்கள் திட்டத்தை தாங்கள் பார்த்த ஒத்திகையின்படி நிறைவேற்றிட வந்தார்கள். பிரார்த்தனை நேரம் வந்தது. பிர்லா மாளிகையின் பின்புறம் இருந்து மதன்லால் பேஷ்வா குண்டை எறிந்தான். ஆனால் எதிர்பார்த்த நேரத்திற்கு முன்னால் எறிந்து விட்டான். புகை மண்டலம் கிளம்பியது. ஆனால் அது பிரார்த்தனைக் கூட்டத்தை மறைக்கவில்லை. அதனால் கோட்சே சுடவில்லை.

குண்டு சப்தம் கேட்டதும், பிர்லா மாளிகையின் பின்னாலிருந்த காவலர்கள் உஷாரானர்கள். மதன்லால் பேஷ்வா தன் கையிலிரந்த குண்டுகளோடு பிர்லா மாளிகையின் பின்னாலிருந்து ஓட முற்பட்டான். பெண்ணொருத்தி அவனைப் பார்த்து, இவன் தான் இவன்தான் எனக் கத்தினாள். அவன் மாட்டிக் கொண்டான்.



(c) Blogspot

அவன் கொடுத்த தகவல்களின் அடிப்படையில் கொலைக்கார கும்பல் ஒன்று அங்கு உண்டு என்பது மட்டும் நிரூபணமானது.

ஓரளவுக்கு ஆட்களையும் தெரிந்து கொண்டார்கள். ஆமை வேகத்தில் அசைந்த அந்த விசாரணையில் வந்திருப்பவர்கள் வீரசாவர்கரின் வாரிசுகள், இந்து ராஷ்ட்ரா என்ற பத்திரிக்கையில் உள்ளவர்கள் என்பதை மட்டும் நன்றாகத் தெரிந்துக் கொண்டார்கள். எனினும் யாரையும் கைது செய்யவில்லை.

மதன்லால் பேஷ்வா காவல்துறை யிடம் சிக்கிக் கொண்டாலும் ஏனையோர் மிகவும் சாதுர்யமாகத் தப்பித்துக் கொண் டார்கள். ஏற்கனவே அவர்கள் ஹோட்டலில் பெயர்களை மாற்றிக் கொடுத்திருந்தார்கள்.

பின்னர் அங்கிருந்தும் தப்பித்துக் கொண்டார்கள். சில நாட்கள் நாடு முழுவதும் சுற்றி விட்டு குவாலியர் வந்தார்கள். அங்கு ஒரு தானியங்கி துப்பாக்கியை சம்பாதித்தார்கள். பதுங்கி, பதுங்கி டெல்லியிலேயே அதைக் கொண்டும் ஒத்திகை பார்த்தார்கள்.

அதுவரைக்கும் காவல் துறையால் அவர்களைக் கைது செய்ய இயலவில்லை.

இதனால் கோட்சே இப்படிச் சொல்லிக் கொண்டு அலைந்தானாம். "போலிஸ் நம்மைப் பிடிப்பதற்குள்ளால் நாம் காந்தியைப் பிடித்து விட வேண்டும்."

ஜனவரி 30, 1948 மாலை ஐந்து மணிக் கெல்லாம் பிர்லா மாளிகைக்கு வந்து விட்டார் கள் கோபால் கோட்சே, நாதுாரம் கேட்சே, மற்றும் நாராயண் அப்தி ஆகியோர்.

அன்று காந்திஜி அவர்கள் தங்கள் பிரார்த்தனைக் கூட்டத்திற்கு காலதாமதமாக வந்தார். ஏனெனில் நேருவின் அமைச்சரவை யிலிருந்து வல்லபாய் பட்டேல் இராஜினமா செய்திருந்தார். நேருவையும், பட்டேலையும் சமதானப்படுத்திக் கொண்டிருந்தார் காந்திஜி. அதனால் பிரார்தனைக்குக் காலதாமதமாகி விட்டது.

அவர் பிர்லா மாளிகையின் தாழ்வாரத்தில் வந்து கொண்டிருக்கும் போது 'பாபுஜி' என்றொரு குரல், குரல் வந்த திசையில் எல்லோரும் பார்த்தார்கள். ஒருவர் காந்திஜியின் காலில் விழ வருவதைப் போல் ஓடி வந்தார்.

வேண்டாம் எனச் சொல்லிட காந்தி ஜியின் ஊன்றுகோலாய் வந்த பெண்மணி முயற்சி செய்தாள். வந்தவன் காலில் விழ வில்லை. குனிந்து எடுத்த துப்பாக்கியால் குறி தவறாமல் காந்திஜியின் மார்பை நோக்கி சுட்டுக் கொண்டேயிருந்தான்.

காந்தி சாய்ந்தார். ஜனவரி 30, 1948

மாலை மணி 5.17க்கு அவர் இந்த உலகைப் பிரிகின்றார்.

விரைந்தார் மவுண்ட்பேட்டன் பிர்லா மாளிகைக்கு, சுட்டது யார் எனக் கேட்டார். முந்திக் கொண்டு ஒருவன் ஒரு முஸ்லீம் என்றான்.

“முட்டாளே சுட்டவன் ஒரு ஹிந்து அல்லவா” என்றார் மவுண்ட்பேட்டன்.

அத்தோடு வானொலிக்கு இவர்கள் இந்தப் பொய்யைச் சொல்லி நாடு முழுவதும் முஸ்லீம்களைக் கொலை செய்ய முனைந்து விடக்கூடாது எனச் சொல்லி வானொலி நிகழ்ச்சிகளை அப்படியே நடக்கச் செய்தார்.

அரைமணி நேரம் கழித்து இப்படிச் செய்தியை எழுதித் தந்து சொல்லச் சொன்னார் மவுண்ட்பேட்டன் அவர்கள்.

“காந்திஜி அவர்கள் மாலை 5.17 மணிக்கு கொலை செய்யப்பட்ட்டார். கொலை செய்தவர் ஒரு இந்து.”

தமிழகத்தில் தந்தை பெரியார் தனது இரங்கல் செய்தியிலும், வானொலியிலும் இதனை அறிவித்தார். இதனால் அன்று வகுப்புக் கலவர பூமியாக தமிழகம் ஆவதைத் தடுத்தார் என வி.டி.இராஜசேகர் என்ற தலித் எழுத்தாளர் குறிப்பிடுகின்றார்.

பிரிதோர் செய்தி, கோட்சே விருத்த சேதனம் செய்து கொண்டான். அவன் தனது பெயரை இஸ்மாயீல் என்றும் சொன்னான் இதனை பெரியார் முழக்கம் என்ற பத்திரிக்கை ஆகஸ்ட் 5, 1998 இந்திய டுடேயை மேற் கொள்காட்டிக் குறிப்பிடுகின்றது.

இதெல்லாம் எதைக் காட்டுகின்றன என்றால் காந்தியை கொலை செய்ய வேண்டும் பழியை முஸ்லீம்களின் மேல் போட வேண்டும். தேசத் தந்தையைக் கொன்ற பாதகர்கள் என பழியை சுமத்தி முஸ்லீம்களைப் பூண்டோடு ஒழிக்க வேண்டும். இதுவே இறுதி நோக்கம்.

மவுண்ட்பேட்டன் யார் காந்தியைக் கொலை செய்தது எனக் கேட்டதற்கு, ஒரு முஸ்லீம் என அந்தக் கூட்டத்தில் பதில் சொன்னது அங்கிருந்த கோட்சேயின் நண்பர்களாகத்தான் இருக்க வேண்டும்.

காந்திஜியின் பிரார்த்தனைக் கூட்டங்கள் அனைத்துத் தரப்பு மக்களும் கலந்துக் கொள்ளும் கூட்டம். ஆகவே அங்கே ஈனப்புத்தியுடையோருக்கு இடமில்லை.

காந்திஜியை கொலை செய்தது ஐயமற நிரூபிக்கப்பட்டு விட்ட நிலையில் கோட்சேக்கு வேறு வழியில்லை. சாவார்க் கரையும் - ஆர்.எஸ்.எஸ்.ஐயும் விடுவித்துத் தானே செய்ததாக ஒப்புக் கொண்டான்.

ஆக இந்த ∴பாசிஸ்டுகள் தாங்கள் பிரதான எதிரிகளாக கருதும் முஸ்லீம்களை கருவருக்க எதையும் செய்வார்கள் (காந்திஜி போன்றோரை கொலை செய்வது உட்பட). அந்தப் பழியை எந்தக் கூச்சமுமின்றி சிறு பான்மை முஸ்லீம்களின் மேல போடுவார்கள் என்பது நிரூபனம்.

இந்தப் பின்னணியில்தான் கோத்ரா வையும் அதற்கு பின்னால் நடந்த குஜராத், முசபர்நகர் நிகழ்வுகளையும் பார்க்க வேண்டும்.

இதே பின்னணியில் முசபர்நகர், குஜராத், காந்தி கொலை போன்றவற்றை இவர்கள் நாடு முழுவதும் நடத்த முன்வரலாம். அன்று முதல் இன்றுவரை அவர்களின் திட்டம் இப்படித்தான் செயல்பட்டு வருகின்றது.

இவர்கள் நேரு, சுக்ரவர்த்தி போன் றோரையும் தங்கள் கொலைப் பட்டியலில் சேர்ந்திருந்தார்கள் என்பதிலிருந்து இவர்கள் ஆட்சியைப் பிடிக்கப் பல ஆயிராம் கொலை களைச் செய்யவும் தயங்க மாட்டார்கள் என்பது தெளிவு.

ஆகவே இந்த குள்ளநரிகளிடமிருந்து நாட்டை மீட்க அனைவரும் ஓரணயில் நின்று பாடுபட வேண்டும்.






நம் நாட்டு விடுதலைப் போர் ,மிகவும் நீண்டதொரு வரலாற்றைக் கொண்டது. *1620* களில் ஆங்கிலேயர்கள் இந்த மண்ணில் கால் வைத்த நாள்களிலிருந்தே அந்தப்போர் தொடங்கி விட்டது. அப்போது இங்கே ஆட்சி நடத்திக் கொண்டிருந்தவர்கள் முஸ்லிம்கள் என்பதனால் ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தை எதிர்த்து தொடக்க நாள்தோட்டே இந்த விடுதலைப் போரை வழி நடத்தியவர்களும் முஸ்லிம்கள் தாம்.

ஆனால் அந்தப் பென்னம் பெரிய வரலாற்றை மண்மூடிப் போகச் செய்து விட்டார்கள்.

இதில் இன்று நாடாளுவோருக்கும் அந்த விடுதலைப் போறுக்கும் எள்ளளவும் சம்மந்தமுமில்லை. அது மட்டுமல்ல ஆதிக்கத்தையும் அநீதியை யும் ஒன்றாகக் கட்டவிழ்த்திட்ட ஆங்கிலேயர்களோடு ஒத்துழைத்த வரலாற்றுக்குச்சொந்தக்காரர்கள் இவர்கள்.

பாசிசத்தை இன்று பாரதத்தில் அரங்கேற்றித்தான் தீருவோம் என அடம் பிடிக்கும் இவர்களுக்கு இன்னொரு வரலாறும் உண்டு. விடு தலைப் போர் வீரர்களை ஆங்கிலேயர் களுக்கு காட்டிக் கொடுத்த வரலாறே அது.

கிறிஸ்தமஸ் தினத்தை எந்த வாஜ்பேயின் பிறந்த நாளாகக் கொண்டாடிவோம் எனப் பிதற்றுகின்றார்களோ, அந்த வாஜ்பேயிக்கு இந்தக் காட்டிக் கொடுத்த வரலாறு நிரம்பவே உண்டு. இவற்றையெல்லாம் நாம் நமது பத்திரிக்கையில் தொடர்ந்து வெளிச்சம் போட்டு காட்டி வருகின்றோம்.

எனினும் ஜனவரி *26* - குடியரசு தினம் வரும்போது விடுதலைப் போர் துரோகிகள் சங்கநாதமிடுவார்கள். பாசிசத்தை பறைசாற்றுவார்கள். அந்தப் பிரகடனங்கள் எல்லாம், முஸ்லிம்களை முதலிலும், இதர சிறுபான்மையினரைப் பின்னரும் குறிவைத்துத் தாக்குவார்கள்.

முஸ்லிம்களின் விடுதலைப் போர் வரலாற்றை மறந்து வரும் மக்களுக்கு இந்த வரலாற்றை நினைவூட்டுவது நமது கடமை. அந்த வகையில் விடுதலைப் போரில் மறைக்கப்பட்ட சிலபல வரலாறுகளை, விரிவஞ்சி சிறு குறிப்புகளாகத் தருகின்றோம்.

**விடுதலைப் போரின் மறைக்கப்பட்ட பக்கங்கள்**

*01.* ஆங்கிலேயர்களை “இந்தியாவை விட்டு வெளியேறு” என்ற இயக்கத்தைத் தொடங்கியவர்கள் அவ்ரங்கஜேப் தான். இதை அவர்கள் *1686* - இல் செய்தார்கள்.அவ்ரங்கஜேப் அவர்களின் காலத்தில் **EAST INDIA COMPANY** எனும் “கிழக்கிந்திய கம்பெனிதான்” இருந்தது.

அப்போதே அந்த ஆங்கிலேயர்களின் சூழ்ச்சிகளைத் தெரிந்துக் கொண்டு கிழக்கிந்திய கம்பெனியை இந்தியாவை விட்டு வெளியேறிட வேண்டும் என அழுத்தங்களை தந்தார்கள்.(அப்போது சங்கப் பரிவாரம்



அதாவது விடுதலையின் பயனை அனுபவித்துக் கொண்டிருப்பவர்கள் முகவரியற்றிருந் தார்கள்).

*02.* ஆங்கிலேயர்களுக்கெதிரான ஆயுதந் தாங்கிய போர் விடுதலை அடைவதற் காக *200* ஆண்டுகளுக்கு முன்னரே தொடங்கிவிட்டன. **"Battle of Plassey"** என்ற பிளாசி யுத்தம் விடுதலை சிங்கம் நவாப் சிராஜுத் தவ்லா அவர்கள் தலை மையில் பிளாசியில் வைத்து *1757* ஆம் ஆண்டு நடந்தது. அவரை வெல்ல முடி யாத ஆங்கிலேயர்கள், ஒரு சூழ்ச்சி யின் மூலமாகவே அவரை வீழ்த்தினார்கள். (அதற்கும் நூறு வருடங்களுக்கு பின்னர் *1857* - இல் நடந்த சிப்பாய் கலகத்தைத் தான் முதல் விடுதலைப் போர் என்று அறிவிக்கின்றார்கள். வரலாற்று திரிபு களையே வாழ்க்கை யைக் கொண்ட வர்கள்.)

ஆள்பலம், ஆயுதபலம், சூழ்ச்சி பலம் அத்தனையையும் ஒரு சேரப்பெற்ற ஆங்கிலேயர்களை வெல்ல முடியும் என்ற நம்பிக்கையை, இந்திய விடு தலைப் போர் வீரர்கள் பெற்றது.1782 - இல் தான். இந்த ஆண்டுதான் ஷஹீத் திப்பு சுல்தானின் தந்தை மாவீரன் ஹைதர் அலீ அவர்கள் ஆங்கிலேயர்களை ஆயுதம்தாங்கியபோரில் வீழ்த்திக்காட்டிட முடியும் என்பதைச் சா



தித்துக் காட்டி னார்கள்.

*03.* ஆங்கிலேயர்களை எதிர்த்து போர்களை நடத்தி வென்று காட்டும் சகாப்தம் ஹைதர் அலீ அவர்களோடு நின்றிடவில்லை தொடர்ந்து அவரு டைய மகன் திப்பு சுல்தானின் காலத் திலும் தொடர்ந்தது.

விடுதலைப்போர் வீரன் திப்பு சுல் தானின் கையில் தொடர்ந்து தோல்வி களைத் தழுவிய ஆங்கிலேயர்கள் திப்புசுல்தான் அவர்களையும் துரோகத்தின் வழியே வீழ்த்தி னார்கள். திப்பு சுல்தான் வீழ்த் திய பிறகு தான் இந்தியா நமக்கு என்றார்கள் ஆங்கி லேயர்கள்.



இராக்கெட்களையும், ஏவுகணை களையும் முதன் முதலில் பயன்படுத்திய வர் மைசூர் வேங்கை திப்புசுல்தான் தான். அதுவும் விடுதலை போரில். அதிலும் ஆயுதத்தால் வெல்ல முடியாது எனஇருமாந்துக் கிடந்த ஆங்கி லேயர்களுக்கு எதிராக. (பெருமையேடு போற்றியிருக்க வேண்டும் இந்த வேங்கையின் வீரத்தையும், விவேகத்தையும் ஆனால் இந்தியாவின் விடுதலைப் போரின் வர லாறு பாசிசத்தின் கையில் சிக்கிக் கொண்டதால் இந்த வீர மகனின் தியாகங்களும், விடுதலை வேட்கையும், மறைக்கப்பட்டு விட்டன. காட்டிக்



கொடுத்தவர்கள். அனைத்தையும் அழித்து, நாட்டையும் நாசமாக்கி விட்டார்கள்.)

05. செய்யித் அஹ்மத் ஷஹீத்

மைசூர் வேங்கை திப்புசுல் தானின் வீர மரணத்தைத் தொடர்ந்து செய்யித் அஹ்மத் ஷஹீத் அவர்கள் தங்களுடைய தலைமையின் கீழ் ஆயிர மாயிரம் முஜாஹீத்களை ஒருங்கிணைத் தார்கள். ஆங்கிலேயர்களுக்கெதிராக ஆயுதந்தாங்கியப் போரை தொடர்ந் தார்கள்.

இந்த பெரும்போர் 1824 ஆம் ஆண்டு உக்கிரமடைந்து 1831 வரை தொடர்ந்தது. இந்த பெரும் போரின் விளைவாக, வட மேற்கு எல்லைப் பகுதி யாகிய North west Fronties Provinee - ஐ முற்றாக ஆங்கிலேயர்களிடமிருந்து மீட் டார். விடுதலையையும் பெற்றார்கள். இஸ்லாமிய ஆட்சியை அந்தப் பகுதி யில் நிலை நாட்டினார்கள்.



பிரித்தாளும் சூழ்ச்சியில் கை தேர்ந்த ஆங்கிலேயர்கள் சீக்கியப் பெருங் குடி மக்களை இந்த முஜாஹித் களுக்கு எதி ராகத் தூண்டி விட்டார்கள். இந்தச் சூழ்ச்சி யில் முஸ்லிம்கள் சிலருக்கும், சீக்கிய வியாபாரிகள் சிலருக்கும் இருந்த சில்லரை சண்டைகளை ஊதிப் பெரிதாக்கினார்கள்.

ஆங்கிலேயர்களின் இந்த சூழ்ச்சி யின் பயனாய் வீரத் திருமகன் செய்யித் அஹ்மத் ஷஹீத் அவர்கள் 1831 அன்று வீர மரணம் அடைந்தார்கள். ஆனால் அவர்களுடைய தோழர்கள் அதன் பின்னரும் ஆங்கிலேயர்களுக்கு எதிரான தங்கள் ஆயுதந்தாங்கிய போரைத் தொடர்ந்தார்கள்.

இந்த செய்யித் அஹ்மத் ஷஹீத் அவர்களைப் பற்றியும் அவர்களுடன் ஆயுதந்தாங்கி ஆங்கிலேயர்களின் பெரும் படையை போர்களத்தில் சந்தித்தையும் தான் வில்லியம் ஹண்டர் என்ற ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தின் எடுபிடி வைசிராய், தான் எழுதிய இந்தியன் முசல்மான்ஸ் என்ற நூலில் பக்கம் பக்கமாக எழுதுகின்றான்.

உண்மையைச் சொல்வதானால் செய்யித் அஹ்மத் ஷஹீத் அவர்களின் வாழ்க்கையையும், அவர்களுக்குத் தோள் கொடுத்த வீர முஜாஹித்களின் வரலாற்றையும் வில்லியம் ஹண்டர் அவர்களின் இந்தியன் முஸல்மான்ஸ் நூலைப் படித்தால் தெரிந்துக் கொள்ள லாம். அந்த அளவுக்கு அந்த நூல் விரிவாகவும், விளக்கமாகவும், இந்தியன் செய்யித் அஹ்மத் ஷஹீத் அவர்களைப் பற்றியும், அவர்களுடைய தோழர்கள் - போராளிகளைப் பற்றியும் பேசுகின்றது.

06. பஹதூர்ஷா ஜாஃபர்

இந்தியாவின் கடைசி முகலாய மன்னர், பகதூர்ஷா ஜாஃபர் தான் இந்த மண்ணில் இன்றளவும் இல்லாத ஒரு பெரும் அதிசயத்தை நிகழ்த்திக் காட்டி னார்கள். அது இந்தியப் மக்கள் அனைவரையும் ஆங்கிலேயர்களுக்கு எதிராக ஓர் அணியில் திரட்டியது தான்.

அந்த விடுதலைப் போரில் அனைத்து திசைகளிலும் முஸ்லிம் அறிஞர்கள் அதாவது ஆலிம்களே தலைமை ஏற்றார்கள். ஆங்கிலேயர்கள் அன்றளவும் கண்டிராத தோல் வியும், அழிவும் அவர்களைச் சந்தித்தது.



இந்த கோபத்தை அப் படியே அந்த விடுதலைப் போருக்குப்பின் பஹதூர் ஷா ஜாஃபர் அவர் களின் குடும்பத்தி மேல் பாய்ச்சி னார்கள்.

மொத்தமாக அவர்கள் ஐந்து இலட்சம் 5,00,000 முஸ்லிம்களைக் கொலைச் செய்தார்கள். அதில் ஐந்தாயிரம் 5,000 ஆலிம்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இலக்னோவிலிருந்து, டெல்லியிலிருந்து கல்கத்தாவரையுள்ள கிராண்ட் டிரங் சாலையில் (Grand Trunk Road) ஒரு ஆலிமின் உடலை தூக்கிலிடாத மரத்தைப் பார்க்கவே முடியாது

ஆங்கிலேயர்கள் தாங்களாகவே முன்வந்து அடைக்கலம் தந்த பகதூர் ஷா ஜாஃபர் அவர்களின் மூன்று மகன் களின் தலைகளையும் கொய்தார்கள்.ஒரு வெள்ளித் தாம்பாளத்தில் வைத்தார்கள். பட்டுத்துணியால் வைத்தார்கள். பர்மாவுக்கு பகதூர் ஷா ஜாஃபரை நாடு கடத்திடும் முன் அவருக்கு அனுப்பி வைத்தார்கள். பரிலைக் கொண்டு வந்தவன் தாம்பளத்தை நீட்டினான் பகதூர்ஷா ஜாஃபர் அவர்களிடம்.

பட்டாடையை விளக்கிப் பார்த் தார்கள். தங்கள் அருமை மகன்களின் தலைகள். தயங்காமல் சொன்னார்கள், "என் பிள்ளைகள் இறைவனிடம் உயர்ந்த இடத்தை அடைந்து விட்டார்கள்" என்று.

அத்தோடு நிற்கவில்லை ஆங்கில ஏகாதிபத்தியத்தின் எவாலாள்கள். பக தூர்ஷா ஜாஃபர் அவர்களின் குடும் பத்தைச் சார்ந்த 33 உறுப்பினர்களையும் படுகொலை செய்தார்கள்.

இந்த படுகொலைகளுக்குக் காரணம் கேட்டபோது இவர்கள் உயிருடன் வாழ்ந்தால், மீண்டும் ஒரு விடுதலைப் போருக்கு வித்திட்டு விடு வார்கள் என்றார்கள்.

அதே போல பகதூர்ஷா இறந்த பின் அடக்கம் செய்த இடத்தில் எந்த அடையாளமும் இருந்திடக் கூடாது என பார்த்துக்கொள்ளும் படி ஆணை இட்டார்கள் ஆங்கில ஏகாதிபத் தியத்தைச் சேர்ந்தவர்கள். அதற்கும் அடக்கம் செய்யப்பட்ட இடம் தெரிந் தால் அந்த இடத்தைப் பார்ப்பவர்கள் மீண்டும் விடுதலை வேட்கையைப் பெறுவார்கள் என்றார்கள். 1967 இல் அதாவது ஏறத்தாழ 85 ஆண்டுகளுக்குப் பின்னர்தான் இறந்தார்கள். பகதூர்ஷா ஜாஃபர் அவர்களின் நினைவிடம் உரு வானது. பகதூர்ஷா ஜாஃபர் அவர்கள் நவம்பர் 7,1862 வெள்ளி காலை 5 மணிக்கு இறந்தார்கள்.

இதனை மிஞ்சிய ஒரு விடுதலைப் போர் வரலாறு உலகின் எந்தப் பகுதி யிலும் இல்லை. ஆனால் இவை இன்றைய தலைமுறைக்கு தெரியாத வர லாறாகவே புதைக்கப்பட்டு விட்டது .

குறைந்த பட்சம் முஸ்லிம்கள் நடத்தும் பள்ளிகளிலாவது இந்த வரலாறு விரிவாக போதிக்கப்பட வேண்டும். இதனை எல்லா மக்களுக்கும் கொண்டு சேர்த்திட ஆவணச் செய்திட வேண்டும்.

ஆதாரம் : **(Rote of muslims in the struggle for freedom : As Quoted in muslims in india, Research Academy Publication, Peges : 105 - 109)**

**(THE LAST MUGHAL BY HILLIAM ADALRYMPLE, Pages - 446 - 486)**

07. இந்த முதல் விடுதலைப் போருக்கு முழுக்க முழுக்க முஸ்லிம்கள் தாம் காரணம் என முஸ்லிம்களையே குற்றம் பிடித்தார்கள் ஆங்கிலேயர்கள். முதல் விடுதலைப் போரைப் பற்றி எழுதிய ஹென்றி ஹேரிங்டன் தாமஸ் **(Henry Harrington Thomas)** தான் எழுதிய ஆங்கிலேயர்களுக்காக எழுதிய எதிர் காலத் திட்டத்தில் (1858 - இல்) இப்படி எழுதினான்.

**"I have stated that the hindus were not the contrivens or primary movers of the 1857 rebellion and i now shall attempt to show. that it was the result of a mohammaden compirary....... he it to their resanees the hindus never would or could have compassed such an undertaking...... they the**

**mohammadens have learn the same from the times of the firot coliphs to the present day, proud intolerant and even even aimying at mohammadan super may be what evae mean"**

ஆதாரம் : **Late Rebellion in India and our Future Policy, 1858, By : Henry Harington Thomas.**

அதாவது : "ஹிந்துக்கள் இந்த 1857 கிளர்ச்சியை திட்டமிடவுமில்லை, அல்லது இதனை செயலில் கொண்டு வந்திடவுமில்லை. நான் இப்போது அது முஹம்மதியர்களின் சதி என்பதை உங்களுக்கு காட்டிட முயற்சி செய் கின்றேன். தங்களுக்கிருக்கும் ஆற்றலை வைத்துப் பார்த்திடும் பொது ஹிந்துக் களால் இத்துனை பெரிய பளுவைத் தூக்கிட இயலாது. அவர்கள் அந்த முஹம்மதியர்கள் முதல் கலிஃபாவின் காலத்திலிருந்தே இப்படித் தான் இருந்துக் கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் பெருமை பீற்றுபவர்கள், சகிப்புத்தன்மை அற்றவர்கள், குரூர மானவர்கள் எப்போதும் முகம்மதியர் களின் மேலாண்மையையே விரும்புவார் கள். அதனை எவ்வழியிலாவது அடைந் திட முயற்சி செய்வார்கள்."

(ஆதாரம்: பிற்ற நாள் கிளர்ச்சியும் இந்தியாவில் நமது எதிர்காலக் கொள்கைகளும்)

சிப்பாய் கலகம் என்றும், முதல் விடுதலைப் போர் என்றும், இன்று அழைக்கப்படும் அன்றைய விடுதலைப் போருக்கு ஆங்கிலேயர் முற்றாக முஸ்லிம்களைக் குற்றம் பிடித்தார்கள்.

**முஸ்லிம் – கூட்டுக்கொலை**

குற்றவாளிகள் முஸ்லிம்கள் என்றான பின்னர் அவர்களை ஒட்டு மொத்தமாகத் தண்டிக்கத் தலைப் பட்டார்கள். அதற்காக முஸ்லிம்களைக் கூட்டுக் கொலை செய்தார்கள்.

இலக்னோவிலிருந்து டெல்லி வரைக்கும் **(Scaffolds)** என்ற சிறப்பு மேடைகளை எழுப்பினார்கள். முஸ்லிம் களை கூட்டங்கூட்டமாக அழைத்து வந்து அதில் நிறுத்தினார்கள். அதில் அவர்களை கூட்டமாகச் சுட்டுக் கொலை செய்ய ஏற்பாடு செய்தார்கள். எதிர்புறம் ஆங்கிலேய பெண்களும் ஆண்களும் வந்து குழுமினார்கள். இந்தக் கூட்டுக் கொலைகளைக் கண்டு மகிழ்ந் திட இப்படி 27,000 முஸ்லிம்களைக் கொலை செய்தார்கள்.

இந்த கொலைக்களங்கள் ஆங்கி லேயர்களின் குறிப்பாக ஆங்கிலேயே பெண்களின் பொழுது போக்குத் தளங் களாக ஆக்கப்பட்டன. முஸ்லிம்கள் கூட்டம் கூட்டமாக வாழ்ந்த பல இடங்களில் அவர்கள் முற்றாகக் கொலை செய்யப்பட்டார்கள். மொத்த முஸ்லிம்களையும் இந்தியாவிலிருந்து துடைத்து எறிந்திடுவதே ஆங்கிலேயர் களின் நோக்கமாக இருந்தது.

முஸ்லிம் குழந்தைகளையும், முஸ்லிம் பெண்களையும் ஆங்கிலேயர் கள் கொலை செய்த குரூரங்கள் எழுதும் தரத்தில் இல்லை. அத்தனை தரக் குறைவாக நடந்து கொண்டார்கள். வெறிபிடித்து ஆடினார்கள். இதுமட்டு மல்ல மரங்கள் கண்ட இடங்களி லெல்லாம் முஸ்லிம்களை தூக்கிலே தொங்கவிட்டார்கள்.

மொத்தமாக அவர்கள் ஐந்து இலட்சம் 5,00,000 முஸ்லிம்களைக் கொலைச் செய்தார்கள். அதில் ஐந் தாயிரம் 5,000 ஆலிம்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இலக்னோவிலிருந்து, டெல்லியிலிருந்து கல்கத்தாவரையுள்ள கிராண்ட் டிரங்க் சாலையில் **(Grand Trunk Road)** ஒரு ஆலிமின் உடலை தூக்கி லிடாத மரத்தைப் பார்க்கவே முடியாது ஏன்பது வரலாற்றுப்பதிவு.

ஆதாரம் : **HISTORIAN - PARVEZ MANDIVALA - ON QUOTED IN RADIANCE : 31st Aug - 6th Sep, 2014.**

இந்தப் படுகொலைகளைப் பற்றி ஆங்கிலேய அதிகாரி **LORD ROBERTS** – லார்டு ராபர்ட்ஸ் ஜூன் 21, 1857 – இல் தன் தாயாருக்கு எழுதிய கடிதத்தில் இப்படி குறிப்பிட்டான்:

**"The death that seems to have the greatest effect is being brown from the gun. it is rather a horrible right, but, these times, we came of be particular. the purpose of this business was to show these rascally Musalmans that, with Gods help English men will still be the masters of India"**

ஆதாரம் : **Edward Thomson : the others side of the medle (1926) Page - 40.**

அதாவது அதிகமான அதிர்ச்சியைத்தரும் மரணம், பீரன்கிலிருந்து தான் பாய்ச்சப்பட்டன. பார்ப்பதற்கு மிகவும் கோரமான காட்சிதான். ஆனால் இந்த நாட்களில் நாம் அதைத் தவிர்க்க முடியாது. இதன் நோக்கம் முஸ்லிம்களுக்கு இறைவனின் உதவியோடு ஆங்கிலேயர்களே இந்தியாவின் எஜமானர்களாக இருப்பார்கள் காட்டிடுவதுதான்.

இன்னொரு ஆங்கிலேயே அதிகாரி இப்படி கர்ச்சித்தான். "நான் முஸ்லிம்கள் அனை வரையும் கிளர்ச்சியார்கள் என்றுதான் எடுத்துக் கொள்வேன். யாரேனும் எண்களில் கண்டால், அவன் இந்துவா முஸ்லிமா? என விசாரிப்பேன் அவன் முஸ்லிம் என்றால் அங்கேயே சுட்டு வீழ்த்துவேன்" **(Rote of muslims in the struggle for freedom, Pages 105 - 106)**

***இந்த அளவிற்கு தொடக்க நாட்களில் ஆங்கிலேயர்களை முஸ்லிம்கள் எதிர்த்தார்கள். அதனால் எல்லா இழப்பு களையும் ஏற்றார்கள். இன்று ஒரு தலைமுறை பாசிச கொள்கைகளில் வார்த்தெடுக்கப்பட்டு, இந்தியாவை அப்பிக்கொண்டு அழித்து வருகின்றது. இந்த உண்மைகளை அவர்கள் பார்வைக்கு கொண்டு சென்றிட வேண்டும்.***

**அதேப்போல மௌலானா அபுல் கலாம் ஆசாத் அவர்களும் தலைசிறந்த ஓர் இஸ்லாமிய மார்க்க அறிஞர் என்பவை, இஸ்லாமிய மார்க்க அறிஞர்கள் எந்த அளவுக்கு விடுதலைப் போரில் முன்னே நின்றார்கள் என்பதை எடுத்துரைக்கும்.**

இந்தியாவின் உலாமாக்கள் - மார்க்க அறிஞர்கள் ஆங்கிலேயர்களுக்கெதிராக ஜிஹாத் ஒன்றை அறிவித்தார்கள். ஆங்கிலேயர்களின் ஆட்சி இந்தியாவில் இருக்கும் வரை இந்தியா "தாருல் ஹர்ப்" என அறிவித்தார்கள். அதாவது போர் புரிந்திட வேண்டிய பூமி என்றார்கள்.

ஹென்றி மியாட் என்ற ஆங்கிலேயன், இதனை தான் சமர்பித்த ஆய்வறிக்கையில் இப்படிக் குறிப்பிட்டான்.

**"The Rebellion, in its present phas cannot he called a sepoy muslim, it did begin with sepoys, but soon its true nature is was reveded it was an Islamic revolt."**

(ஆதாரம்: **Rote of muslims in the struggle for freedom, pages 109,110 : Islamic Rebellion)**

இந்த கிளர்ச்சியை அதன் இப்போதைய நிலையில் ஒரு சிப் பாய் கலகம் என அழைப்பதற்கில்லை. அது சிப்பாய்களிடமிருந்து தொடங் கியது என்பது உண்மை தான். அது விரை வில் தனது உண்மையான இயல்பை வெளிக் காட்டிற்று. அஃதோர் இஸ்லா மிய கிளர்ச்சி.

இந்தப் பின்னணிகளை வைத்துக் கொண்டு முஸ்லிம்களை, முஸ்லிம் குழந்தைகள், பெண்கள் உட்பட அனை வரையும் கொன்று குவித்தார்கள்.

அடுத்ததாக முஸ்லிம்களின் கலாச்சார பண்பாட்டு அடையாளங்களை அழிக்க முற்பட்டார்கள்.

முஸ்லிம்களை தாங்கள் நடத்தி வந்த கல்வி நிறுவனங்களில் சேர்த்திட மறுத்தார்கள். கல்வியே அவர்களுக்கு கிடைக்காமல் செய்தார்கள்.

வில்லியம் ஹண்டர் நாட்டு எஜமானர்களுக்கு எழுதிய கடிதத்தில் எப்படி முஸ்லிம்களை அவர்களது கல்வியிலிருந்து வேறுப்பக்கம் திருப்பி ஒன்றுமில்லாமல் ஆக்கினேன் என்பதை இந்தியன் முசல்மான்ஸ் என்ற நூலில் விரிவாக விளக்குகின்றார்.(பக்கங்கள் 78 - 165) அவற்றை இங்கே விளக்கிச் சொல்லிடுவது மிகவும் பொருத்தமாக

இருக்கும் என்றாலும் விரிவை அஞ்சி விட்டுவிடுகின்றோம். அவற்றின் முக்கிய பகுதிகளை மட்டும் இங்கே குறிப்பிடு கின்றோம்.

அவற்றிலும் முக்கியமானது அவர்களின் கல்விக் கொள்கை, அந்தக் கல்விக் கொள்கை எப்படி இருக்க வேண்டும் என்பதை இப்படிக் குறிப்பிடு கின்றார் வில்லியம் ஹண்டர் :

“இப்போது முஹம்மதியர்கள் தங்கள் பள்ளிக் கூடங்களில், எண்ணப் படிக்கிறார்களோ அதற்கு மாற்றமாக, தொடராக பல பாட நூலகம் பகுக்கப் பட வேண்டும். அவற்றில் முஹம்மதியர் களைத் தொடர்ந்து கற்பிக்க வேண்டும். அவற்றில் இடம் பெரும் பாடங்கள் நன்றாக தெரிவு செய்யப்பட வேண்டும். கல்லூரிகள் ஆங்கில நாட்டு முதல்வர் களால்தான் நிறுவகிக்கப்பட வேண்டும். இந்தக் கல்விக் கூடங்களை நடத்து வதற்கு தேவையான அளவு நிதியை நாம் பெற்றிருக்கிறோம்.(இந்த பெரும் நிதி முஸ்லிம்கள் கல்விக்காக நிறுவிய அறக் கட்டளை களை ஆங்கிலேயர்கள் அப கரித்துக் கொண்டதால் கைவரப் பெற்றவை) நமது அரசுக்கு இதில் எந்த செலவுமில்லை.

**“We should thus at lenth have the mohammadan youth educated upon as own plan”**

இப்படி நாம் நீண்ட காலத்தில் நமது திட்டதில் கல்வி கற்ற முஹம்மதிய இளைஞர்களை முஸ்லிம் இளைஞர் களைப் பெறுவோம்.

இந்தக் கல்வித் திட்டம் நிறை வேறிய பொது எல்லாம் ஆங்கிலேயர் களுக்குக் கைக்கூடிவிட்டது. அதன் விளைவைத்தான் இன்றளவும் அனு பவித்து வருகின்றோம்.

வெந்த புண்ணிலே வேலைப் பாய்ச்சுவது என்னவெனில் இந்தக் கல்வியைப் பெறுவதற்கு போட்டிப் போட்டுக் கொள்கின்றோம். பெற்ற பின் பெருமைப்பட்டு கொள்கின்றோம்.

இப்போது நாட்டைத் தன்கோரப் பிடியிக்குள் வைத்திருக்கும், பாரதீய ஜனதா கட்சியின் பாசிச ஆட்சி இதே போன்று மொத்த இந்திய இளைஞர் களையும் தனது பாசிச கொள்கை களுக்கு தயாரிக்க நித்தமும் கல்விக் கொள்கைகளை அறிவித்து வருகின்றது.

மதரசாக்கள் தான் ஆங்கிலேயர் களுக்கு எதிரான முஜாஹித்களை உருவாக்கி வருகின்றன என்பதால் ஆங்கி லேயர்கள் மதரசாக்களையே திட்ட மிட்டு அழித்தார்கள். மதரசாக்களுக்கு முஸ்லிம்கள் பெருவாரியான நிதியை அள்ளிக் கொட்டி நிறுவிய அறக் கட்டளைக் கைப்பற்றி அந்த நிதியைக் கொண்டே முஸ்லிம்களை தங்கள் அடி வருடிகளாக ஆக்கினார்கள்.

மதரசாக்களுக்கு எதிரான பெரும் போர் விடுதலை அடைந்த இந்தியா விலும் தொடர்ந்தது. இப்போதும் தொடர்ந்து வருகின்றன. இப்போதைய பாசிச ஆட்சி 1999 - முதல் 2004 வரை செய்த கெடுபிடிகளை நாம் அறிவோம் - அதைத்தான் இப்போதும் கட்டவிழ்த்து விட்டு வருகின்றார்கள்.

(காலா காலமாக மதரசாக்கள் என்ற இஸ்லா மியக் கல்விக் கூடங்கள் சந்தித்த சோதனைகள், அவற்றின் மீது இன்றும் கட்டவிழ்த்தப்படும் கெடுபிடிகள் பற்றிய ஆய்வொன்றை “வைகறை வெளிச்சம்” ஜூன் - ஜூலை 2012 இதழில் வெளியிட்டிருக்கின்றோம். வாசகர்கள் அந்த இதழைப் படிக்கும்படி கேட்டுக்கொள் கிறோம்)

***குறிப்பு** : வாசகர்கள் இங்கே ஒன்றை கவனிக்க வேண்டும். இந்த கட்டுரையில் நாம் வில்லியம் ஹண்டர் அவர்களின் : **THE INDIAN MUSALMANS** என்ற நூலை விரிவாகப் பயன்படுத்தி இருக்கின்றோம். இந்த கடிதங்கள் 1871 இல் ஆங்கில நாட்டு அரசிக்கு எழுதப்பட்டவை. இந்த நூல் 1964 - இல் வெளியிடப்பட்டது.*

ஆங்கிலேயர்களின் கல்விக் கொள் கைக்கும், கல்வி திட்டத்திற்கும் முஸ்லிம் கள் பெருமளவில் பலியாகிக் கொண்டி ருக்கிறார்கள். ஈமானும், இஸ்லாமும் மொத்தமாக பறிபோய்க் கொண்டிருக் கிறார்கள். இந்த அவலம் போக்கப்பட வேண்டும் என்பதால் முஸ்லிம்கள் மீண்டும் ஒரும் பெரும் முயற்சியை மேற்கொண்டார்கள்.

இந்த முயற்சியில் பின்வரும் கல்விக்கூடங்கள் தோற்றுவிக்கப் பட்டன.

*01.* **தாருல் உலூம் தவ்பந்த்**

*02.* **தாருல் உலூம் நத்வா**

பிற நாட்களில் முஸ்லிம்களுக்கு எந்த கல்வியுமில்லை என்ற நிலை எழுந்த பொது அலிகர் முஸ்லிம் பல்கலைக் கழகம் போன்ற கல்வி நிறுவனங்கள் தோற்றுவிக்கப்பட்டது.

**இந்தியாவை ஒருங்கிணைக்கும் முயற்சி**

ஆங்கிலேயர்கள் முதல் சுதந்திரப் போருக்குப்பின், அதாவது 1857க்குப் பின் ஒரு நிரந்தர உத்தியைக் கையாண்டு வந்தார்கள். அது இந்துக்களையும் முஸ்லிம்களையும் பிரித்து மோதவிடும் சூழ்ச்சிதான். இதனால் மொத்த இந்தியாவும் தங்களுக்கெதிராக, கிளர்ந்தேழுந் திடுவதை தடுத்திடலாம் எனக் கருதினார்கள்.

ஆங்கிலேயர்களின் இந்த சூழ்ச்சியை முதன் முதலில் நன்றாகப் புரிந்து கொண்டவர்கள் முஸ்லிம்கள் தாம். ஆகவே மொத்த இந்தியாவையும் ஒன்றிணைக்கும் பேரு முயற்சியொன்று முஸ்லிம் ஆலிம் மார்க்க அறிஞர் ஒருவரே மேற்கொண்டார்.



அவர் இந்த இயக்கத்துக்கு “ரெஷ்மி ருமால் தஹ்ரிக் எனப் பெயரிட்டார்கள். இஃது 1905 முதல் மிகவும் முனைப்போடு செயல்படத் தொடங்கிற்று.

இந்த இயக்கத்தை ஷேஹுல் இஸ்லாம், மௌலான மஹ்மூத் ஹசன், மௌலான உபைதுல்லாஹ் ஷிந்தி ஆகியோர் முன்னின்று நடத்தினார்கள்.

முஸ்லிம்கள் இந்துக்களையும் முஸ்லிம்களையும் ஒருங்கிணைக்கும் பெரும்பணியைச் செய்து கொண்டிருக்கின்றார்கள் என்பதை உணர்ந்த ஆங்கிலேயர்கள் இந்த முயற்சியை முளையிலேயே கிள்ளி எரிந்திட தங்களால் இயன்றதையெல்லாம் செய்திடத் தலைப்பட்டார்கள்.

இந்த இருவரையும் கைது செய்தார்கள். ஒருவரை மால்பி சிறையிலும், இன்னொருவரை காலபாணி சிறையிலும் அடைத்தார்கள். மேலும் சித்திர வதைகளுக்கு உள்ளாக்கினார்கள். இவர்கள் இருவரும் சிறையிலேயே மரணத்தைச் சந்தித்தார்கள்.

இந்தியாவை ஒருங்கிணைக்கவும், ஒற்றுமைப்படுத்தவும், முயற்சி எடுத்தார்கள் என்பதற்காக மரணத்தைச் சந்தித்தவர்கள் அன்றைய முஸ்லிம்கள். PTO சின்னங்களை எதிர்பார்த்திடவில்லை. ஆனால் இந்து மதவெறி மட்டுமே தன் கொள்கை என இருந்தவர்களுக்கு பாராட்டும் சின்னங்களும்.......... இதுதான் பாசிசம்!

இந்திய தேசிய காங்கிரஸ் என்ற கட்சியின் கீழ் விடுதலைப் போராட்டம் வலுப்பெற்றபோது அதை ஒன்பது முறை தலைமையேற்று வழி நடத்தியவர்கள் முஸ்லிம்கள்.

**காந்தி**

தனது வாலிப பருவத்தில் கூச்சமும், எதிலும் தாக்கம் காட்டிடும் இயல்பும் கொண்டவர் மகாத்மா காந்தி அவர்

கள். அவர்களை தங்கள் கம்பெனியில் பதவியில் அமர்த்தியவர்கள் முஸ்லிம் கள். அப்துல்லாஹ் & கம்பெனி.

காந்திஜிக்கு ஊக்கமும் உற்சாகமும் தந்தவர்கள் தேன் ஆப்பிரிக்காவுக்கு அழைத்துச் சென்றவர்கள் எல்லாம் இதே அப்துல்லாஹ் & கம்பெனிதான்.

பின்னர் இந்தியாவுக்கு 1916 - இல் அனுப்பி வைத்தவர்களும் அப்துல்லாஹ் & கம்பெனிதான். இங்கே அலீ சகோ தரர்களின் நிழலில்தான் தங்கள் போராட்டத்தைத் தொடங்கினார்கள்.

இத்தனையையும் மகாத்மா காந்தி அவர்கள் தன்னுடைய சுய சரிதையாகிய சத்திய சோதனையில் விளக்கமாகக் குறிப்பிடுகின்றார்கள்.

**கேரளத்து முஸ்லிம்கள்**

கேரளத்தில் முஸ்லிம்களுக்கு மற்றொரு பெயர் மாப்பிள்ளைமார்கள். இவர்கள் நடத்திய விடுதலைப் போரில் 3000 பேர் வீர மரணத்தை அடைந்தார்கள்.

**ஒத்துழையாமை இயக்கம்**

ஒத்துழையாமை இயக்கம் என்பது இந்திய விடுதலைப்போரின் இன்னொரு கட்டம். எனையோருக்கேல்லாம் ஏற் பட்ட இழப்புகளை விட முஸ்லிம்களே அதிகமான இழப்புகளைச் சந்தித்தார் கள்.

அன்றைய நாட்களில் இந்தியா வின் சர்க்கரை மன்னர் என்று அழைக்கப் பட்டவர் சாபு சித்தீக். அவர்கள் அந்த அளவுக்கு சர்க்கரை ஆலைகளைத் தங்களுடையதாகக் கொண்டிருந்தார் கள் சாபு சித்தீக் சாகிப் அவர்கள்.

ஒத்துழையாமை இயக்கத்தின் எடுத்துக்காட்டாக தங்களுடைய சர்க்கரை ஆலைகளை ஒட்டுமொத்த மாக மூடினார்கள். விடுதலைப் போரில் குதித்தார்கள்.

அதேபோல "கோஜா மேமன்" என்பவர்கள் இந்தியாவில் மிகப்பெரிய வியாபார நிறுவனங்களைப் பெற்றிருந் 



தார்கள். ஒத்துழையாமை இயக்கம் அறிவிக்கப்பட்டவுடன் அத்தனை வியாபார நிறுவனங்களையும் மூடினார் கள். ஒத்துழையாமை இயக்கத்தில் இணைந்தார்கள். நம் விடுதலைப் போரில் முக்கிய பங்காற்றினார்கள்.

ஆனால் அதே சமுதாயத்தை தீவிர வாதிகள் என முத்திரைக் குத்தி அவர் களின் சொத்துக்கள் அனைத்தையும் அழித்து வருகின்றார்கள் மும்பையில். மேலும் ஒரு பெரும் வியாபாரக் கூட்டத்தை சிறையிலே அடைத்து விட்டார்கள்.

**வெள்ளையனே வெளியேறு**

1942களில் ஆங்கிலேயர்களுக்கு எதிராக நடந்த மக்கள் இயக்கம் வெள்ளையனே வெளியேறு என்ற பெயரில், சிராஜூத் தவ்லா அவர்கள் சூட்டியப் பெயரின் கீழ் நடந்தது.

அதனை விரிவாக திட்டமிட்ட தும் விரிவாக மக்களிடையே பிரச்சாரம் செய்ததும் மௌலான அபுல் கலாம் ஆசாத் அவர்கள் தாம்.

அபுல் கலாம் ஆசாத் அவர்களின் பிரச்சாரங்களால் மக்கள் பெருவாரியாக விழிப்புணர்வு அடைந்தார்கள்.

பொருத்துகொள்ள இயலவில்லை ஆங்கி லேயர்களால். மௌலானா அபுல் கலாம் ஆசாத் அவர்களை ஆகஸ்டு 8, 1942 அன்று கைது செய்து அஹ்மதாபாத் சிறையில் அடைத்தார்கள். அதனால் அந்தப் போராட்டத்தை ஆகஸ்டு 9 ஆம் நாள் அவர்கள் தலைமையேற்று நடத் தினார்கள்.

### ஜோதிபா பூலே

இவர் இந்திய விடுதலை வர லாற்றில் பிறிதொரு கதாநாயகனாவார். இவருடைய கல்வியிலிருந்து அனைத்து வளர்ச்சிக்கும் உதவி செய்தவர், அவ ருடைய அண்டை வீட்டார் உஸ்மான் பாக்பார் என்ற முஸ்லிம். உஸ்மான் பாக்பானின் பள்ளிக்கூடத்தில்தான் ஜோதிபா பூலே பின்னர் ஆசிரியராகச் சேர்ந்தார்.

### ஆங்கிலேயர்களுக்கெதிரான பத்திரிக்கைகள்.

ஆங்கிலேயர்களுக்கெதிரான பத்திரிக்கைகளை நடத்திடுவதில் முன்ன ணியில் நின்றவர்கள் முஸ்லிம்கள் தாம். அபுல் கலாம் ஆசாத் அவர்கள், ஒரு பத்திரிக்கையைத் தொடங்கி ஆங்கி லேயர்களுக்கெதிராகப் பெரும் போர் ஒன்றை நடத்தினார்கள். அதனால் தொடர்ந்து கெடுபிடிகளுக்கு உள்ளாக் கப்பட்டார்கள்.

பலமுறை பத்திரிக்கையை மூடிட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. விழும் போதெல்லாம் எழுந்தார். மீண்டும் பத்திரிக்கையை நடத்தினார்கள் என்பதற்காக முதன் முதலில் ஷஹீத் வீர மரணத்தைத் தழுவியதும் ஒரு முஸ்லிம் தான். அவர்தான் மௌலான பாக்கர் அலீ அவர்கள். அவர் ஆலிம் இஸ்லாமிய மார்க்க அறிஞர் என்பது குறிப்பிடத் தக்கது.

அதேப்போல மௌலான அபுல் கலாம் ஆசாத் அவர்களும் தலைசிறந்த ஓர் இஸ்லாமிய மார்க்க அறிஞர் என் பவை, இஸ்லாமிய மார்க்க அறிஞர்கள் எந்த அளவுக்கு விடுதலைப் போரில் முன்னே நின்றார்கள் என்பதை எடுத்துரைக்கும்.

இந்த வரலாற்றை முழுமையாக மறைத்து விட்டார்கள் சதிகாரர்கள்.

இந்த வரலாற்றை நாம் இன்று வாழும் தலைமுறைக்கு எடுத்து சொல் வோம்.

இனி இன்றைய பாசிஸ்டுகள் அன்று என்ன செய்தார்கள் என்பதைப் பார்ப்போம்.











Rs.175/- Rs.40/- Rs.110/-

# இந்திய சுதந்திரப் போராட்டமும் ஆர்.எஸ்.எஸ்.ஸும்!



நமது நாடு இப்போது தேசிய உணர்வு மேலோங்கிய ஒரு காலகட்டத்தைச் சந்தித்துக் கொண்டிருக்கிறது. இந்தச் சூழலில் 1942 இன் மகா ஆகஸ்ட் புரட்சி எனப்பட்ட வெள்ளை யனே வெளியேறு இயக்கத்தை நினைவூட்டு வது பொருத்தமாகவே இருக்கும். இந்த இயக்கத்திற்கான அழைப்பை காந்திஜி தலை மையிலான காங்கிரஸ் முன் வைத்தாலும், காங்கிரஸிலிருந்த சமதர்மவாதிகள் அதனை நாடு தழுவிய இயக்கமாக்கினர்.

57 வருடங்களுக்கு முன்பு நடந்த இந்த இயக்கத்தின் போதுதான் "வெள்ளையனே வெளியேறு" அல்லது "செய் அல்லது செத்து மடி" போன்ற கோஷங்கள் உருவாயின. இந்த இயக்கம் தொடர்பாக பல சர்ச்சைகளும் இருக் கின்றன. சோவியத் இரஷ்யாவின் நிர்பந் தத்தால் இந்திய கம்யூனிஸ்டு கட்சி இந்த போராட்டத்தில் கலந்துகொள்ளவில்லை. கம்யூனிஸ்டுகள் பல அரசியல் போராட்டங் கள், பண்பாட்டு இயக்கங்கள் நடத்திய பிறகும் கூட அவர்கள் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தைப் புறக்கணித்தப் பழி இன்னமும் இருக்கிறது.

தங்களைத் தேசியவாதத்தின் குத்தகைக் காரர்களாகக் காட்டிக் கொள்கிற ஆர்.எஸ்.எஸ், இதில் என்ன பங்காற்றியிருக்கிறது என்பது பற்றி ஆராயப்படாமல் இருப்பது ஆச்சரியமே! ஆர்.எஸ்.எஸ்.ஸுடன் தொடர்புடையவர்க ளால் எழுதப்பட்டு அந்த காலக்கட்டத்தில் வெளியிடப்பட்ட ஆவணங்களைப் பார்க்கும் போது பரிதாபமாக இருக்கிறது. ஆர்.எஸ்.எஸ். "வெள்ளையனே வெளியேறு" இயக்கத்தில் கலந்து கொள்ளாதது மட்டுமல்ல. இருபது களில், முப்பதுகளில், நாற்பதுகளில் செயல் பட்ட எந்த பிரிட்டிஷ் எதிர்ப்பு இயக்கங் களிலும் அது கலந்துக் கொள்ளவில்லை.

பகத்சிங் போன்ற சுதந்திரப் போராட்டத் தியாகிகளது செயல்பாடு களிலிருந்தும், இந்தியக் கடற்படையினரது காலத்திலிருந்தும் ஆர்.எஸ்.எஸ். விலகியே இருந்தது.

வாஜ்பேயி 1998 மார்ச்சில் ஆர்.எஸ்.எஸ் தலைவர் இராஜிந்தர் சிங் முன்னிலையில் "சுதந்திரப் போராட்ட வீரரும், ஆர்,எஸ்,எஸ், நிருவருமான" டாக்டர் கே.பா.ஹெட்கேவார் அவர்களது 110வது பிறந்த நாள் நினைவு தபால் தலையை வெளியிட்டபோது இந்த விவகாரங்கள் வெளிச்சத்துக்கு வந்தன. சுதந்திரப் போராட் டத்தின் பொது ஹெட்கேவார் இரண்டு முறை கள்தான் சிறைக்கு சென்றார். அதுவும் காங்கிரஸ் நடத்திய போராட்டங்களில் கலந்து கொண்டதால் சிறைக்கு சென்றார். அப்போது அவர் ஆர்.எஸ்.எஸ். ஐ ஆரம்பித்திருக்க வில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

ஹெட்கேவார் இரண்டாவதாக அதாவது கடைசியாக ஜெயிலுக்கு போனது அவர் ஆர்.எஸ்.எஸ் ஐ தொடங்கியப் பின்னர் நடந்தது. ஆனால் அதுவும் காங்கிரஸ் போராட்டத்தில் பங்கேற்றதால் நடடை பெற்றதே.

இந்த முறை ஹெட்கேவார் சிறைக்கு சென்றதில் வினோதமான பின்னணி உண்டு. ஆர்.எஸ்.எஸ்.ஸால் வெளியிடப்பட்ட ஹெட் கேவாரின் சுய சரிதையின் படி மகாத்மா காந்தி விடுத்த சத்தியாக்கிரக அழைப்பை ஏற்று ஹெட்கேவார் சிறைக்கு சென்றிருக்கிறார். இந்த சத்தியாக்கிரகத்தின் பொது அரசாங் கத்தின் சில சட்டங்களை முறியடிக்கும்படி காந்தி மக்களுக்கு அழைப்பு விடுத்தார். காந்தி அவர்களே தண்டியாத்திரை மேற்கொண்டு உப்பு சத்தியா கிரகம் செய்தார். ஆர்.எஸ்.எஸ் இந்த சத்தியாக்கிரகத்தில் பங்கேற்காது என தகவல் தரப்பட்டது.(பக்கம் - 20)

ஆனால் ஹெட்கேவார் வேறொரு உள் நோக்கத்தோடு சத்தியாக்கிரகத்தில் கலந்து கொண்டார் என்று அவரது சுய சரிதையே சொல்கிறது. "சிறையிலிருந்த எல்லாத் தலைவர்கள் மற்றும் தொண்டர் களுடன் நெருக்கமான உறவை ஏற்படுத்திக் கொண்ட அவர்களிடம் ஆர்.எஸ்.எஸ். இன் வேலைகளைப் பற்றி விவரித்ததோடு எதிர்காலத்தில் சங்கப்பணிகளில் அவர்களது ஒத்துழைப்புக்கான வாக்குறுதியையும் வாங்கினார். தனது பணிகளின் விரிவாக்கத்திற்கு திட்ட மிட்டப்பிறகே அவர் சிறையிலிருந்து வெளிவந்தார்" (பக்கம் 21)



ஆங்கிலேயர்களை எதிர்க்கும் இலட்சியத்துடன் ஹெட்கேவார் சிறைக்குச் செல்லவில்லை. காங்கிரஸ் காரர்களை ஆர்.எஸ்.எஸ் இல் சேர்க்கும் நோக்குடனே அவர் சிறை சென்றார் என்பது வெளிப் படை. ஹெட்கேவாருக்குப் பிறகு ஆர்.எஸ்.எஸ்.ஐக் கையிலெடுத்துக் கொண்ட குறு கோல்வல்கர் பிரிட்டிஷ் எதிர்ப்பு இயக்கங்களை எவ்வளவு வெறுத்தார் என்பதை அவரே கூறுகிறார்:

"வழக்கமான வேளையில் நிலைத்திருக்க மற்றுமொரு காரணம் இருக்கிறது. காலாகாலாத்திற்கு நாட்டில் ஏற்படும் மாற்றங்களால் மனதில் அமைதியின்மை நிலவுகிறது. 1942 இல் அப்படியான அமைதியின்மை இருந்தது. அதற்கு முன்பு 1930 - 1931 இல் அப்படியொரு இயக்கம் இருந்தது. அப்போது பலரும் ஹெட்கேவாரிடம் சென்றார்கள். இந்த இயக்கம் சுதந்திரம் வாங்கித்தருமென்றும் சங்கம் இதில் பின்தங்கக் கூடாதெனவும் அவர்கள் சொன்னார்கள். ஒரு மனிதர் டாக்டர் ஹெட்கேவாரிடம் தான் ஜெயிலுக்குப் போகத் தயார் என்று கூறினார்.

அதற்கு அவர் : "நிச்சியமாகப் போ. ஆனால் அப்போது உனது குடும்பத்தை யார் கவனிப்பார்?" என்று கேட்டார்.(ஸ்ரீ குஜி சாமக்ராஹ் தர்ஷன், தொகுதி 4, பக்கங்கள் 39-40)

1942 இல் நடைபெற்ற "வெள்ளையனே வெளியேறு" இயக்கத்தைப் பற்றிய ஆர்.எஸ்.எஸ்.ஸின் பார்வையை கோல்வால்கரின் கீழ் காணும் வார்த்தைகளே தெளிவுப் படுத்துகின்றன:

"போராட்டம் பற்றிய மோசமான செய்தி வந்திருக்கிறது. 1920-21 இயக்கதிற்குப் பிறகு ஆட்கள் மிகவும் தீவிரமாகிவிட்டனர். இது தலைவர்கள் மீது சேறை வாரியிருக்கும் முயற்சியல்ல. இவையெல்லாம் போராட்டத்தின் தவிர்க்க இயலாத பின்விளைவுகள். விடயம் என்னவென்றால் இந்த விளைவுகளை நாம் முறையாகக் கட்டுப்படுத்த முடியவில்லை. 1942க்குப் பிறகு மக்கள் சட்டத்தைப் பற்றிக் கவலைப்படத் தேவையில்லை என்று என்ன ஆரம்பித்து விட்டார்கள்"(முற்கூறிய நூல் பக்கம் 41)

கோல்வால்கர் தொடர்கிறார்:

"1942 இல் கூட பலரது இதயங்களில் வலுவான உணர்வு இருந்தது. அப்போது கூட சங்கத்தின் வழக்கமான வேலை தொடர்ந்து நடைபெற்றது. மேலும் சங்கம் நேரடியாக எதையும் செய்வதில்லை என முடிவெடுத்தது"
(முற்கூறிய நூல் பக்கம் 41)

ஆர்.எஸ்.எஸ் மறைமுகமாக என்ன பெரும்பணியைச் செய்துக் கொண்டிருந்தது என்பதைப் பற்றி ஆர்.எஸ்.எஸ்.ஸின் எந்த வெளியீடும் கூற வில்லை.

இருந்த போதிலும் இந்த வழக்கமான வேலை எதுவெனக் கண்டறிவது சிரமமானதல்ல. இந்துக்கள், முஸ்லிம்களிடையே வேற்றுமையைக் கூர்மைப்படுத்துவதும், நிலைமையை மோசாமாக்குவதும் தான் அந்த வழக்கமான வேலை. இதற்காகப் பிரிட்டிஷார்கள் ஆர்.எஸ்.எஸ்.ஸுக்குப் பல நன்மைகளைச் செய்தார்கள். பிரிட்டிஷ் ஆட்சியின்போது ஆர்.எஸ்.எஸ். மற்றும் முஸ்லிம் லீக் ஆகியவை ஒருபோதும் தடை செய்யப்பட்டதில்லை.

சுதந்திரப் போராட்டத்தின் போது பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிரான இந்திய மக்களது ஒட்டுமொத்தமான போராட்டமாக அமைந்தவை அனைத்தையும் ஆர்.எஸ்.எஸ் கடுமையாக வெறுத்தது. மூவர்ணக்கொடி



விடயத்தில் இது பட்டவர்த்தனமாகத் தெரிந்தது. 1929 இல் நடந்த காங்கிரஸின் இலாகூர் மாநாடு பூரண சுயராஜ்யமே தனது இலட்சியமென அறிவித்ததோடு 1930 ஜனவரி 26 ஆம் தேதியன்று மூவர்ணக்கொடி ஏற்றி அந்த நாளை சுதந்திர தினமாகக் கொண்டாடும் படி மக்களுக்கு அழைப்பு விடுத்தது. இதே நேரத்தில் ஆர்.எஸ்.எஸ்.ஸின் சர்சங்சாலக்காக இருந்த ஹெட்கேவார் எல்லா சகாக்களுக்கும் அனுப்பிய சுற்றறிக்கையில் காவிக்கொடியை வணங்கும் படி கூறினார். இன்று வரையிலும் கூட ஆர்.எஸ்.எஸ் விழாக்களில் தேசியக் கொடியான மூவர்ணக் கொடி பயன்படுத்தப் படுவதில்லை.

கஷ்மீரிலுள்ள ஸ்ரீநகர் லால் சௌக்கில் மட்டும் மூவர்ணக்கொடியேற்றி தேச விரோதச் சக்திகளுக்குச் சவால் விடுவதாக காட்டிக் கொள்கிறது ஆர்.எஸ்.எஸ். மற்றபடி அது தேசியக் கொடியை அவமதிக்கிறது. தேசியக் கொடியையும், இந்திய அரசியல் சாசனத்தை யும் ஏற்க மறுக்கிறன நாட்டின் பல பகுதிகளி லுள்ள போராளிக்குழுக்கள் மரணத்தைக் கொண்டும், சிறைவாசத்தைக் கொண்டும் தண்டிக்கப்படுகிறது, அதே செயல்களை செய்துக் கொண்டிருக்கிற ஆர்.எஸ்.எஸ். மட்டும் தேசப் பக்தியின் தூதுவனாகப் பார்க்கப் படுவது வேடிக்கையானது. ஜூலை 14, 1946 அன்று நாக்பூரில் குருபூர்நிமாவின் போது பேசிய கோல்வால்கர் காவிக் கொடி தான் தமது கலாச்சாரத்தைப் பிரதிபலிப்பதாகக் கூறினார். அது தெய்வத்தின் வெளிப்பாடு. கடைசியில் இந்தத் தேசம் முழுவதுமே காவிக் கொடிக்குத் தலைவணங்கும் என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம்." (ஸ்ரீ குருஜி சாமகர் தர்ஷன், தொகுதி 1, பக்கம் 18)

சுதந்திரத்திற்குப் பிறகும் கூட ஆர்.எஸ். எஸ். தேசியக் கொடியை ஏற்றுக்கொள்ள மறுத்தது. கோல்வால்கர் தனது "சிந்தனைத் தொகுதி" (தமிழில் ஞானகங்கை) நூலில் "விலகுதல்" என்ற தலைப்பில் தேசியக்கொடி விவகாரத்தைப் பற்றி பேசுகிறார்: "உதாரண மாக நமது தலைவர்கள் நம் நாடுக்கென்று புதிய கொடியை உருவாகியுள்ளார்கள். அவர் கள் என் அப்படி செய்கிறார்கள்? இது விலகிச் செல்லுதல் மட்டுமல்ல காப்பியடித்தலும் கூட நமது நாடு பெருமைமிக்க கடந்த காலத்துடன் கூடிய பழைமையான உன்னதமான தேசம் நமக்கென்று ஒரு கோடி கிடையாதா? இந்தப் பல்லாயிரம் வருடங்களில் நமக்கென தேசியச் சின்னம் இல்லையா? சந்தேகமில்லாமல் நமக்கெனவை இருந்தன. பிறகு ஏன் நமது மனங்களில் இவ்வளவு பெரிய சூன்யம்?' (பக்கம் 237 - 238)

பிப்ரவரி 4, 1948 அன்று ஆர்.எஸ்.எஸ். தடை செய்யப்படுவதற்கு அது தேசியக் கொடியை நம்பாததும் காரணமாகச் சுட்டிக் காட்டப்பட்டது. காங்கிரசிலிருந்த சில ஆர்.எஸ்.எஸ். அனுதாபிகள் அந்தத் தடையை இரத்து செய்ய முயன்றபோது 1948 நவம்பர் 14 நாளிட்ட உளதுறை அமைச்சகத்தின் சுற்ற றிக்கை இப்படிக்கூறியது "ஆர்.எஸ்.எஸ். ஸுடன் தொடர்புடைய மக்கள் ஈடுபடுகிற நட வடிக்கைகள் தேசவிரோதமாகவும், வன்முறை யானதாகவும் இருப்பதாக அரசுக்குத் தகவல் கள் கிடைக்கின்றன. ஆர்.எஸ்.எஸ். இந் நாட்டில் மோசமான பின்விளைவுகளை உண்டாக்கக் கூடிய ஒரு சூழ்நிலையை உயிர்ப்பித்துக் கொண்டுள்ளது"

மேலும் அதில் கூறப்பட்டது :

பிரதமருக்கும், உள்துறை அமைச் சருக்கும் எழுதிய கடிதங்களில் கோல்வால்கர் இந்தியா மதசார்பற்ற நாடு என்பதையும் தேசியக் கொடியையும் ஏற்றுக் கொள்வதாகக் கூறி ஆர்.எஸ்.எஸ். மீதான தடையை விலக்கக் கோரினார்." ஆர்.எஸ்.எஸ். தலைவர் சந்தர்ப்ப வசத்தால் இப்படிச் சொன்னாலும் அவரது சங்க ஊழியர்களுக்கு அப்படிச் சொல்வ தில்லை. எனவே இந்திய அரசு உடனடியாகத் தடையை இரத்து செய்யவில்லை.

கோல்வால்கர் தான் இந்திய அரசியல் சாசனச் சட்டத்திற்கு விசுவாசமாய் இருப்பேன் என்றும் இந்திய தேசியக் கொடியை ஏற்றுக்கொள்கிறேன் எனவும் சொன்னப் பிறகு ஜூலை 11,1949 இல் ஆர்.எஸ்.எஸ். மீதான தடை இரத்துச் செய்யப்பட்டது. அப்போது உள்துறை அமைச்சராக இருந்தவர் ஆர்.எஸ். எஸ். ஸுக்குச் சாதகமான சர்தார் வல்லபாய் பட்டேல் என்பதை மறந்துவிடக்கூடாது.

ஆர்.எஸ்.எஸ்.இன்றுவரையிலும் கூட இந்திய அரசியல் சாசனச் சட்டத்திற்கோ, தேசியக் கோடிக்கோ விசுவாசமாக இல்லை என்பதை அதன் இப்போதைய வெளியீடான சிந்தனைத் தொகுதியைப் பார்த்தால் புரியும்.

குரு கோல்வால்கர் போன்ற ஆர்.எஸ். எஸ். பிரமுகர்கள் பிரிட்டிஷார் மீதான தங்கள் அன்பை மறைக்க முடியவில்லை. இந்தூரில் 1960 இல் பேசிய கோல்வால்கர் இப்படிக் கூறிப்பிட்டார்

"பிரிட்டிஷாரை விரட்டிவிட்டு இந்தியாவை விடுவிக்க பலரும் வித்வேகத்துடன் வேலை செய்தார்கள். பிரிட்டிஷார் போனதும் இந்த வேகம் மறைந்து விட்டது. அப்போது பிரிட்டிஷாருக்கு எதிராக அவ்வளவு வேகம் தேவையில்லாமல் இருந்தது. நமது உறுதி மொழியில் கூறியுள்ளது போல் நாட்டு விடுதலை நமது மதத்தை, கலாச்சாரத்தைக் காப்பாற்றுவதன் மூலம் பெறக்கூடியது என்பதை நினைவுப்படுத்திக் கொள்ள வேண்டும். பிரிட்டிஷாரை வெளியேற்றுவது பற்றி நம்முடைய உறுதிமொழியில் எதுவுமில்லை." (ஸ்ரீ குருஜி சாமகர் தர்ஷன், தொகுதி 4, பக்கம் 2)

பகத்சிங் ராஜ் குரு , சுகதேவ் போன்றோர் தமது சாதி, மதத்தை மறந்து பிரிட்டிஷாருக்கு எதிராகப் போராடி துறந்து தியாகம் செய்த பொது பிரிட்டிஷ் ஆட்சியாளர்களைத் தொந்தரவு செய்ய விரும்பாதவர்களும் இருந்திருக்கின்றனர். இவர்கள்தான் இன்றைக்கு இந்த நாட்டின் தேசப்பக்திக்கும், தேசியத்துக்கும் சொந்தக்காரர்களாகத் தங்களை அடையாளப்படுத்துகிறார்கள் என்பதுதான் வேடிக்கை.

**- தி இந்து ஆங்கிலம் 22.08.1999**

**ஆனைமலையில் நடந்த**

**பொதுக்கூட்டம்**

# இந்திய தீவிரவாதத்தின் உண்மை முகம்

## கருத்தரங்கம்



தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் இந்திய தீவிரவாதத்தின் உண்மை முகம் என்ற தலைப்பில் சமுதாய விழிப்புணர்வு பொதுக்கூட்டம் (14-12-2014) ஞாயிற்று மாலை 6:00 மணிக்கு நடைப்பெற்றது. அதில் சிறப்புரையாற்றிய இராம. இளங்கோவன் அவர்கள் தீவிரவாதத்தின் வேர் எங்கிருந்து தொடங்கியது என்றும் இன்னும் அது எப்படியெல்லாம் உருவெடுத்திருக்கின்றது என்பதை பற்றியும் எடுத்துரைத்தார்.

நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றிய மவ்லவி பஷீர் அவர்கள் இன்றைய தீவிரவாதத்தின் உண்மை நிலையென்ன என்பதை கேட்பவர்கள் உள்ளத்தில் பதியும் படி பதிவுசெய்தார்.

நிகழ்ச்சியின் ஒருங்கிணைப்பாளர் மற்றும் தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் தலைவருமான மு.குலாம் முஹம்மது அவர்கள் உரையாற்றுகையில்: தீவிரவாதத்தின் அடிப்படைகளையும் அதன் இன்றியமையாத தத்துவங்களையும் விளக்கிக் கூறினார்.

சகோதரர். அஸ்கர் அவர்கள் நன்றியுரை ஆற்றினார்கள். இக்கூட்டத்தில் திரளாக மக்கள் கலந்து கொண்டதோடு மட்டுமின்றி தங்கள் மேலான ஆலோசனைகளையும் கருத்துகளையும் தெரிவித்தனர் மேலும் இதில் காவல் துறையினரும் பெருவாரியாக கலந்துக்கொண்டனர்.

# வாஜ்பேயின் தேசபக்தி கேள்விக்குள்ளாகிறது!



**வா**ஜ்பேயி 1942 ஆம் ஆண்டு பிரிட்டிஷ் போலிசுக்குத் தந்த ஒப்புதல் வாக்கு மூலத்தால் ஐந்தாண்டுகள் சிறைத் தண்டனை பெற நேர்ந்த சுதந்திரப் போராட்ட வீரர் லீலாதர் பாஹ்பாய் செப். 18, 1999 அன்று டெல்லியில் பத்திரிக்கையாளர்களைச் சந்தித்துப் பேசினார்.

வாஜ்பாய் சுதந்திரப் போராட்ட இயக்கத்திற்குத் துரோகம் செய்துவிட்ட தாகவும், தன்னை தேசப் பக்தர் எனவோ அல்லது விடுதலைப் போராட்ட வீரர் எனவோ கூறுவதற்கு வாஜ்பாய்க்கு அருகதை இல்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்த விவகாரம் பற்றிக் கடந்த சில வருடங்களில் பலமுறை பேசப் பட்டாலும் நேரடியாகப் பாதிக்கப் பட்டவர்களில் ஒருவர் இப்படிப் பேசுவது இதுவே முதல் முறையாகும்.

அனைத்திந்திய விடுதலைப் போராட்ட வீரர்களின் அமைப்பு ஏற் பாடு செய்திருந்த இந்தப் பத்திரிக்கை யாளர் சந்திப்பில் பேசிய முதிய சுதந் திரப் போராட்ட வீரர்கள் வாஜ்பேயி தனது சுய சரிதையில் தன்னையொரு தேசபக்தர், சுதந்திரப் போராட்ட வீரர் என்று குறிப்பிட்டிருப்பதைத் திருத்த வேண்டும் எனக் கோரிக்கை வைத்தனர்.

1942 இல் வாஜ்பேயி போலீஸாருக்குத் தந்த வாக்கு மூலம் தான் சில அரசுக் கட்டடங்களில் காங்கிரஸின் மூவர்ணக் கொடியை ஏற்றிய மூன்று நபர்கள் பிரிட்டிஷாரால் சிறையில் அடைக்கப் பட காரணமாய் இருந்தது. அந்த மூவரில் ஒருவர் தான் லீலாதார் பாஜ்பாய்.

சம்பவங்களை ஞாபகப்படுத்திப் பேசிய பாஜ்பாய் 1942 இல் காந்தி விடுத்த “வெள்ளையனே வெளியேறு” என்ற அழைப்பு தனக்கு உந்துதலாய் இருந்ததாகவும் எனவே ஆக்ரா மாவட்டம் பத்தேஸ்வர் கிராம மக்களை இந்த இயக்கத்துக்கு அணி திரட்டிய தாகவும் கூறினார்.(பத்தேஸ்வர் வாஜ் பேயி பிறந்த கிராமம்).

1942 ஆகஸ்டு 27 அன்று லீலாதார் பாஜ்பாய் தலைமையில் சென்ற ஊர்வலம் இரண்டு அரசுக் கட்டடங்களில் காங்கிரஸ் கொடியை ஏற்றியது. இதில் ஓர் அரசுக் கட்டடம் வன இலாகா அலுவலகமாயிருந்தது. இந்த ஊர்வலத்தில் வாஜ்பேயும், அவரது சகோதரர் பிரேம் பிஹாரி வாஜ்பேயும் கலந்து கொண்டனர்.

ஊர்வலம் வன்முறை எதுவுமின்றி

யாருக்கும் சேதம் விளைவிக்காமலே நடந்ததாக பாஜ்பாய் கூறுகிறார். ஊர் வலத்தினர் வன இலாகா அலுவலகத்துச் சுவரைச் சேதப்படுத்தினர் என்றும் இன்னொரு கட்டடத்திற்குத் தீ வைத்தனர் எனவும் பிரிட்டிஷ் போலீசார் உருவாக்கிய கட்டுக்கதைகள் வாஜ்பேயி மற்றும் அவரது சகோதரரது ஒப்புதல் வாக்குமூலங்களால் பலம் பெற்றன. இதனால் மூவர் கைதானார்கள். அதில் லீலாதர் பாஜ்பாய்க்கு ஐந்தாண்டுகள் சிறைத் தண்டனை வழங்கப்பட்டது.

பிரிட்டிஷ் போலீசாருக்கு அடல் பிஹாரி வாஜ்பேயி அளித்த வாக்குமூலம் மாஜிஸ்ட்ரேட்டின் குறிப்புகள் (வாக்குமூலம் தன்னிச்சையாகத் தரப்பட்டது; மேலும் வாஜ்பேயால் சரியென்று ஒத்துக்கொள்ளப்பட்டது.) தண்டனை உத்தரவு ஆகியவற்றின் நகல்கள் பத்திரிக்கையாளர்களிடையே தரப்பட்டன.

போலீசுக்கு தந்த வாக்குமூலத்தில் வாஜ்பேயி கூறியுள்ளதாவது : “ நான் எந்தச் சேதமும் விளைவிக்கவில்லை, அந்த கட்டடத்தை இடிப்பதற்கு நான் எந்த உதவியையும் செய்யவில்லை. பாஜ்பாயும், மஹூவனும் பத்தேஸ்வர் கடை வீதியில் பேசினார்கள்; அதன் மூலம் வனத்துறை சட்டங்களை மக்கள் மீறும்படிச் செய்தார்கள். சுமார் 200 பேர் வன இலாகா அலுவலகத்துக்குப் போனபோது நானும் எனது சகோதரனும் பின் தங்கினோம். மஹூவன் மற்றும் லீலாதர் பாஜ்பாய் தவிர மற்றவர்களது பெயர்கள் எனக்குத் தெரியவில்லை. செங்கற்கள் விழுவதுப் போல எனக்கு தெரிந்தது. யார் சுவரை உடைத்திக் கொண்டிருந்தார்கள் என்பது தெரியவில்லை. ஆனால் நிச்சயமாக சுவரிலிருந்த செங்கற்கள் விழுந்து கொண்டிருந்தன.”

முன்னாள் எம்.பி.யும் சுதந்திரப் போராட்ட வீரருமான ஷாஸூ பூஷன் பேசியபோது வாஜ்பேயி உறுப்பினராக இருந்த ஆர்.எஸ்.எஸ். அமைப்பு “வெள்ளையனே வெளியேறு” இயக்கத்தை ஆதரிக்கவில்லை என்பதைக் குறிப்பிட்டார். அனைத்திந்திய சுதந்திரப் போராட்ட வீரர்களது அமைப்பின் செயலாளர் டி.எஸ்.ஏடல் பேசும்போது இன்றும் கூட இச்சம்பவம் பொருத்தமானது; ஏனென்றால் கடந்த காலத்தை நிகழ் மற்றும் எதிர் காலங்களிலிருந்து பிரிக்க இயலாது, பிரிக்கவும் கூடாது என்றார். மதச்சார்பின்மை, ஜனநாயகம் மற்றும் சமூக நீதி ஆகியவை முக்கியமானவை; இந்தத் தேர்தல்களுக்கும் அவை பொருத்தமானவை என்றும் அவர் கூறினார்.

சுதந்திரம் கிடைத்தவுடனே போராட்டம் முடிந்துவிடவில்லை. எப்போதெல்லாம் நாட்டின் சுதந்திரத்திற்கு ஆபத்து வருகிறதோ அப்போது விடுதலைப் போராளிகள் அதனை எதிர்த்துப் போராடுவார்கள்” எனவும் ஏடல் கூறினார்.

**தி இந்து ஆங்கிலம் நாளிதழ் 19.09.1999**




Rs.90/-

# நூல் அரங்கம்

**வெ**ளிவந்து விட்டது விரிவாக்கப்பட்ட மூன்றாம் பதிப்பு!

பிரிவினைக்கு 'நாங்கள் காரணமல்ல' என்பதை முஸ்லிம்கள் பிரச்சாரம் செய்திட வேண்டிய காலம் ஒன்றிருந்தது. காரணம், தேசப்பிரிவினையைக் காரணம் காட்டி வருடந்தோறும் கலவரங்கள் நிகழ்த்தப்பட்டன. அதில் அவர்கள் குறி வைத்து கொலைச் செய்யப் பட்டார்கள். இடைவிடாமல் சுமத்தப்பட்ட பழிகளினால் முஸ்லிம்கள் ஒருவித குற்ற உணர்வுக்கு ஆளாகி நின்றார்கள். ஆனால் சொல்லப்பட்ட அத்தனை குற்றச்சாட்டு களும், சுமத்தப்பட்ட அத்தனை பழிகளும், பொய், புரட்டுக்கள் ஆகியவற்றை கொண்டு எழுதி குவித்த காகித குப்பைகள்.

முஸ்லிம்கள் இந்தக் குற்ற உணர்விலிருந்து விடுபட முடியாமல் குழம்பி நின்ற நிலையில்தான் இந்த சிறு கையேடு புழக்கத்தில் வந்தது. இந்த சிற்றேடு தந்த தெளிவில், தேசப் பிரிவினைக்கு யார் கரணம் என்பது தெளிவாக விளங்கியது. இதனிடையே அபுல்கலாம் அசாத் அவர்களின் மறைத்து வைக்கப்பட்ட 30 பக்கங்களும் 1988 ஆம் ஆண்டு வெளியே வந்தன. இந்த பக்கங்கள், முஸ்லிம்களின் மேல் சுமத்தப்பட்டு வந்த பழியை வெகுவாகத் துடைத்தன. இந்துத்துவத்தின் மூளை எனக்கருதப்பட்ட கே.ஆர்.மல்கானி, தேசப்பிரி வினைக்கு முஸ்லிம்கள் காரணமல்ல எனப் பிரகடனப் படுத்தினார்.

1999 - இல் இந்தியாவின் 'வைசிராய்' - அதாவது ஆங்கில ஏகாதிபத்தியத்தின் பிரதி நிதியாக இருந்த லார்டு வேவல் **(Lord Wavell)** அவர்களின் கடிதங்கள் வெளிவந்தன. அத்தோடு இந்தியாவுக்கு அதிகார மாற்றங்கள் செய்யப்பட்ட ஆவணங்களும் வெளிவந்தன. அவற்றை **"Transfer of power papers"** (டிரான்ஸ்ஃபர் ஆஃப் பவர் பேப்பர்ஸ்" என்பார்கள். அவையும் வெளி வந்தன. அவையும் பிரிவினைக்கு யார், யார் காரணம் என்பதை தெளிவுப்படுத்தின. அவற்றின் சாரமும் இந்த நூலில் இடம் பெற்றுள்ளன.

2005 ஆம் ஆண்டு, ஒரு நிகழ்வு. அது இந்துத்துவாவையும், முஸ்லிம்களையும் இதர சிறுபான்மை இனத்தவர்களையும், கொலை செய்வதை ஜனரங்கப்படுத்திய, அன்றைய பாரதிய ஜனாதா கட்சியின் தலைவர் எல்.கே.அத்வானி, பாகிஸ்தான் சென்றார். அங்கே வைத்து தேசப் பிரிவினையில் மொத்தமாகக் குற்றம் சுமத்தப்பட்ட முஹம்மத் அலீ ஜின்னா மதவாதி அல்ல. அவர் மதச்சார் பற்றவர் என்றார். பின்னர் எல்.கே.அத்வானி தன் வாழ்க்கை வரலாற்றை 2008ஆம் ஆண்டு வெளியிட்டார். அதற்கு 'எனது நாடு, எனது வாழ்க்கை'**(My Country, My Life)** எனப்பெயரிட்டார். அதிலும் இதனைக் குறிப்பிட்டார். அதனை இந்த நூலில் இணைத்துள்ளோம்.

தொடர்ந்து 2009 ஆம் ஆண்டு பாரதிய ஜனதா கட்சியின் முக்கிய அமைச்சராக இருந்த 'ஜஸ்வந்த் சிங்' ஒரு நூலை எழுதினர். அதற்கு "ஜின்னா - இந்தியா - பிரிவினை - விடுதலை" எனப் பெயரிட்டார். அதிலும் தேசப்பிரி வினையின் யதார்த்தங்களைப் பதிவு செய்தார். உண்மையைச் சொன்னதால் கட்சியிலிருந்து விலக்கி வைக்கப் பட்டார். அவர் தனது நூலில் குறிப்பிட்ட வற்றையும் இந்த நூலில் இடம் பெறச் செய்தோம். இவற்றால் இது,விரிவாக்கப் பட்ட பதிப்பாகின்றது. எனினும் நூலின் அளவில் பெரிய மாற்றம் இல்லை. சிலபல பக்கங்கள் கூடுவதைத் தவிர்த்திட இயல வில்லை.

வாசகர்களின் ஆதரவை தொடர்ந்து எதிர்பார்கின்றோம். இன்ஷா அல்லாஹ் இறைவனின் அருளால் எங்கள் இலக்கிய பணி தொடர்கின்றது. இவற்றின் வழி மத பாசிசத்தை வீழ்த்தி வலுவான இந்தியாவை உருவாக்குவோம்.

வெளியீடு :

வேர்கள் பதிப்பகம்
52/1, மண்ணடி தெரு,
மண்ணடி,சென்னை-600001.
**Mob:** 81481 29887, 9841675657





# எஸ்.பி.பட்டிணம் தொடரும் காவல்துறையின் சூழ்ச்சிகள்!

இராமநாதபுரம் மாவட்டம் **sp** பட்டிணத்தை சேர்ந்த செய்யது முஹம்மது என்ற இளைஞன் கடந்த அக்டோபர் மாதம் விசாரணை என்ற பெயரில் காவல் நிலையத்துக்கு அழைத்து செல்லப்பட்டு அங்குள்ள துணை கண்காணிப் பாளர் காளிதாஸ் மற்றும் இதர காவலர்களால் கடுமையாக தாக்கப்பட்டதால் இறந்து போகவே இதற்கு **SI** காளிதாஸ் செய்யது முஹம்மது தன்னை கத்தியால் தாக்க வந்ததால் தான் துப்பாக்கியால் அவரை சுட்டு கொன்றதாக கூறியது தமிழகம் முழுவதும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது இந்நிலையில் இவ்வழக்கின் முக்கிய குற்றவாளியான **SI** காளிதாஸ் பனி இடைநீக்கம் செய்யப்பட்டார்.

இது என்கவுண்டர் வழக்கு என்பதால் உச்ச நீதிமன்ற வழி காட்டுதல் படி மாஜிஸ்ட் ரேட் விசாரணை நடந்து வருகிறது இவ் விசாரணை நடந்து வரும் வேளையில் **si** காளிதாசை மீண்டும் பணியில் அமர்த்து வதற்கான வேலை நடந்து வருவதாக இவ் வழக்கின் வழக்கறிஞர் ஜின்னா அவர்கள் நம்மிடம் தெரிவித்தார் இதனை பற்றி ஜின்னா அவர்கள் கூறும்போது.

இந்த வழக்கில் இறந்து போன செய்யது முகமது அவர்களின் பிரேத பரிசோதனை இரண்டு **MD** மற்றும் **MS** டாக்டர்கள் குழுவால் நடைப்பெற்றது. உடலில் குண்டுகள் எதுவும் துளைத்து வெளியேறாததால் இந்த என் கவுண்டர் சந்தேகத்தை ஏற்படுத்துகிறது ஏனென்றால் அருகில் இருந்து துப்பாக்கியால் சுடும் போது குண்டுகள் கண்டிப்பாக வெளியே வந்து விடும் இங்கு குண்டுகள் வலது கையின் தோல் பட்டையில், தலையில் மற்றும் நெஞ்சில் பாய்ந்துள்ளன.இதில் ஒரு இடத்தில் கூட குண்டு வெளியேறவில்லை நாங்கள் அந்த குடும்பத்தின் சார்பாக பிரேத பரிசோதனையின் போது அருகில் இருந்தோம் மஜிஸ்ட்ரேட் **inquest report** தயாரிக்கும் போது மாலை 5 மணிக்கு மேல் பிரேத பரிசோதனை செய்யக் கூடாது எனச் சட்டம் இருக்கும் போது 5;30 மணிக்கு பிரேத பரிசோதனை செய்துள்ளனர் என்றார்.

எனவே நாங்கள் (16.10.2014) அன்று மதுரை உயர்நீதிமன்றத்தில் மறு பிரேத பரி சோதனை செய்யப்பட வேண்டும் என கேட்டிருந்தோம். ஏனெனில் முன்னர் செய்யப் பட்ட பிரேத பரிசோதனை குண்டு துளைப் பதை பற்றித் தெரிந்த **BALESTIC EXPERTS** வெடிகுண்டு நிபுணர்களை கொண்டு செய்யப் படவில்லை. எனவே இந்நிபுணர்களை கொண்டு பிரேத பரிசோதனை செய்யப்பட வேண்டும் என கோரிக்கை வைத்தோம் மேலும் பத்து இலட்சம் நஷ்ட ஈடு, குடும் பத்தில் ஒருவருக்கு வேலை, சி.பி.ஐ.டி.க்கு விசாரணை மாற்றப்பட வேண்டும் என்றும் கேட்டிருந்தோம். அதற்கு அரசு, பதில் மனு வில் குண்டு துளைக்கப்பட்ட பகுதி தடைய அறிவியல் பரிசோதனைக்கு அனுப்பப் பட்டதாக தெரிவித்ததோடு நஷ்ட ஈடாக ஐந்து இலட்சம் மற்றும் குடும்பத்தினரில் ஒருவருக்கு வேலை சி.பி.சி.ஐ.டி. விசா ரணைக்கு உத்தரவிட்டுள்ளதாகவும் தெரி வித்தனர்.

இதனை ஏற்றுக் கொண்ட நீதிபதி இரண்டாவது பிரேதப் பரிசோதனை தேவை யில்லை என்று கூறிவிட்டார். ஆனால் மாஜிஸ் டிரேட் விசாரனையோ இதுவரையில் காவல் துறையின் சூழ்ச்சியின் படியே நடந்து வரு கிறது. சாட்சிகளும் காவல்துறை சொல்லிக் கொடுப்பதையே நீதிபதிகளிடம் முன் மொழிகின்றனர். இதன் மூலம் காவல்துறை இவ்வழக்கை ஒன்றுமில்லாமல் ஆக்க முயற்சித்து வருகிறது. இவ்வழக்கில் சி.பி.சி.ஐ.டி. விசாரணையும் ஆமை வேகத்தில் நடைபெறுகிறது. இவ்வாறாக இவ்வழக்கை நீர்த்துப் போக வைக்க அனைத்து வேலை களையும் காவல்துறை செய்து வருவது வெட்ட வெளிச்சமாகிறது.

தொடர்ச்சி 46 ஆம் பக்கத்தில்

# முஸ்லிம்களின் வீழ்ச்சியால் உலகம் இழந்ததென்ன?

# பரிதாபம்! துர்பாக்கியம்!



மொழிபெயர்ப்பு : அஹ்மது ஜலாலுத்தீன் நத்வி

அபுல் ஹசன் அலீ நத்வி

இஸ்லாமியத் தலைமையிடம் இருந்திட வேண்டிய இரண்டு இன்றியமையா தகுதிகளில் முதல் தகுதியான "ஜிஹாத்" பற்றி முன்னர் பார்த்தோம். இப்போது மற்றொரு தகுதியான "இஜ்திஹாத்" பற்றிப் பார்ப்போம்.

**இஜ்திஹாத்**

முஸ்லிம்களுக்கு தலைமையேர்ப் பவர்கள் தம் காலத்தில் வாழும் முஸ்லிம் களும் தம் ஆளுகையின் கீழ் வாழும் இதர சமுதாயத்தினரும் நிகழ்கால உலகமும் எதிர் கொள்ளும் பிரச்சனைகளுக்குத் தீர்வு சொல் பவராகவும் சிக்கல்களை அவிழ்ப்பவராக இருந்திட வேண்டும்.

சட்ட நூல்களும் முன்னோர்களின் முன் மாதிரிகளும் கூறிடாத புதிய பிரச்சனை வரும் போது திடீரென ஒரு சட்டச்சிக்கல் தோன்றும் போது இவர் அதற்கான தீர்வைத் தந்திட வேண்டும். இஸ்லாத்தின் ஜீவனைப் புரிந்து மார்க்கத் தின் அந்தரங்கத்தை விளங்கி, இஸ்லாமிய சட்டத்துறையின் அடிப்படைகளை அறிந்து (தாம் தனியாகவோ அல்லது தகுதி மிக்கவர்களின் துணையுடனோ சட்டங் களை அகழ்ந்தெடுத்துத் தந்து சமுதாயத்தை பிரச்சனைகளில் இருந்து மீட்கும் வலிமை மிக்கவராக அந்தத் தலைவர் திகழ்ந்திட வேண்டும்.

கூர்ந்த மதியும் செயல் திறனும் கடும் முயற்சியும் அறிவாற்றலும் பெற்றுத் திகழ்ந்திட வேண்டும் அந்த தலைமை. இவற்றின் மூலம் இவ்வுலகில் அல்லாஹ் படைத்துள்ள இயற்கை வளங்களையும் பூமியின் மேற்பரப்பிலும் அடிப் பரப்பிலும் அல்லாஹ் வைத்துள்ள செல்வங்கள் செல்வத்தின் ஊற்றுக்கள், வளங்கள் அனைத்தையும் கண்டறிந்து அவற்றை இஸ்லாத்தின் நலனுக்கு அவர் பயன்படுத் திட வேண்டும். அசத்தியவாதிகள் தம் மன விருப்பங்களை நிறைவேற்றிக்கொள்ளவோ, பூமியில் அசாத்தியக் கோட்பாடு வலிமை பெறவோ, ஷைத்தானின் ஆதிக்கம் நிலை பெறவோ குழப்பம் தலை தூக்கவோ அவற்றைப் பயன்படுத்திட இஸ்லாமியத் தலைமை வழிவிட்டு விடக் கூடாது. இதுவே "இஜ்திஹாத்" இன் பொருள்.

**இடம் மாறிய தலைமை**

இஸ்லாமிய அரசின் தலைமையிடம் இருந்திட வேண்டிய அந்த மாண்புகள் நேர்வழி பெற்ற கலீஃபாக்களிடம் மிக நிறை வாகவே இருந்தன. அதன் பின்னர் இந்த உயர்ந்த இஸ்லாமியத் தலைமைக்கு வந்த வர்கள் நேர்வழி பெற்ற கலீஃபாக்கள் போல் இருக்கவில்லை.

பரிதாபம்! உலகத்துக்கே ஒரு துர்பாக்கியம்! இப்படிப்பட்ட உயர்ந்த

தலைமைக்கு அருகதையற்றவர்கள் திறமை வற்றிப் போனவர்கள் மார்க்க ஒழுக்கங்களும், நற்பண்புகளும் தம் சுபாவமாக அமையப் பெறாதாவர்கள் வந்து அமர்ந்தது மனித குலத்துக்கே கேடாகிவிட்டது.

இவர்களிடம் மார்க்கத்துக்காக அறப்போர் புரிந்திடும் உத்வேகமோ உலகம் மற்றும் மார்க்கப் பிரச்சனைகளுக்கு சரியான தீர்வை அகழ்ந்தெடுக்கும் திறனோ "கிலாஃபத்" எனும் பெரும் பொறுப்பை ஏற்றிடும் தகுதிகளோ இருக்கவில்லை. இப்படி நான் கூறுவது அப்பாசிய்யா, உமைய்யா ஆட்சியாளர்கள் அனைவருக்கும் பொருந்தும், நேர்வழிப் பெற்ற கலிஃபாக்களின் அடியொற்றி ஆட்சி நடத்திய கலீஃபா உமர் பின் அப்துல் அஜீஸ் (ரஹ்) இதில் விதிவிலக்கு.

**விழுந்தது ஓட்டை**

இவ்வாறு தகுதியற்றவர்கள் தலைமைப் பொறுப்பில் அமர்ந்ததால் இஸ்லாமியக் கோட்டையில் ஓட்டை விழுந்தன. இன்று வரை அந்த ஓட்டைகள் அடைக்கப்பட வில்லை. இஸ்லாமிய வாழ்வில் விரும்பத்தகாத மாற்றங்கள் நிகழ்ந்தன.

**மார்க்கமும் அரசியலும் வேறு வேறானது**

தகுதியற்றவர்கள் தலைமைப் பொறுப்பில் அமர்ந்த போது அன்றாட அலுவல்களில் மார்க்கத்தை விட்டு அரசியலை தனியாகப் பிரித்துவிட்டார்கள்.இந்த ஆட்சியாளர்கள் தம் காலத்து அறிஞர்களிடம் மார்க்க மேதைகளிடம் கருத்துக் கேட்காமலேயே முடிவு எடுத்திடும் அளவு மார்க்க அறிவோ மார்க்கப் பற்றோ உள்ளவர்களாக இருந்திட வில்லை.

இப்படி இருந்து கொண்டே மார்க்க அறிஞர்களின் வழிகாட்டுதல்களைக் கேட்காமல் அரசியலையும் அதிகாரத்தையும் கையில் வைத்துக்கொண்டு முடிவுகளை எடுத்துச் செயல்படுத்தினர். மார்க்க அறிஞர்களிடம் கருத்துக் கேட்க, வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டால், கருத்துக் கேட்கலாம் என்று அவர்களுக்குத் தோன்றினால்,சும்மா ஒப்புக்காக ஓர் அந்தரங்க ஆலோசகரிடம் கேட்பது. போலக் கேட்டு வைத்துக் கொள்வார்கள் அறிஞர்களிடம் கேட்டுத்தான் முடிவுகள் எடுக்கப்பட்டன என்று காட்டிவிட்டு பிறகு அதற்கு மாறாக மனம்போன போக்கில் முடிவுகளை அறிவித்தனர். அதுவரை மார்க்கத்தின் அடிமையாக இருந்த அரசியல் விடுதலை பெற்றது, இரோம,பாரசீக மன்னர்கள் போல இஸ்லாமிய அரசுக்கு தலைமையேற்றவர்களும் மன்னர்களாக ஆனார்கள். பல நேரங்களில் சர்வாதிகாரிகளாகச் செயல்பட்டனர். கட்டவிழ்ந்த ஒட்டகம் போல ஆயினர்.

இதனால் மார்க்கம் கற்ற அறிஞர்கள் சிலர் அரசுக்கு எதிராக போராடினார்கள். சிலர் தத்தமது சொந்த வேலைகளைப் பார்க்கப் போய்விட்டனர். இவர்களையெல்லாம் திருத்த முடியாது என்றெண்ணி தம்மைச் சுற்றி நடக்கும் எதையும் கண்டு கொள்ளாமல் இருந்து விட்டனர். பார்த்தும் கேட்டும் என்ன ஆகப்போகிறது! நம் கையில் என்ன இருக்கிறது! என்று புலம்பி, பெருமூச்சு விட்டு, வருந்தினர்.வேறு சிலர் தனிமனித நலனையும் மார்க்க நலனையும் கருதி அரசுக்கு ஒத்துழைப்பு வழங்கினர். இப்படி இரு பிரிவாக மார்க்க அறிஞர்கள் தத்தமது சிந்தனையோட்டத்துக்கு ஏற்ப செயல்பட்டனர். இப்பொழுதுதான் மார்க்கமும் அரசியலும் ஒன்றல்ல. வேறு வேறானவை என்ற சூழல் ஏற்பட்டது.

இறக்கைகள் வெட்டப்பட்ட பறவை போல, கரங்கள் துண்டிக்கப்பட்ட வெற்றுடல் போல மார்க்கம் ஆகிவிட, அரசியலோ கட்டுப்பாடற்றுத் திரிந்தது, தாமே தடைகளைப் போட்டது. ஆணைகளைப் பிறப்பித்தது. இதனால் மார்க்கம் அறிந்தவர்கள் தனி அணியாகவும் உலகாதாயவாதிகள் தனி அணியாகவும் பிரிந்து நின்றனர். இவ்விரண்டு அணிகளும் ஒன்று சேரவே முடியாத அளவு காலப் போக்கில் பிளவு உறுதியானது. பல நேரங்களில் இவ்விரு அணிகளிடையே போட்டியும் பகையும் கூட ஏற்பட்டன.

**அதிகார வர்க்கத்தின் அஞ்ஞானப் போக்கு**

இஸ்லாமிய அரசுக்கு தலைமையேற்றியிருந்த கலீஃபா உட்பட அதிகாரிகள் எவரும் மார்க்கத்திலோ ஒழுக்கத்திலோ தன்னிறைவு பெற்றவர்களாவோ பின்பற்றத் தகுந்த முன்னோடிகலாகவோ இருக்கவில்லை. என்பது மாத்திரமல்ல அவர்களில் பலரிடம் ஜாஹிலிய்யா எனும் அஞ்ஞானத்தின் நடவடிக்கைகளும் எண்ண ஓட்டங்களும்

இருந்தன. அதிகாரிகளின் இலட்சணங் களும் நடத்தைகளும் பழக்க வழக்கங்களும் இப்படி இருப்பதைக் கண்ட பொது மக்கள் தாமும் அவ்வாறு வாழ்ந்திடத் தொடங் கினர். அதிகாரிகளைப் பார்த்து குடிமக் களும் கெட்டனர். மெள்ள மெள்ள குடிமக்கள் (ஜாஹிலிய்யா) அஞ்ஞான பழக்க வழக்கங்களை ஏற்று நடக்க ஆரம்பித்தனர்.

மார்க்கப்பற்றும் நல்லொழுக்கங் களும் மக்களிடமிருந்து மறைந்தன. தீமைக்கு எதிராக குரல் எழுப்பும் சுபாவம் அகன்றது. நன்மையை ஏவித் தீமையைத் தடுக்கும் இயக்கங்கள் எல்லாம் அதிகார மிழந்து போயின. இந்த இயக்கங்களை அரசு அரவணைக்கவில்லை. ஆதரிக்க வில்லை. எனவே குற்றவாளிகளை சட்டத் தின் முன் நிறுத்தும் வலிமையோ தண்டிக்கும் அதிகாரமோ இல்லாமல் போனதால் நன்மையை ஏவி தீமையைத் தடுக்கும் பாணி அறவே நின்று போனது. நன்மை செய்யாமல் இருக்கவும் தீமை செய்திடவுமான வாய்ப்புக்கள் வலிமை யாகவும் ஏராளமாகவும் இருந்ததால் இஸ்லாமிய அரசின் எல்லைக்குள்ளே ஜாஹிலிய்யா உயிர்பெற்று தலை தூக்கியது.

இஸ்லாமிய அரசின் குடிமக்களில் ஒரு பெரும் தொகையினர் ஆடம்பரம், உல்லாசம், களியாட்டம், கூத்துக்களில், புகுந்து கொண்டனர். அற்ப சுகங்களிலும் இச்சைகளிலும் மதியிழந்து மூழ்கினர். அக்கால முஸ்லிம்கள் வீண் விளை யாட்டுகளில் எப்படியெல்லாம் மூழ்கிக் கிடந்தார்கள். அருவருப்பான அலங்கோல வாழ்விலும் சுகம் கண்டார்கள் என்பதை யெல்லாம் நீங்கள் அறிந்திட விரும்பினால் “அல் அ ஙானீ” என்ற நூலையும் அறிஞர் ஜாஹிழ் எழுதிய “அல்ஹயவான்” என்ற நூலையும் ஒரு முறை படித்துப் பாருங்கள் புரியும்.

இப்படிப்பட்ட கீழான நடத்தை யிலும் ஒழுக்க வீழ்ச்சியிலும் கேளிக்கை களிலும், மூழ்கிக் கிடக்கும் ஒரு சமுதாயம் இஸ்லாத்தின் தூதை நடைமுறைப்படுத்த முடியுமா? நபிமார்களின் (இறைத்தூதர்கள்) பிரதிநிதிகளாய் இன்று உலகில் செயல்பட முடியுமா? அல்லாஹ்வையும் மறுமையை யும் நினைவில் நிறுத்தி பய பக்தியையும் மார்க்கப்பற்றையும் மக்களை வழி நடத்திட முடியுமா? முடியவே முடியாதல்லாவா? இதென்ன! இப்படிப்பட்ட கட்டுப் பாடற்ற வாழ்வை நிரந்தரமாக அனுபவித் திடக்கூட முடியுமா? முடியாதே! எவ்வளவு காலம் இப்படி மனம் போன போக்கில் வாழ்ந்திட முடியும்! இவர் களுக்கு ஒரு முடிவு உண்டு என்பது அல்லாஹ்வின் விதி இதோ அல்லாஹ் கூறுவதைப் பாருங்கள்!!

முன்னர் வாழ்ந்த சமுதாயத்திடம் அல்லாஹ் செயல்பட்ட வழி இது. அல்லாஹ்வின் வழிக்கு எந்த மாற்றத் தையும் “நீர் காண முடியாது”(33:62 )

(**அடிக்குறிப்பி** : நூலாசிரியர் அக்கால சமுதாய வாழ்வின் வீழ்ச்சியை விவரிக்கும் போது கிறிஸ்தவர்கள் பூர்வீக கிறிஸ்தவத்தை விட்டு விட்டு சிலையை வணங்கிடவும், நெருப்பை வணங்கிடவும் தலைப்பட்டு விட்டது போல முஸ்லிம்கள் இஸ்லாத்தை விட்டு முழுவதுமாக வெளியேறிவிட்டதாக வாசகர்கள் கருதிட வேண்டாம். இவ்வளவு ஒழுக்க வீழ்ச்சிக்கு மத்தியிலும் கூட அக்காலத்திலுள்ள இதர சமுதாயங்களை விட முஸ்லிம்கள் மேம்பட்டு இருந்தனர் என்பதே உண்மை.)

தொடரும்.........

தமிழ் வடிவம் - **கே.எம்.இலியாஸ் ரியாஜி.M.A**

# தரிக்குல் குர்ஆன் அடுத்த இதழில் தொடரும் இன்ஷா அல்லாஹ்.

தொடர் - 4

# முஹம்மத்(ஸல்) அவர்கள் நமது காலத்திற்காக அனுப்பப்பட்ட நபி.

- கரன் ஆம்ஸ்டிராங்.

அல்லாஹ்வின் இறுதித் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களின் வாழ்க்கையைப் பற்றி ஆய்வாளர், மற்றும் எழுத்தாளர் "கரன் ஆம்ஸ்டிராங்" அவர்கள் பல உண்மைகளை நமக்கு வெளிச்சம் போட்டு காட்டுகிறார். இந்த உண்மைகளின் வழி பெருமானார் (ஸல்) அவர்கள் இன்றைய உலகுக்கும், நாம் வாழும் இந்த காலக்கட்டத்திற்கும் ஓர் உயர்ந்த வழிகாட்டி என்பதைத் தெளிவுப் படுத்துகிறார். அவருடைய ஆய்வுகளை இங்கே தொடர்ந்து நாம் தந்து கொண்டி ருக்கிறோம்.

இந்த வழியில் சென்ற இதழில் பெருமானார்(ஸல்) அவர்களை நாம் புரிந்திட பெரும் பங்காற்றியவர்களைக் குறிப்பிட்டார். மேலும் அவர்களை பாராட்டினார். தொடக்க நாட்களில் பெருமானார்(ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றை நமக்கு ஆவணப் படுத்தித் தந்தவர்கள் மனித இனத்திற்கே பெரிய சேவையைச் செய்தவர்கள் என்று புகழ்ந்து நன்றியும் சொன்னார் கரன் ஆம்ஸ் டிராங். இதில் அந்த நல்லவர்கள் தந்த ஆவணங் களைப் பற்றிய தனது அழ்ந்த கருத்தைப் பதிவு செய்கின்றார். அதனைப் பார்ப்போம்.

**அன்றைய வரலாற்று ஆவாளர்களின் அருந்தொண்டு**

"முஹம்மத் அவர்களின் வாழ்க்கை நமக்கு முகவும் முக்கியம். குறிப்பாக இன்றைய நாட்களில் இஸ்லாத்தையும், அதன் வழிகாட்டுதல்களையும் புரிந்திட முஹம்மத் அவர்களின் வாழ்க்கை வரலாறு ஒரு புதையல். அவர்கள் கிறிஸ்துவுக்குப் பின் கி.பி.570 முதல் 632 வரை வாழ்ந்த வர்கள். "

"முஹம்மத்(ஸல்)அவர்கள் வாழ்ந்த நாட்களில் அவர்களுடைய வாழ்க்கையில் நிகழ்வுகளும் அசைவுகளும் எவ்வளவு முக்கியமோ அதேபோல இன்றைக்கும் அவர்களின் வாழ்க்கையின் அனைத்து நிகழ்வுகளும் அசைவுகளும் நமக்கு முக்கியம் "

"அவர்களின் வாழ்க்கை இறைவன் இந்த உலகில் எப்படி நாம் வாழ்ந்திட வேண்டும் என விரும்பினானோ அதன் அசைக்க முடியாத எடுத்துகாட்டு. இறைவனிடம் - இறைவனுக்கு முற்றாகவும், முழுமையாகவும் சரணடைந்த ஒரு வாழ்க்கை அவர்களின் வாழ்க்கை! "

(அரபு மொழியில் சரணடைதல் என்பதே இஸ்லாம்) இப்படி சரணடைந்து விடுவது ஒவ்வொரு மனிதனும் இறை வனுக்குச் செய்திட வேண்டிய ஒன்று.

ஒவ்வொரு முஸ்லிமும் தான் எதிர் நோக்கிடும் பிரச்சனைகளுக்கு இஸ்லாம் தரும் தீர்வுகளை தேடிட தங்கள் ஆய்வை இறைவனின் தூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள் வாழ்ந்த காலத்திலிருந்து தொடங்கிட வேண்டும்.அதில் கிடைக்கும் தீர்வை அவர்கள் தங்கள் இன்றைய வாழ்க்கையில் செயல் படுத்திட வேண்டும்.

முஹம்மத்(ஸல்) அவர்களின்



மரணத்திற்குப் பின்னரும் இஸ்லாம் தொடர்ந்து பரவிக்கொண்டே இருந்தது. அவர்கள் மரணித்து நூறு ஆண்டுகளுக்கு பின்னர் இஸ்லாம் புதிய சூழ்நிலைகளையும் புதிய பழக்கவழக்கங்களையும், பண்பாடு களையும், கலாச்சாரங்களையும், நாகரிகங் களையும் கொண்ட மக்களைச் சென்றடைந் தது. அந்த மக்களெல்லாம் இஸ்லாத்தை விரும்பி ஏற்றுக் கொண்டார்கள்.

அந்த புதிய சூழ்நிலைகள், பழக்க வழக்கங்கள், பண்பாடுகள், கலாச்சாரங்கள், நாகரிகங்கள் வீசிய சவால்களை சந்திக் கவும், இஸ்லாம் வழங்கிய தீர்வுகளையும், திட்டங்களையும் கண்டேடுத்திடவும் இறைவனின் தூதர் அவர்களின் வாழ்க்கை வரலாறு தேவைப்பட்டது. அதனால் அன்றைய அறிஞர்கள், இறைவனின் தூதர் அவர்களின் வரலாற்றை தொகுத்தார்கள். அந்தப் பொக்கிஷத்தை அந்த மக்களிடம் ஒப்படைத்தார்கள்.

அந்த அறிஞர் பெருமக்கள் ஆய்வாளர்கள் இவர்கள் தொகுத்தவை அல்ஹதீஸ் என்றும் சுன்னா என்றும் வழங்க ப்பட்டன. “அல்ஹதீஸ்” முஹம்மத் (ஸல்) அவர்களின் வாக்கு. “சுன்னா” முஹம்மத்(ஸல்) அவர்களின் வாழ்க்கை! இவை அந்தந்த காலக்கட்டத்தில் வாழ்ந்த மக்களுக்கு வழிகாட்டின. அவையே முஸ்லிம்களை நெறிப்படுத்திடும் சட்டங் களாகவும் ஆகின.

“சுன்னா” என்ற முஹம்மத்(ஸல்) அவர்களின் வாழ்க்கை, யதார்த்த வாழ்க்கை யில், முஹம்மத்(ஸல்) அவர்களின் நடவடி க்கைகள் படி வாழ்ந்திட வழிகாட்டின. இதில் முஸ்லிம்கள் முஹம்மத் (ஸல்) அவர்கள் எப்படி பேசினார்களோ, எப்படி உணவுகளை உண்டார்களோ, எப்படி அன்பு செலுத்தினார்களோ, எப்படி குளிக் கவும், கழுவவும் செய்தார்களோ, எப்படி தொழு தார்களோ, அப்படியே செய் தார்கள். அதாவது முஸ்லிம்கள் முஹம்மத் (ஸல்) அவர்களின் வாழ்க்கையை அப்படியே தங்கள் வாழ்க்கையில் பிரதிபலித்தார்கள்.

இதையே வேறு சொற்களால் சொன்னால் முஹம்மத் (ஸல்) அவர்கள் மிகவும் நுண்ணிய பகுதிகளுக்கும் மிகவும் துல்லியமாக வழிகாட்டிவிட்டுச் சென்றார் கள்.முஸ்லிம்கள் முஹம்மத்(ஸல்) அவர் களின் வாழ்க்கையை அப்படியே பூமியில், பிரதிபலித்தார்கள்.

காரணம்; அவர்களும் முஸ்லிம்களும் முஹம்மத்(ஸல்) அவர்களின் அருங்குனங்களை அழகிய பண்புகளை அடைந்திட முடியும் என்ற நம்பிக்கையே! அதே நேரத்தில் எட்டாம் நூற்றாண்டுகள் முதல் முஸ்லிம் வரலாற்று ஆய்வாளர்கள் முஹம்மத் அவர்களின் வாழ்க்கை வரலாற்றை பதிவுச் செய்யவும் ஆவணப் படுத்திடவும் தொடங்கி விட்டார்கள்.

- இப்னு இஷ்ஹாக் (இவர்கள் கி.பி.767 - இல் இறந்தார்கள்).
- இப்னு உமர் அல் வாஹிதி (இவர்கள் கி.பி.820 - இல் இறந்தார்கள்.)
- முஹம்மத் இப்னு சாஅத் (இவர்கள் கி.பி.845 - இல் இறந்தார்கள்.)
- அபு ஜரீர் அத்தபாரீ (இவர்கள் கி.பி. 923 - இல் இறந்தார்கள்.)

இவர்கள் செய்த தொண்டுக்கு ஒப்பாரு மில்லை! மிக்காருமில்லை!

இந்த கோமேதகங்கள், தங்களுடைய நினைவுகளையும், தாங்கள் பெற்ற அனுபவங்களையும் மட்டுமே சார்ந்து நின்று வரலாற்றை வரைந்தவர்கள் அல்ல. மாறாக அவர்கள் வரலாற்றை முஹம்மத்(ஸல்) அவர்களின் வாழ்க்கையை ஆய்ந்தறிந்து திரும்பத் திரும்ப மறு ஆய்வுக் குட்படுத்தி ஆவணப்படுத்தினார்கள். ஒடிந்தும் உதிர்ந்தும் போகாமல் அவர்கள் அந்த வரலாற்றைக் கட்டமைத்துத் தந்தார்கள்.

அதற்கு முன்னாலிருந்த வரலாற்று ஆவணங்களைத் தங்கள் வரலாற்று வரை வில் உட்புகுத்தினார்கள். வாய்மொழியாக பல வரலாறுகள் அப்போது புழக்கத்தில் இருந்தன.அந்த வரலாற்றையும் அவற்றின் ஊற்றுக்கண் வரை சென்று கண்டு பிடித்தார்கள். அவற்றை சீர்தூக்கிப் பார்த்தார்கள். அவற்றின் உண்மைத் தன்மைகளை கண்டு பிடித்தார்கள். பின்னர் அவற்றை தங்கள் வரலாற்றில் இணைத்துக் கொண்டார்கள்.

முஹம்மத்(ஸல்) அவர்கள் சொன்ன தாக புழக்கத்தில் இருந்த வாக்குகளையும், ஆய்வுக்கு உட்படுத்தி அவற்றையும் தங்கள் எழுதிய வரலாற்றில் பிணைத்தார்கள். அவர்கள் அதாவது இந்த வரலாற்று ஆய்வாளர்கள் முஹம்மத்(ஸல்) அவர்களை தெய்வீக மனிதன் என்ற அளவில் கண்ணியப்படுத்தி தங்கள் இதயங்களில் வீற்றிருக்கச் செய்தார்கள்.

ஆனால் முஹம்மத் (ஸல்) அவர்களைப் பற்றி கிடைத்த தகவல் களையும், ஆவணங்களையும் விமர்சனங் களோடு ஆய்வுக்குட்படுத் திட அவர்கள் கிஞ்சிற்றும் தயங்கிடவில்லை. உண்மை களைக் கண்டெடுத்து உலகுக்கு முன் வைத்திட அவர்கள் எள்முனை அளவுக்கும் சளைத்திடவில்லை. தயங்கிடவும் இல்லை. அவர்களின் அதாவது நாம் மேலே குறிப்பிட்ட இந்த வரலாற்று ஆய்வாலர் களில் இமயத்தை, விஞ்சும் இந்தப் பொன்னரிய முயற்சிகளால் நமக்கொரு ஆய்ந்தறிந்த வரலாறு கையில் கிடைத்தது. உண்மையை உரக்க முழங்கினால் வேறெந்த வரலாற்று நாயகரைப் பற்றியும் கிடைக்காத அளவுக்கு நிறைவானதொரு வரலாறு முஹம்மத் (ஸல்) அவர்களைப் பற்றிக் கிடைத்தது. இந்த தொடக்கக் கால வரலாற்று ஆதாரங்களும் ஆய்வுகளும் இறைவனின் தூதர் அவர்களின் வாழ்க்கை வரலாற்று வரைவுகளுக்கும் அடிப்படை. நானும் இந்த நூலில் அவற்றை அடிக்கடி ஆதாரமாகக் காட்டுவேன்.

முஹம்மத்(ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றை நமக்கு முன் வாழ்ந்த எத்தனையோ பேர் எழுதி நம்முன் சமர்பித்திருக்கின்றார்கள். ஆனால் அவற்றால் நவீன வரலாற்றாசிரியர் கள் ஒருபோதும் திருப்தியடைய மாட்டார்கள்.

காரணம் அன்றைய நாள் வரலாற்று ஆய்வாளர்கள் அதிசயங்களையும், பழங்கால வரலாறுகளையும் எழுதுப வர்கள் என்ற எண்ணங்கள் இந்த நவீன வரலாற்று ஆய்வாளர்களிடம் இருக்கும். நாம் அவற்றின் தாரதம்மியங் களை ஆய்ந்து அனைவரும் இன்றும் ஏற்றுக் கொள்ளும் அளவில் தந்திட வேண்டும். விளங்கிட வேண்டும்.

அன்றைய வரலாற்று ஆய்வாளர்கள், தாங்கள் தரும் ஆவணங்களின் தன்மை களை அறியாதவர்களல்ல. ஆனால் அவர்கள் நபிகளாரின் வாழ்க்கையில் இடம் பெற்ற அற்புதங்களை அவர்கள் அறிவுக்கு எட்டவில்லை என விட்டுவிடவில்லை. அவர்கள் நம்மிடம் அவற்றை மிகவும் நேர்மையாக நம்மிடம் ஒப்படைத்தார்கள். அவர்கள் உண்மையான நிகழ்வுகள் எனத் தெரிந்தவை எதையும் புறந்தள்ளிவிட வில்லை.

சில சமயம் அவர்களின் சொந்த கருத்துக்கு எதிரானவையும் அவர்களுக்கு கிடைத்தன. தங்கள் சொந்த கருத்துக்கு எதிரானது என அவர்கள் அவற்றை விட்டுவிடவில்லை. அவற்றையும் பதிவு செய்து ஆவணப்படுத்தினார்கள். அவர்கள் இறைவனின் தூதரின் வரலாற்றை எவ்வளவு நேர்மையோடும், வாய்மையோடும்

சொல்லிட முடியுமோ அவ்வளவு நேர்மையோடும், வாய்மையோடும் நம்மிடம் ஒப்படைத்தார்கள்.

அவற்றால் இன்றும் நாம் பலனடைகிறோம். இன்றும் நமது பிரச்சனைகளுக்கு தீர்வுகளை நபிகளாரின் அன்றைய வாழ்க்கையிலிருந்து பெற்றுக்கொள்வோம். அது எப்படி என்பதை நவீன வரலாற்று ஆய்வாளர்களுக்கு சொல்வோம்.

தொடரும்......

இன்ஷா அல்லாஹ்.

## பின் குறிப்பு

அன்பார்ந்த வாசகர்களே பெருமானார்(ஸல்) அவர்கள்; எப்படி நாம் இன்று எதிர் நோக்கும் பிரச்சனைகளுக்குத் தீர்வுகளைத் தருகின்றார்கள் என்பதை விளக்கும் ஆய்வு இது. இதை எழுதிய கரன் ஆம்ஸ்டிராங் அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. அதனால் அவர் பெருமானார்(ஸல்) அவர்களின் பெயர்வரும் இடங்களில், முஹம்மத் என்று மட்டுமே குறிப்படுகின்றார். நாமும் அப்படியே அதனை இங்கே தந்திருக்கின்றோம். இந்த தமிழ் வடிவத்தைப் படிப்பவர்கள் இது மேலைநாட்டு முஸ்லிமல்லாதவர்களுக்காக எழுதப்பட்ட வரலாறு என்பதை மனதில் கொள்ள வேண்டும்.

குறிப்பாக 2001 ஆண்டு செப்டம்பர் 11 ஆம் நாள் அமெரிக்காவின் இரட்டைக் கோபுரங்கள் தகர்க்கப்பட்ட பின் எழுதப்பட்டது என்பதை யும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். அதிலும் இரட்டை கோபுரங்கள் தகர்க்கப் பட்டதற்கு இஸ்லாமும் -பெருமானார்(ஸல்) அவர்களின் வழிமுறையும் தான் காரணம் எனப்பழி சுமத்தப்பட்ட போது, தீவிரவாதத் திற்கும் பெருமானார் (ஸல்) அவர்களின் வழி காட்டுதலுக்கும் எள்மூக்கின் முனையளவும் சம்பந்தமில்லை என்பதை தெளிவுப்படுத்திட எழுதப்பட்டது. இவற்றை மனதிற்கொண்டு வாசகர்கள் இந்த ஆய்வுகளைப் படித்திட வேண்டும். எனக்கேட்டுக் கொள்கிறோம். வஸ்ஸலாம்.

## ஏ.டி.எம். விவரங்களைக் கேட்டு

### செல்பேசிக்கு வரும் அழைப்பு!

வங்கி ஏ.டி.எம். அட்டையில் உள்ள எண்களையும், ரகசிய எண் களையும் தெரிவிக்குமாறு செல்போனில் வங்கி அதிகாரிகள் என்று கூறிக்கொண்டு கேட்கும் மர்ம அழைப்புகளால் பொது மக்களிடையே அச்சம் எழுந்துள்ளது. ஏ.டி.எம். தொடர்பான எந்தத் தகவலை யும் வங்கியிலிருந்து கேட்பதில்லை; ஏ.டி.எம். குறித்த விவரங்களை யாரிடமும் தெரிவிக்க வேண்டாம் என வங்கி அதிகாரிகள் அறிவுறுத் தியுள்ளனர்.

தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளும், தனியார் வங்கிகளும் தங்களது வாடிக்கையாளர்களுக்கு விரைவாக சேவை அளிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் ஏ.டி.எம்., கிரடிட் அட்டை வசதியை அளித்துள்ளன. வங்கிச் சேவை நாளுக்கு நாள் அதிகரித்து வரும் சூழலில் வாடிக்கையாளர்கள் பணம் எடுக்க வங்கிக்குச் சென்று காத்திருப்பதைத் தவிர்க்க ஏ.டி.எம். சேவை பெரிதும் பயன்படுகிறது. இந்நிலையில், திருநெல்வேலி மாவட்டத்தில் வாடிக்கையாளர்களின் செல்போன்களுக்கு அழைப்புகள் வருகின்றன. அதில் பேசும் நபர், தான் வங்கி அதிகாரி என்றும், உங்களின் ஏ.டி.எம். அட்டை சேவையை நீடிக்க வேண்டும். ஆகவே, ஏ.டி.எம். அட்டை யில் உள்ள எண்களையும், ரகசிய எண்களையும் தெரிவியுங்கள் என்றும் கேட்கிறார். அவரது பேச்சில் சந்தேகமடைந்து அவரது பெயர் விவரங்களைக் கேட்டால் அந்த நபர் அழைப்பை துண்டித்து விடுகிறார்.

இதுபோன்ற அழைப்புகள் திருநெல்வேலி, வண் ணார்பேட்டை, மேலப் பாளையம், பாளையங் கோட்டை, தென்காசி, கல்லிடைக் குறிச்சி உள்பட பல்வேறு ஊர்களிலும் வருவதாகப் புகார்கள் எழுந்துள்ளன. தகவல்களைத் தெரிவிக்காதீர் இதுகுறித்து வங்கி அதிகாரிகளிடம் கேட்டபோது, வங்கிச் சேவையைப் பயன்படுத்தும் வாடிக்கையாளர்கள் தங் களது ஏ.டி.எம். மற்றும் கிரடிட் அட்டையின் எண்கள் மற்றும் ரகசிய குறியீட்டு எண்களை தொலைபேசியில் யாரிடமும் தெரிவிக்கக் கூடாது என்று தெரிவித்தனர்.

"வங்கியில் இருந்து அட்டை குறித்து எந்தத் தகவலும் வாடிக்கையாளர்களிடம் தொலைபேசி மூலமாகவோ, இ-மெயில் மூலமாகவோ கேட்கப்படுவதில்லை. ஏ.டி.எம். அட்டை சேவை தொடர்பான தகவல்களை வாடிக்கையாளர்கள் வங்கிக்கு நேரில் வந்து தெரிவிக்க வேண்டும் என வாடிக்கையாளரின் செல்போனுக்கு எஸ்.எம். எஸ். மூலம் தகவல் சேவை மாதம் ஒருமுறை அளிக்கப்பட்டு வருகிறது. ஆகவே, வங்கிச் சேவையைப் பயன் படுத்தும் வாடிக்கையாளர்கள் தங்களது ஏ.டி.எம். அட்டை தொடர்பான தகவல்களை எந்தச் சூழலிலும் யாரிடமும் தொலைபேசியில் தெரி விக்க வேண்டாம்' என வங்கி அதிகாரிகள் மேலும் கூறினர்.

# எது முதலில்?

## நன்மைகளில் நமக்கு பிடித்தவைகளை விட அல்லாஹ்வுக்குப் பிடித்தவைகளுக்கே முதலிடம்.



**இமாம் யூசுப் அல் கர்ளாவி.**

**மூன்றாம் வகையினர் :** "வணக்க வழிபாடுகளில் மிக ஏற்றமானவை மற்றவர்களுக்கு பலன் தருபவைகளே" என்கின்றனர். நமக்காக நாம் செய்திடும் நற்செயல்கள் நம்முடைய நலனுக்கு உகந்தவைதான். எனினும் ஒரு சேவையால் சமூகமே பலன் பெறுமல்லவா?

சமூக சேவைகள் ஏழைகளின் நலன்கள் இவை ஏற்றமானவை, அல்லாஹ் நமக்கு தந்திருக்கும் செல்வம்,பதவி, செல்வாக்கு, இவற்றால் பிறரும் பயன் பெற்றிட வேண்டும் என்று கருதும் இவர்கள் அதற்கென தன்னலம் துறந்து உழைக்கின்றனர். பின்வரும் நபி மொழியை தங்களின் பணிகளுக்கு சான்றாக முன் வைக்கின்றனர் :

> படைப்புகள் அனைத்தும் அல்லாஹ்வின் குடும்பம். அவனின் குடும்பத்துக்குப் பயன்தரும் பணிகளைச் செய்பவரே அவனுக்கு மிகப்பிரியமானவர் என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (நூல்: அபூயஅலா, தப்ரானி)

வணக்க வழிபாடுகளில் திளைத் திருப்பவர் தமக்கு மட்டுமே நன்மைகளைத் தேடிக்கொள்கிறார்.சமூக சேவையாளரால் மற்றவர்களும் பலன் பெருகின்றனர். அவருக்கும் இவருக்கும் எத்துணை பெரிய வித்தியாசம்!

"நட்சத்திரங்களை விட நிலவு எவ்வளவு சிறப்புக்குரியதோ அதுபோல வணக்கசாலியை விட அறிஞர் சிறப்புக் குரியவர்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (நூல் அஹ்மது)

அலீ(ரழி) விடம் நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் : உன் மூலமாக ஒரு மனிதர் நேர்வழி பெறுவது சிவப்பு ஒட்டகங்கள் கிடைப்பதை விட உமக்கு மிகச் சிறந்தது.(நூல் : புஹாரீ)

கல்வி கற்பதும் பிறருக்கு நேர்வழி காட்ட உழைப்பதும் ஏன் சிறப்புக்குரியவை யாகின்றன என்பது புரிகிறதா? இவற்றில் சமூக நலன் இருக்கிறது.

இன்னும் சில நபிமொழிகளைப் பாருங்கள் :

> நேர்வழிக்கு பிறரை அழைப்பவருக்கு - அதைப் பின்பற்றுவோர் பெறும் கூலியில் கொஞ்சம் கூட குறைக்கப்படாமல் அதே போன்ற கூலி கிடைக்கும்.(நூல் : அஹ்மது, முஸ்லிம்)

> மக்களுக்கு நன்மைகளை கற்பிப்பவருக்கு அல்லாஹ் அருள் புரிகிறான். மலக்குகள் பிரார்த்தனை செய்கின்றனர்.(நூல் : திர்மிதி)

மார்க்க அறிஞர்களுக்கு வானங்களில் இருப்பவர்களும், பூமியிலுள்ளவர்களும் பாவமன்னிப்புத் தேடுகின்றனர். கடல் வாழ் மீன்களும் புற்றில் வசிக்கும் எறும்புகளும் பாவமன்னிப்புத் தேடுகின்றன.(நூல் : திர்மிதி)

இறைத் தூதர்களாம் நபிமார்கள் மக்களைவிட்டு ஒதுங்கி தனிமையில் துதிப்பவர்களாகவோ துறவிகளாகவோ அனுப்பப்படவில்லை. மக்களுக்கு நேர்வழி காட்டவும் நற்பணிகளை செய்யவுமே வந்தார்கள்.

சமூக வாழ்வை முற்றாக துறந்து வணக்க வழிபாட்டிலேயே திளைத்து விட சிலர் விரும்பிய போது நபி(ஸல்) அவர்கள் அதை வன்மையாகக் கண்டித்தார்கள்.

இவ்வாறான சான்றுகளைக் காட்டும் மூன்றாம் வகையினர் இறைவணக்கத்துடன் சமூகப் பணிகளும் செய்வதே சிறந்த பணி வெறும் வழிபாடுகளை விட என்கின்றனர்.

**நான்காம் வகையினர் :** இவர்கள் ஒவ்வொரு காலக்கட்டத்திற்கும் சூழ்நிலைக்கும் ஏற்ப எது இறை திருப்தியைப் பெற்றுத் தரும் பணியோ அதை செய்வதே சிறந்தது என்கின்றனர்.

ஜிஹாத் எனும் அறப்போருக்கான தேவை ஏற்பட்டிருக்கும் சூழலில் அதுவே சிறந்தது. இதற்காக அன்றாட உபரி (நஃபில்) வணக்கங்களைக் கூட (அவசியம் கருதி) விட்டுவிடலாம் என்கின்றனர்.

உபரித்தொழுகை, உபரிநோன்பு இவற்றை ஜிஹாதிற்காக விடுவது மாத்திர மல்ல.கடமையான தொழுகையைக் கூட அச்சமற்ற சூழ்நிலையில் தொழுவது போல நிறுத்தி நிதானமாக அல்லாமல் விரைவாக சீக்கிரமாக முடித்து விடலாம் என்கின்றனர்.

வீட்டுக்கு விருந்தினர் வந்திருக்கும் போது வழமையான விரும்பத்தக்க (முஸ்தஹப்பு)வையைச் செய்துக் கொண்டிருக்காமல் அவர்களை உபசரிக்க வேண்டும். இது போலவே நம்முடைய மனைவி, மக்களுடைய உரிமைகளைப் பேணிப்பாதுகாத்திட நாம் முன்னுரிமை தர வேண்டும்.

ஸஹர் நேரம், தொழுகை, குர்ஆன் ஓதுதல்,இறைத்துதி(திக்ர்), துஆ, பாவ மன்னிப்புத் தேடுதல் ஆகியவற்றின் நேரம். எனவே ஸஹர் நேரத்தில் இவற்றை செய்வது சிறந்தது.

கல்வி நிலையத்தில் பாட நேரங்கள் கல்வி கற்பிக்கவும் புரியாத மாணவர் களுக்குப் புரியவைப்பதற்குமான நேரம். எனவே பாட நேரங்களில் கற்பித்தலே சிறந்தது.

பாங்கு சொல்லும் நேரத்தில் மற்ற உபரியான வழிபாடுகளை விட பாங்கின் அழைப்புக்கு பதிலளிப்பதே ஏற்றமானது. ஐவேளைத் தொழுகை நேரங்களில் பள்ளிவாசல் தூரத்திலிருந்தாலும் கூட செல்ல முயல்வதும் உரிய நேரத்தில் தாமதமின்றித் தொழுதிட பிரயத்தனம் செய்வதும் ஒருமுகப்பட்டுத் தொழுவதும் தான் ஏற்றமானது. மற்ற சமூகப் பணிகளை விட.

ஒரு நெருக்கடியான சூழ்நிலையில் நம்மிடம் உதவியை நாடி வந்திருப்பவருக்கு நம், உடல், பொருள்,செல்வாக்கு அனைத்தையும் பயன்படுத்தி உதவி செய்து அவரின் துயர் துடைப்பதே ஏற்றமானது. தனிமையிலிருந்து இறைவனைத் துதிப்பதை விட.

திருக்குர்ஆன் ஓதும் நேரத்தில் முழு அக்கறையுடனும் அல்லாஹ்வுடன் உரையாடுவது போன்ற உணர்வுடனும் ஓத வேண்டும். ஓர்மையுடன் அதன் பொருளை அறிந்திட வேண்டும். அதன் கட்டளை களை செயல்படுத்திட உறுதி ஏற்க வேண்டும். அந்நாட்டு அரசனிடமிருந்து ஒரு கடிதம் உங்களுக்கு வந்தால் அதற்கு எவ்வளவு முக்கியத்துவம் தருவீர்களோ அதை விட பெரும் முக்கியத்துவம் தர வேண்டும்.

அரஃபா நாளில் அங்கு தங்கியிருக் கும் ஒரு ஹாஜி பிரார்த்தனை, இறைத்துதி, இறைவனிடம் சரணடைதல், பாவ மன்னிப்பு ஆகியவற்றில் முனைப்புடன் ஈடுபடவேண்டும். அந்நாளில் அங்கு

நோன்பு வைக்கக் கூடாது. இதனால் நன்மைகள் செய்திட இயலாதபடி பலஹீனம் ஏற்படும்.

துல்ஹஜ் மாதத்தின் முதல் பத்து நாட்கள் மிகவும் வணக்கத்துக்குரிய நாட்கள். அந்நாட்களில் இறைவனை பெருமைப்படுத்த வேண்டும். புகழேற்ற வேண்டும். ஏகத்துவ முழக்கத்தை முழங்கிட வேண்டும். (தக்பீர் அல்ஹம்து லில்லாஹ், லாயிலாஹ இல்லல்லாஹ் கூறிட வேண்டும்) பொதுவான அறப் போரை விட இந்நாட்களில் அவைதான் சிறந்தது.

ரமழான் மாதம் கடைசிப் பத்து நாட்களில் பள்ளிவாசலை விட்டு வெளியேறாமல் தங்கியிருந்து, வணக்க வழிபாட்டில் திளைத்திட வேண்டும். இந்நாட்களில் மக்களோடு கலந்துரவாடு வதை விட கல்வி கற்பதை விட தனிமை வணக்கமே சிறந்தது என்கின்றனர் ஏராள மான அறிஞர் பெருமக்கள்.

ஒரு முஸ்லிம் சகோதரர் நோயுற்றி ருந்தால் அவரை நலம் விசாரிப்பதும் அவர் இறந்து விட்டால் அவரின் ஜனாஸாவில் பங்கேற்று ஆக வேண்டிய வேலைகளைப் பார்ப்பதும் உன் தனிமை வணக்கத்தை விட இதரப்பணிகளை விட சிறந்தது.

உன் சமூகம் ஆபத்துகளையும் இன்னல்களையும் சந்திக்கும் போது அவர்களை விட்டு நீ விரண்டு ஓடாமல் அவர்களுடனேயே இருந்து பணி செய்வதே சிறந்தது. ஏனெனில் மக்களோடு கலந்துறவாடி அவர்களால் ஏற்படும் இன்னல்களை சகித்துக்கொள்பவரே சிறந்தவர்.

நல்ல விடயங்களில் மக்களுடன் பங்கேற்க வேண்டும். ஒதுங்கக் கூடாது. தீய விடயங்களில் ஒதுங்க வேண்டும். பங்கேற்க கூடாது. தீமையிலிருக்கும் மக்களிடம் பழகினால் அந்த தீமை நீங்கும் அல்லது குறையும் என்றிருந்தால் பழகலாம் தவறில்லை.

சுருங்கக் கூறின் ஒவ்வொரு காலத் துக்கும் சூழ்நிலைக்கும் ஏற்ப இறைவனின் திருப்தியை பெற்றுத் தரும் பணி எதுவோ அதுவே சிறந்தது. காலம் எதை கட்டாயப்படுத்துகிறதோ அதைச் செய்திட வேண்டும்.

இதுவே நான்காம் வகையினரின் நிலைப்பாடு. இவர்களே பொதுவான இறையடியார்கள். முதல் மூன்று வகையினரும் தம்மை ஒரு சூழலோடு பிணைத்துக் கொண்டு அதற்கு ஏற்ப இறை வணக்கத்தை அணுகுகின்றனர்.

தம்மை வருத்திக் கொள்பவர், துறவி,சமூக சேவகர் ஆகிய முதல் மூன்று வகையினரும் தத்தமது துறைகளை விட்டு லேசாக அகன்றாலே தம் வழிபாட்டில் பெரும் குறை ஏற்பட்டு விட்டதைப் போல நினைக்கின்றனர். ஏனெனில் அவர் தம் துறை வழியாகவே இறைவணக்கத்தைப் பார்க்கின்றார்.

ஆனால் நான்காம் வகையினர் அப்படிப்பட்டவர்கள் அல்லர். எல்லாத் துறைகளையும் இறைவணக்கமாகவே பார்க்கின்றனர். இறைவனின் திருப்தியே தம் இலட்சியம் என்று இவர் வாழ்வதால் எல்லா வழிகளிலும் தேவைக்கேற்ப செயல் பட்டு இறை திருப்திக்கு ஆளாகிவிடு கின்றனர்.

எனவே இவரின் எல்லா செயல் களும் வணக்க வழிபாடுகளாக ஆகிவிடு கின்றன. இவர் போராளிகளோடும் இருப்பார். பேரறிஞர்களோடும் இருப் பார். வாரி வழங்கும் வள்ளல்களோடும் இருப்பார். இறைவனைத் துதிப்பவர் களுடனும் இருப்பார்.

இவர் இப்படித்தான் என்று வரையறுத்து கூறமுடியாது. ஏதேனுமொரு பணியில் பொய் முடங்கிவிடாமல் பொதுவான இறையடிமையாக இருப்பார். தன் மன விருப்பத்துக்கும் ஆசைக்கும் சந்தோஷத்திற்கும் ஏற்ப (அமல்) பணி செய்ய மாட்டார். மாறாக இறைவனின் திருப்தி எதில் கிடைக்கும் என்று தேடிப் பணி செய்வார்.

எளிய உணவுகளை சாப்பிட்டு, கிடைக்கும் ஆடைகளை அணிந்து காலத்துக்கேற்ற பணிகளில் ஈடுபடுவார். சத்தியத்தை விரும்புவார். அசத்தியத்தை

வெறுப்பார். சேரும் இடமெல்லாம் பயன் தரும் மழை போல் வாழ்வார். தன் இலை களை தரையில் உதிர்க்காத பேரித்தம் மரம் போல இருப்பார். எதையும் வீணாக்க மாட்டார். பேரீத்தம் மரத்தின் முள் கூட பயன் தரும் அதுபோல இவர் வாழ்வார்.

அல்லாஹ்வின் கட்டளைகள் மீறப் பட்டால் பொங்கி எழுவார். அல்லாஹ் வின் கண்ணியம் பங்கப்பட்டால் சினம் கொள்வார். அல்லாஹ்வுக்காக வாழ்வார். அல்லாஹ்வின் வழிகாட்டுதல் கொண்டே தன்னை வடிவமைத்துக் கொள்வார். உலகத்தையே மறந்து அல்லாஹ்வுக்காக பணி செய்வார். தன்னலம் கருதாமல் சமூகப் பணி செய்வார்.

“இறைவா உன்னையே வணங்குகிறோம்! உன்னிடமே உதவியும் தேடுகிறோம்.”(1:5) என்று சொல்வதோடு நின்றுவிடாமல் தம் ஒவ்வொரு பணிகளால் அதை நிரூபிப்பார். அல்லாஹ்வுக்காக பணி செய்வதில் சுகம் காணும் அறிய மாமனிதராக இருப்பார். இதன் மூலமே மன அமைதி பெறுவார். இதிலே நிம்மதியைத் தேடுவார்.

(நூல் : மதாரஜுஸ் ஸாலிகீன்)

**தமிழ் வடிவம் : கே.எம்.இல்யாஸ் ரியாஜி.**

# பணியை முடிக்குமா CMWSSB?

**செ**ன்னை முகப்பேர் கிழக்கு, ஓரி சாலையில் கடந்த இரண்டு வருடங் களுக்கு முன் பாதாள சாக்கடை திட்டத் திற்காக தோண்டப்பட்ட குழிகள், இரண்டு ஒப்பந்தத் தொழிலாளர்களின் உயிரைக் குடித்த பிறகும், இன்னும் அதன் கம்பீரம் மாறாமல் அப்படியே குழியா கவே இன்னும் காட்சி தந்து, அந்தத் தெருவையே தனித்தீவாக, நகருடன் தொடர்பில்லாத இடம் போல காட்சி யளிப்பதற்கு மிகவும் உதவியாக இருக்கிறது.

இந்தக் குழியில் விழுந்து காயமடைந்த குழந்தைகள், பெண்கள், முதியவர்களுடைய பட்டியல் மிகப் பெரியது. இந்தக் குழியில் விழுந்து இன்னும் கால், கைகளில் வலியுடன் அந்தத் தெருவில் வசிப்பவர்கள் அநேகர்.

சமீபத்திய மழையினால் அந்தத் தெருவே வெள்ளக்காடாக, தனித் தீவாக, போக்குவரத்துகளில்லாமல், நோய் தொற்றுக்கிருமிகளின் பிறப்பிடமாக உருமாறி அங்கு குடியிருப்பவர்களை பீதிக்குள்ளாக்கிக் கொண்டிருக்கிறது.

இந்த பாதாள சாக்கடை திட்டம் தாமதமாவதை உணர்த்தி அங்கு குடியிருக்கம் பலரும், சென்னை குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம் உட்பட பல துறைகளுக்கும், முதல்வரின் தனிப்பிரிவிற்கும் பலமுறை புகாரளித்தும், எந்த விதமான முன்னேற்றமுமில்லாமல், இது வரையிலும் இந்தத் திட்டம் கிணற்றில் போட்ட கல் போலவே அமிழ்ந்து போயிருக்கிறது.

இனி யாரிடம் சென்று முறையிடுவது என்று அறியாத அந்தத் தெருவாசிகள், இதற்கு ஒரு தீர்வு கிடைக்காதா என்று இலவு காத்த கிளி போல காத்துக்கொண்டும், அதிகாரிகளின் நடவடிக்கையை எதிர்பார்த்துக் கொண்டுமிருக்கின்றனர்.

இனியும் தாமதிக்காமல், அவர்களின் எதிர்பார்ப்பையும் பொய்யாக்காமல், அதிகாரிகளை முடுக்கி விட்டு, அந்தப் பாதாள சாக்கடை திட்டத்தை உடனே நிறைவு செய்ய ஆவண செய்யுமா அரசு?

- MR

# குழந்தை வளர்ப்பு 3D ஆபத்து



குழந்தைகள், பெரும்பாலும் தொலைக் காட்சியோடு பிணைக்கப் படுகின்றார்கள். பெரும்பாலான "அம்மா" க்கள் தங்கள் குழந்தைகளுக்கு உணவு ஊட்டிட தொடங்கும் தொலைக்காட்சிப் பெட்டியை இயக்கிவிட்டுத்தான் உணவு ஊட்டுகின்றனர். குழந்தைகள் தொலைக்காட்சிப் பெட்டியைப் பார்த்துக் கொண்டிருக் குமாம் அம்மாக்கள் உணவை ஊட்டி விடுவார்களாம் சாதிரியமாக அன்றைய நாட்களைப் போல் வீட்டுக்கு வெளியே வந்து இயற்கைக் காட்சிகளைக் காட்டி குழந்தைகளுக்கு உணவு ஊட்டுபவர்கள் மிகக் குறைவு.

இப்படி குழநதைகளின் வயிற்றை நிரப்பும் பொது அவர்களின் கண்களைப் பலவீன படுத்திவிடுகின்றோம். என்பதை பல அம்மாக்கள் உணருவதில்லை. குழந்தை களின் கண்கள் கிரகிக்க இயலாத அளவு ஒளிக்காற்றுகள், வேகமாக நகருகின்றன. இதனால் அவர்கள் அதிகமாக சிரத்தை எடுத்துக் கொண்டுதான் தொலைக்காட் சியைப் பார்த்திட முடிகின்றது.

இந்தக் கண் உளைச்சல் அவர்களை விரைவிலேயே கண்ணாடியின் உதவிக்கு அழைத்துச் சென்று விடுகின்றது, எல்லாம் கம்யூட்டர் மயமானபின் இந்த ஆபத்தில் சிக்காத மழலைகளே இல்லை என்றாகி விட்டது. கம்யூட்டர் தான் இப்போது கல்வி என்றாகி விட்டதால் இந்த ஆபத்து எல்லோரையும் தொற்றிக் கொண்டு விட்டது. அதாவது விரைந்து கண்ணாடி போகும் நிலை தொற்றுநோய் போல பரவி இருக்கின்றது. இதில் போதா குறைக்கு 3டி என்ற முப்பரிமான படங்கள் தங்கள் பங்கை ஆற்றி, மழலைகளின் பார்வைக்கு வேட்டு வைத்திட வந்துள்ளன. முப்பரிமான படமொன்றில் இரண்டு மாறுபட்ட வெவ்வேறு இடங்களை பார்த்ததாக வேண்டும் கண்கள். சற்று காலம் தாழ்ந்துதான் நமது மூளை அதனை ஒரே படமாகப் புரிந்து கொள்ளும். இதனால் ஒருபெரும் போராட்டமே கிரகிக்கும் கண்களுக்கும், புரிந்துணர்வைத் தரும் மூளைக்கும் நடக்கின்றது.

குறிப்பாக ஆறு வயதிற்கு உட்பட்ட குழந்தைகளின் கண்களை இந்தப் போராட்டத்தில் ஈடுபடுத்துவது பேராபத்து. காரணம் கண்கள் அவ்வயதில் முழுமையாக வளர்ச்சி அடைந்திருக்காது. இது பிரான்ஸ் நாட்டின் ஆராய்ச்சி நிறுவனமான "அன்செஸ்" (என்ற நிறுவனம்) விடுக்கும் எச்சரிக்கை. ஆமாம் ஒரு கன்னாடியைத் தருகின்றார்கள் அதைப் போட்டால் எல்லாம் சரியாகி விடுமா? எனக்கேட்டால் இத்தாலிய நிறுவனம் ஒன்று அது ஒன்றும் பலன் தராது என்கின்றது.

சரி நீங்களும் நாங்கள் சொல்வதை கேட்க முடியாத காலகட்டத்தில் இருக்கின்றீர்கள் அதனால் குறைந்த பட்சம் 3டி - ஐ பார்ப்பதை குறையுங்கள். 13 வயது வரை நீங்கள் வெறுத்தாலும் எங்கள் பிரச்சாரம் தொடரும்..

பல பத்திரிக்கைகளிருந்து எம்.ஜி.எம்.

# அதிசயப் பெண்
# "இரோம் ஷர்மிளா"



இவருடைய முழு பெயர் இரோம் சானு ஷர்மிளா. 1972 மார்ச் திங்களன்று 14 ஆம் நாள் பிறந்தார். நமது மணிப்பூர் மாநிலத்திலுள்ள இம்பால் பள்ளத்தாக்கில் தான் பிறந்தார்.

இந்த இம்பால் பள்ளத்தாக்கில் மாலோன் என்றொரு சிறு நகரம். அந்த நகரத்தில் ஒரு **(Bus stop)** பேருந்து நிறுத்தம். அந்த பேருந்து நிறுத்தத்தில் பஸ்ஸுக்காக சிலர் காத்துக் கொண்டிருந்தார்கள். அபோது அவ்வழியே நமது இராணுவத்தினர் ஒர் ஊர்தியில் வந்தார்கள்.

பேருந்துக்காக காத்து நின்றவர்கள் மேல் சரமாரியாகச் சுட்டார்கள். பின் அங்கிருந்து சென்றார்கள். இராணுவத்தினர் சுட்டதில் பன்னிரெண்டு பேர் இறந்தார்கள். இறந்தவர்களில் 62 வயது மூதாட் டியும் உண்டு.

அதே போல 16 வயது சினான் சந்திரமணி என்பவரும் உண்டு. இவர் 1998 ஆம் ஆண்டில் குழந்தையிலேயே சாகச செயல் செய்தவர் என்ற அரசு விருதைப் பெற்றவர்.

இந்த படுகொலையை "மாலோம் படுகொலை" என்பர். இந்த படுகொலையைச் செய்த இராணுவத்தினர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் எனப் போராடினார் இரோம் ஷர்மிளா. அப்போது அவருக்கு வயது 28.

**அதெல்லாம் முடியாது**

ஆனால் நமது அரசாங்கம் அப்படி எந்த நடவடிக்கையையும் எடுக்க முடியாது. காரணம் அங்கே ஆயுதம் தாங்கிய படையினரின் சிறப்புப் பாதுகாப்புச் சட்டம் செயலிலிருக்கின்றது எனக்கூறியது. **(Armed Forces Special Powers Act 1958).**

இந்த ஆயுதந்தாங்கிய படைகளின் சிறப்புப் பாதுகாப்புச் சட்டம் தான் நமது இராணுவத்தினர் செய்யும் படுகொலைகள், கற்பழிப்புகள், ஆள்கடத்தல் - பின்னர் கொலைகள் போன்ற மாபாதகங்களிலிருந்து பாதுகாக்கின்றது. என்பதை அறிந்தார்.

காஷ்மீரிலும் இதே சட்டம்தான், கூட்டுக்கொலைகள், கிராமத்து பெண்களை மொத்தமாகக் கற்பழித்து கொள்வது ஆகியவற்றைச் செய்து கொண்டிருக்கின்றது. இராணுவத்தைக் காப்பாற்றிக் கொண்டிருக்கின்றது.

இதுதான் மணிப்பூர் மாநிலத்தில், படுகொலைச் செய்த இராணுவத்தினரைக் காப்பாற்றி இருக்கின்றது என்பதால் அதெற்கெதிராக போராடுவது என்ற முடிவுக்கு வந்தார்.

அன்று முதல் இந்தச் சட்டத்தை அகற்றிட வேண்டும். என உண்ணாவிரதம் இருந்து வருகின்றார். கடந்த நவம்பர் மாதத்தோடு 14 ஆண்டுகள் நிறைவாக முடிவடைகின்றன. ஐநூறு வாரங்கள் உணவும், தண்ணீருமின்றி போராடி வரும் பெண் மணி என்ற பெயரைப் பெற்றிருக்கிறார். பல விருதுகளும் இவரைத் தேடி வந்திருக்கின்றன.

**விருதுகள்**

இதனால் இவர் மணிப்பூரின்

இரும்புப் பெண் என்ற பெயரையும் பெற்றுள்ளார். மேலும் 2014 ஆம் ஆண்டு மகளிர் தினம் அன்று உலகின் **"Top Women Icon of India"** இந்தியாவின் மிகப்பெரிய "பெண் பிம்பம்" என்ற பெயரையும் பெற்றார். இது உலக மக்களிடையே வாக் கெடுப்பு நடத்தப் பெற்று வழங்கப் பட்ட விருதாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

2011 ஆம் ஆண்டு பூனா பல்கலைக் கழகம் 39 மாணவிகளுக்கு கல்வி உதவித் தொகையை வழங்கி அவரது 39 வது பிறந்த நாளைக் கொண்டாடியது. மேலும் 2013 ஆம் ஆண்டு அம்னஸ்டி இன்டர்நேஷனல் என்ற சர்வதேசிய மனித உரிமை அமைப்பு அவரை "மனசாட்சியின் மகுடம்" என்ற ழைத்து அவருடைய கோரிக்கையாகிய ஆயுதம் தாங்கிய படைகளின் சிறப்பு அதி காரச் சட்டத்தை முழுமையாக அகற்றிட வேண்டும் எனக்கேட்டுக் கொண்டது.

2010 ஆம் ஆண்டு அமைதிக்கான "இரவீந்திர நாத்" விருது இவருக்கு வழங்கப் பட்டது. அதே ஆண்டில் "சர்வகுன சாம் பான" என்ற இந்திய அமைப்பு "அமைதி மற்றும் சமூக இணக்கத்திற்கான" விருதை வழங்கியது. உலக மக்களும் இரோம் ஷர் மிலாவைக் கூர்ந்துக் கவனித்து வரு கின்றனர்.

**சர்வதேச விருதுகள்**

ஆசிய மனித உரிமை ஆணையம் **(Asian Human Rights Commision)** 2010 ஆம் ஆண்டு வாழ்நாள் விருதினை வழங்கி இவரைக் கண்ணியப் படுத்தியது.

இப்படி விருதுகள் வந்து குவிந்ததே அல்லாமல், அவர் எதற்காக தன்னை வருத்திக் கொண்டு போராடினாரோ அது நடக்க வில்லை. அதாவது "அப்சா" (**AFSPA**) என்ற ஆயுதந்தாகிய படைகளின் சிறப்பு அதிகாரச் சட்டம் அகற்றப்படவேயில்லை. ஆதலால் விருதுகளால் விளைந்த பயன் எதுவுமில்லை.

**சிறையும் வதையும்**

ஒருப் பக்கம் விருதுகள் குவிந்தாலும், இன்னொருப் பக்கம் இரோம் ஷர்மிளாவின் போராட்டத்தை அதாவது அவர் மேற்கொள்ளும் தொடர் உண்ணா விரதத்தை, அவர் செய்யும் தற்கொலை முயற்சி எனப் பிரகடனப்படுத்தி வருகின்றன நமது அரசுகள்.

இதனால் அவரை தொடர்ந்து இந்திய தண்டனைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவு 309 கீழ் கைது செய்து சிறையில் வைத்து உணவை கட்டாயமாக வாய் வழியாக திணித்து வருகின்றது நமது அரசு. காரணம் அவர் இறந்துபோனால் உலகமே தூற்றும் என்பதால்.

சிறைச் சாலைகள் அவர் அடிக்கடி தரிசிக்கும் புண்ணியஸ்தலம் என்றாகி விட்டது. கடந்த 22 ஆம் தேதிதான் அதாவது டிசம்பர் 22, 2014 அன்றுதான் அவர் மீதுள்ள வழக்குகள் விசாரணைக்கு வந்தன.

**காஷ்மீரின் பர்வீனா ஆகங்கரும், ஷர்மிளாவும்**

இதேப்போலதான் கஷ்மீரில் பர்வீனா ஆகங்கர் என்ற பெண்மணி அங்கே இராணுவத்தினர் தொடர்ந்து செய்து வரும் கொலைகள், கற்பழிப்புகள், ஆகியவற்றிற்கு எதிராக போராடி வருகின்றார்.

அவருக்கு ஐக்கிய நாடுகள் சபையின்



விருது முதல் அத்தனை விருதுகளையும் வழங்கிவிட்டார்கள். ஆனால் இராணு வத்தினர் அன்றாடம் செய்யும் கொலைகள், கற்பழிப்புகள் போன்றவற்றிலிருந்து விடுதலை இல்லை. சட்டப்படியான நட வடிக்கைகளிலிருந்து இராணுவத்திற்கு பாதுகாப்பு வழங்கிடும் சட்டம் அகற்றப் படவில்லை. அந்த சட்டம் தான் இரோம் ஷர்மிளா எதிர்த்து போராடி வரும் ஆயுதம் தாங்கிய படைகளின் சிறப்பு அதிகாரச் சட்டம் 1958.

கஷ்மீரின் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் காணாமல் ஆக்கப்படிருக் கிறார்கள். நமது இராணுவத்தினரால் கடந்த 18 ஆண்டுகளில் சுமார் 20,000 பேர் காணாமல் ஆக்கப்பட்டிருப்பதாக அரசே ஒத்துக்கொண்டுள்ளது. இவர்களில் பெரும் பாலோரைக் நமது இராணுவத்தினர் கொன்று கூட்டுப் புதை குழிகளில் புதைத் துள்ளார்கள் என்பது கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

அந்த மக்களும் நாள் தவறாமல் போராடிவருகின்றனர். ஆனாலும் எந்த நிவாரணமும் இல்லை. நீதியுமில்லை.

பா.ஜ.க. இப்போது நடந்துக் கொண்டிருக்கும் கஷ்மீர் தேர்தலில் நாங்கள் ஆட்சிக்கு வந்தால் “அப்சா” என்ற இந்த சட்டத்தை அகற்றி விடுவோம் எனக் கூறியுள்ளது மக்களை ஏமாற்ற!.

## 31 ஆம் பக்கத்தின் தொடர்ச்சி

செய்யது முஹம்மது இறந்து மருத்துவ மனைக்கு கொண்டு வரும்போது சட்டை வேஷ்டி போன்ற ஆடைகள் எதுவும் அவர் உடம்பில் இல்லை. மாறாக பல இடங்களில் லத்திக் கம்புகளின் அடையாளம்தான் இருந்தது. இது ஒன்றே போதுமானதே காவல் துறையினர் அடித்ததால் தான் இவர் இறந்து போனார் என்பதற்கு.

உண்மை இப்படியிருக்க இதில் காவல்துறையின் மெத்தனப் போக்கும் அரசின் அலட்சியப் போக்கும் நம்மை அதிர்ச்சிக்குள்ளாக்குகிறது.

இன்னும் தங்களுக்கு இவ்வழக்கில் சி.பி.சி.ஐ.டி.விசாரணையில் நம்பிக்கை யில்லை. எனவே நாங்கள் சி.பி.ஐ. விசா ரணையை கேட்க இருப்பதாகவும் மேலும் இவ்வழக்கில் வெள்ளைதுரை(எ.டி.எஸ்.பி.), எஸ்.ஐ.காளிதாஸின் இடைக்காலப் பணி நீக்கத்தை இரத்து செய்து மீண்டும் அவரை பணியில் அமரத்தும் முயற்சியில் ஈடுபட்டு வருதாகவும் கூறப்படுகிறது.ஆகையால் நீதிக் கிடைக்க விரைவில் எல்லா அமைப் பினரையும் சேர்த்து இராமநாதபுரத்தில் போராட இருப்பதாக நம்மிடம் தெரிவித்தார்.

நாம் செய்யிது முஹம்மது மாமா விடம் பேசும்போது; மாஜிஸ்டிரேட் விசாரணையில் அருள்தாஸ் என்பவர் (புகார் கொடுத்தவர்) தான் கத்தியை எடுத்து சென்று காவல்நிலையத்தில் கொடுத்ததாக கூறியுள்ளார். ஆனால் காவல்துறையோ செய்யிது முஹம்மது கத்தியை வைத்திருந் ததாக கூறுகிறது. ஆக இதிலிருந்தே காவல்துறையின் பித்தலாட்டங்கள் தெரிய வருகிறது.

இன்னும் எஸ்.எஸ்.ஐ. பரமசிவம் மாஜிஸ்டிரேட் விசாரணையில் கத்தி காவல் நிலையத்தில் இருந்தது. அதனை செய்யிது முஹம்மதுமிடமிருந்து வாங்கப்பட்டதாக தெரியவில்லை என்று கூறினார்.

இப்படி முன்னுக்குப் பின் முரணான காவல்துறையினரின் கூற்று உண்மையை மறைப்பதையே வெட்ட வெளிச்சமாக்குகிறது என நம்மிடம் தெரிவித்தார்.

ஆகயால் முடிவெடுத்தப்படி சாதி மத பேதமின்றி அனைத்து அமைப்புகளாலும் போராட்டங்கள் நடத்தப்பட்டது. அதில் தமிழக அரசு தனது மௌனத்தை கலைத்து விட்டு உயர் நீதிமன்ற உத்தரவை உடனே அமல்படுத்த வேண்டும்.

உண்மையில் மக்கள் நலனில் அக்கறையுள்ள நீதியை விரும்புகின்ற அரசு என்றால் விரைவாக சி.பி.சி.ஐ.டி. விசா ரணையை முடித்து அறிக்கையை வெளிப் படுத்தி கொலைக் குற்றவாளிகளான காளிதாஸ் மற்றும் அவருக்கு உடந்தையாக இருந்தவர்கள் மீது வழக்குப் பதிவுச் செய்யப்பட வேண்டும். மேலும் அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும்.

அதற்காக நீதிக்கான போராட் டத்தை மக்கள் தொடர்ந்து நடத்தி வர வேண்டும். அதில் முஸ்லிம்கள் முனைப் போடு செயல்பட வேண்டும். இல்லையெனில் எஸ்.பி. பட்டிணத்தை போன்றே வேறொரு காவல் நிலையத்தில் அப்பாவி முஸ்லிம் இளைஞர்களின் உயிர் காளிதாஸ் போன்றவர்களுக்கு காவுக் கொடுக்கும் நிலை

# ஆஸ்திரேலியா - ஊடக புறட்டுகளும் பிரதமரின் உண்மை அறிக்கையும்

ஆஸ்திரேலியா நாட்டின் உலக புகழ்மிக்க சிட்னி மாநகரில் டிசம்பர் 15ம் தேதி அன்று துப்பாக்கி முனையில் 17 நபர்கள் பிணைக்கைதிகளாக அந்நகரில் உள்ள லிண்ட் என்னும் உணவு விடுதியில் இருந்து பிடிக்கப்பட்டனர். இந்த சம்பவம் முழு ஆஸ்திரேலியாவிலும், உலகளவிலும் அச்சத் தையும், அதிர்ச்சியையும் ஏற்படுத்திற்று.

ஏனென்றால் மக்களை பிணைக் கைதிகளாக பிடித்து வைத்திருப்பவர்கள் யார்? எந்த காரணத்திற்காக பிடித்தார்கள் என்று ஒன்றும் தெரியாத சூழலில் மக்களை பிடித்து வைத்திருப்பவர்கள் ஐ.எஸ் (ISIS) அமைப்பைச் சேர்ந்தவர்கள் ஆஸ்திரேலிய அரசின் அவ்வமைப்பிற்கு எதிரான போக்கே இதற்கு காரணம் என்று ஊடகங்கள் தங்களால் இயன்றளவு சினிமா பாணியில் கதை, திரைக்கதை என தன் பங்கிற்கு விசயத்தை ஊதி பெரிதுப் படுத்தின.

பொய் புரட்டுகளிலேயே ஊரித் திளைத்த இந்திய ஊடகங்களும் தன் பங்கிற்கு பெங்கலூரில் ஐ.எஸ். தொடர் புடையவர் என்று சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட இளைஞருடன் இணைத்து தனது வழமையான முஸ்லீம் களுக்கு எதிரான தீவிரவாத பல்லவியை பாடினர்.

இந்நிலையில் ஆஸ்திரேலிய அதிரடிப்படையினர் மக்களை கைதிகளாக பிடித்து வைத்திருந்த குற்றவாளியினை கொன்று அன்று மாலைக்குள்ளேயே அச்சம் பவம் தொடர்பான அனைத்து ஊடகங் களுக்கும் முற்றுப் புள்ளி வைப்பதற்கு அடி தளமிட்டனர். குற்றவாளிக்கும்; அதிரடிப் படையினருக்கும் நடந்த மோதலில் அப்பாவி பொது மக்கள் இருவர் கொல்லப்பட்டனர்.

மான் ஹரோன் என்பவன்தான் மக்களை பிணைக் கைதிகளாக பிடித்தவன் என்றும் இவன் மீது ஏற்கனவே பாலியல் வழக்கு, மனைவியை கொன்ற கொலை வழக்கு போன்ற வழக்குகள் நிலுவையில் இருப்பதாகவும், மேலும் அவன் ஒரு மனநிலை சரியில்லாதவன் என்றும் ஆஸ்திரேலிய பிரதமர் டோனி அபோட் அவர்கள் தனது அறிக்கையை வெளியிட்டு ஊடகங்களின் அனைத்து பொய் புரட்டுகளுக்கும் முற்றுப்புள்ளி வைத்தார்.

ஆஸ்திரேலிய அரசின் நேர்மையான விசாரணை ஊடகங்களின் வார்த்தைகள் பொய் என்று நிருபித்துள்ளது. இன்று உலகில் ஏதோ ஒரு மூலையில் ஒரு சின்ன சம்பவம் நிகழ்வுற்றாலும் அதனை முஸ்லீம் களோடு தொடர்புபடுத்தி ஒட்டுமொத்த முஸ்லீம் சமூகத்தையும், இஸ்லாத்தையும் குற்றவாளியாக (Islamophobia) ஆக்கும் செயலை தான் இன்று இஸ்லாத் தின் எதிரிகளும், அவர்களின் உளவுத்துறை களும் அந்த உளவுத்துறையின் கட்டுப் பாட்டில் இருக்கும் ஊடகங்களும் தங்களது தலையாய கடமையாக செய்து வரு கின்றனர்.

ஆஸ்திரேலிய அரசாங்கம் இந்த பொய் பரப்புரைகளுக்கு பலியாகி இருந்தால் அவ்வளவுதான் அந்நாட்டில் உள்ள முஸ்லீம்களின் வாழ்வு கேள்விக் குறியாகி இருக்கும். இதற்கு முன்னாள் இதுபோன்ற சில சின்னப் பரப்புரைகள் தான் ஆஸ்திரேலியாவில் தொடர்ந்து இந்திய மாணவர்கள் தாக்கப்பட்டதற்கு காரணமாய் அமைந்தது.

எனவே அப்படிப்பட்ட ஆபத்துக்கள் நிகழும் முன்பே துரிதமாக செயல்பட்டு உண்மையை உலகறியச் செய்த ஆஸ்திரேலிய அரசிற்கு உலக முஸ்லீம்கள் தனது நன்றியினை தெரிவிக்க வேண்டும். நாமும் வைகறையின் வாசகர்கள் சார்பாக நமது நன்றியினை தெரிவித்துக் கொள் கின்றோம்.




**பிணையத்தால் ஏற்பட்ட பிணைப்பும் பந்தமும்:**

பத்திரிக்கைகளின் பொய் பரப்புரைகளால் ஆஸ்திரேலிய முஸ்லீம்கள் பதற்றமும், சங்கடமும் அடைந்தனர் . காரணம் குற்றச்சாட்டு ஐ.எஸ். (ISIS) பெயரில் எழுந்துள்ளதால் மக்கள்ன கோபம் முஸ்லீம்கள் மீது திரும்புமோ என்று அவர்கள் எண்ணினார்கள். இதன் வெளிப்பாடாக சிட்னி நகரில் ரயிலில் சென்று கொண்டிருந்த முஸ்லீம் பயணி ஒருவர் அச்சத்தோடும் தயக்கத்தோடும் தனது பர்தாவை கழட்டி தனது பையில் வைப்பதை சக பயணியான ரேச்சல் ஜேக்கோப்ஸ் என்ற பெண்மணி பார்த்து விட்டார்.

ரேச்சல் ஜேக்கோப்ஸ் அவர்கள் ரயில் நிலையத்தில் ரயில் நின்றவுடன் முஸ்லீம் பெண்மணியிடம் வந்து உங்களுடைய பர்தாவை நீங்கள் அணிந்து கொள்ளுங்கள் நான் உங்களுக்கு பாதுகாப்பாய் வருகிறேன். ("I will Ride with you") என்று கூறியுள்ளார். இதனை கேட்ட அந்த முஸ்லீம் பெண் ரேச்சலை கட்டிப்பிடித்து தனது அன்பை வெளிப்படுத்தி விட்டு அங்கிருந்து சென்று விட்டார்.இந்த நெகிழ்ச்சியான சம்பவத்தை ரேச்சல் தனது முகநூலில் பதிவிட்டுள்ளார்.

ரேச்சலின் முகநூல் பதிவைப் பார்த்த டெஸ்ஸா என்பவார் நீங்கள் முஸ்லீம்கள் மத ஆடையை அணிந்து செல்வதை பாதுகாப்பற்றதாய் உணர்ந்தால் நான் உங்களுடன் உங்கள் பாதுகாப்பிற்கு வர தயார் நான் மார்ட்டின் பேலஸ் பகுதியில் இருக்கின்றேன் என அவார் தனது டுவிட்டர் கணக்கில் பதிவு செய்துள்ளார். இதற்கு நாங்களும் தயார் என பலர் அவருக்கு பதில் அளித்துள்ளனர். அந்த பதில்களை பார்த்து சந்தோஷப்பட்ட டெஸ்ஸா (I will Ride with you) என முஸ்லீம்களுக்கு ஆதரவான ஹேஷ்டேக்கை உருவாக்கினார்.

டெஸ்ஸா உருவாக்கிய இந்த ஹேஷ்டேக் சில மணி நேரங்களில் ஒன்றரை லட்சம் பதிவுகளை கடந்து முஸ்லீம்களுக்கு ஆதரவான ஒரு இயக்கமாக டுவீட்டரில் உருவெடுத்தது சிலர் தங்களின் பைகளில் (I will Ride with you) என ஸ்டிக்கர் ஒட்டி தங்களது ஆதரவை தெரிவித்தனர். இப்படியாக மேற்கத்திய, இந்திய ஊடகங்களின் பரப்புரையை தகர்த்தெரிந்து ஆஸ்திரேலியாவில் முஸ்லீம்களோடு தனது பந்தத்தை ஆஸ்திரேலியர்கள் உறுதி செய்துள்ளனர். ஆஸ்திரேலியாவில் வாழும் முஸ்லீம்கள் பூங்கொத்துக்களை கொடுத்து தங்களுக்கு ஆதரவளித்தவர்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர். உலகெங்கிலும் உள்ள முஸ்லீம்களும் டுவிட்டரில் தங்களின் நன்றியினை தெரிவித்துள்ளனர்.

ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த பாதிரியார் ஸ்டெய்ன்ஸ் அவர்களின் இரண்டு மகன்களுடன் உயிரோடு இந்துத்துவ தீவிரவாதிகளால் 1999ம் ஆண்டு ஒரிஸாவில் வைத்துக் கொள்ளப்பட்ட போது இந்திய முஸ்லீம்கள் தனது எதிர்ப்புக் குரல்களை ஓங்கி ஒலித்தனர். நமது இதழின் ஆசிரியர் குலாம் முஹம்மது அவர்கள் அப்போது இதழான தனது விடியல் வெள்ளி பத்திரிக்கையில் எழுதியும், தான் செல்லும் இடங்களிலெல்லாம் அதுகுறித்து பேசியும் வந்துள்ளார்.

தனது பொய் புரட்டுகள் உடைப்பட்ட பின்பாவாது இந்தியாவின் மீ(மோ)டியாக்கள் தலை, மூக்கு, காது வைத்து இட்டுக்கட்டி எழுதுவதை நிறுத்திக் கொள்ள வேண்டும். பொய் பரப்புரையை மேற்கொண்ட ஊடகங்களுக்கு எமது கண்டனங்களும்! உண்மையை உரைத்த ஆஸ்திரேலிய அரசிற்கு எமது நன்றிகளும் !! முஸ்லிம்களுக்கு நாங்கள் அரண் என்று உரைத்த ரேச்சல், டெஸ்ஸா போன்றோர்களுக்கு எமது வாழ்த்துக்களும் !!!

# மீத்தேன் திட்டம் ஒரு பார்வை

கோ.வரதராஜன்



மீத்தேன் திட்ட எதிர்ப்பு கூட்டமைப்பு.

**வை**யாக தொழில்களிலேயே வயற்றுக்கு சோறு போடும் தொழில் தான் வணங்கத்தக்கது என்பது நம் முன்னோர் மொழி. அத்தொழிலுக்கு அடிப்படையான விவசாயம் என்பது காவிரி படுகையில் ஒரு கலாச்சாரமாகவே இங்கு இருந்து வருகிறது. அதுவும் இங்கு நடந்த விவசாயம் பற்றி மிக பெரிய இலக்கிய வரலாற்று சான்றுகளும் உண்டு அப்படி வியக்க வைக்கும் விவசாய முறைகள் இரத்த நானங்களை போன்ற ஆறுகள் மற்றும் வாய்க்கால்கள் விவசாய நிலங்களையே பரிசோதனை கூடங்களாக பயன்படுத்தி புதிய புதிய நெல் ராகங்களை உருவாக்கிய மூத்த விவசாயிகளின் ஆராய்ச்சிகள் இப்படி ஏராளமான பெருமைக்கு உரிய நிலமாக இந்த காவேரி படுகை இருந்து வருகிறது.

இங்கு பல்வேறு சமூக பிரிவுகள் இருந்தாலும் எல்லோருக்கும் நிலம் தான் தாயாக இருக்கிறது. இந்த மண் இங்குள்ள ஒவ்வொரு மனிதனின் இரத்தமும் சதையிமாய் இருக்கிறது. இப்படி பல்வேறு பெருமிதங்கள் கொண்ட இம்மண்ணில் காலம் காலமாக விவசாயம் செய்த மனிதர்கள் தற்பொழுது தற்கொலை செய்துகொள்ளும் அவல நிலைக்கு அரசு அவர்களை தள்ளி இருக்கிறது. விளை நிலத்தால் வாழ்தவர்கள் விளை நிலத்தால் வீழ்துபோகும் அவலம் மத்திய மாநில அரசுகளின் தவறான கொள்கை நிலைபாடும் விவசாயிகளின் கண்டுகொள்ளாத போக்கும் தான் காரணம், விவசாயத்திற்கு தண்ணீர் கேட்டு போராடிய எம் மக்கள் விதை கேட்டு போராடிய எம் மக்கள் உரம் கேட்டு போராடிய எம் மக்கள் தங்கள் நிலத்தை அரசாங்கம் அந்நிய நிறுவனத்திற்கு தாரை வார்த்து கொடுத்து விட்டது என்கின்ற செய்தியை கேட்டதிலிருந்து ஏழைகள் நிலத்தை எங்களிடமே கொடுத்து விடுங்கள் என்று அரசுக்கெதிராக போராடி வருகின்றார்கள்,

அந்நிய நிறுவனமான கிரேட் ஈஸ்டர் எனர்ஜி கம்பனி லிமிடட் காவிரி படுகை நிலங்களில் உள்ள நிலக்கரி படிமங்களில் இருந்து மீதேன் எடுக்க போகிறது என்கிற செய்தி இங்கு உள்ள ஒவ்வொரு மனிதனின் ஆள் மனதிலும் ஒரு கலக்கத்தை ஏற்படுத்தி இருக்கிறது. பாண்டிச்சேரி அருகே உள்ள பாகூர் தொடங்கி ஸ்ரீமுஷ்னம், நெய்வேலி, ஜெயம்கொண்ட சோழபுரம் வழியாக மன்னார்குடி வரை காவேரி பதிகையில் நிலக்கரி படிமங்கள் பெரும் அளவில் உள்ளது. இந்த நிலக்கரி இடுக்குகளில் மீத்தேன் என்னும் ஏறிவாயு உள்ளது.

நிலக்கரி இடுக்குகளில் இருக்கும் மீத்தேன் எரிவாயுவை எடுப்பதற்கு கிரேட் ஈஸ்டர் எனர்ஜி கார்பரேசன் லிமிடெட் **(great easter energy co-orperation limited)** நிறுவனத்திற்கு மத்திய அரசு 2010-ல் ஒப்பந்தம் செய்ததுள்ளது. அதை தொடர்ந்து தமிழக அரசும் 4-1-2011-ல் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்ததுள்ளது. ரூ.3600 கோடி முதலீடு செய்து ரூ.60000 கோடி லாபம் ஈட்டக் கூடிய இந்த ஒப்பந்தம் இங்குள்ள அரசியல்வாதிகளுக்கும் சில கோடிகள் கொடுத்து காவேரி படுகையை பாலைவனம் ஆக்க துடித்து கொண்டிருக்கின்றது.

மொத்தம் 691சதுர கி.மி பரப்பில் 667 சதுர கி.மி பரப்பில் மீத்தேன் எரிவாயும், 24 சதுர கி.மி பரப்பில் நிலக்கரி எடுக்கவும் இருகின் றார்கள். 2000 இடங்களில் துளையிடப்பட்டு கிணறு அமைக்க உள்ளார்கள். தஞ்சை மாவட்டத்தில் திருவிடைமருதூர், கும்ப கோணம், ஒரத்தநாடு, பாபநாசம்

வட்டங் களிலும் திருவாரூர் மாவட்டத்தில் குடவாசல் வலங்கைமான் வட்டங்களிலும் கிணறு அமைக்கபடும். முதற்கட்டமாக தஞ்சை மாவட்டத்தில் 12 கிணறுகளும் திருவாரூர் மாவட்டத்தில் 38 கிணறுகள் அமைக்கபடும். திருவாரூர் மாவட்டத்தில் உள்ள மன்னார்குடி பகுதியில் 500 அடி முதல் 1600 அடி ஆழம் வரை நிலகரி படிமங்கள் உள்ளது. இந்த படிமங்களின் இடுக்குகளில் இருக்கும் மீத்தேன் வாயுவை எடுக்க முடியும். அதனால் 1500 அடி வரை உள்ள நீர் முழுமையாக வெளியேற்ற வேண்டும். அப்படி செய்யும் போது மேல் மட்டத்தில் உள்ள நீர் கீழ் நோக்கி இறங்கி விடும். இந்த நீரும் மீத்தேன் எடுக்கும் போது வெளியேற்ற படும். மீத்தேன் எடுப்பதற்காக நிலக்கரி படிமங்களை சுக்குநூராக உடைத்து நொறுக்குவதற்கு பயன்படுத்த படும் தொழில் நுட்பம் மிக ஆபத்தானதாகும். நீரியல் விரிச ™(Hydralic fracturing)எனப்படும் இந்த தொழில்நுட்பத்தை தான் இங்கு பயன்படுத்த உள்ளார்கள். உலக நாடுகள் பலவற்றில் நீரியல் விரிசல்(**Hydralic fracturing**) தொழில்நுட்பதிற்கு எதிர்ப்பு போராட்டங்கள் நடந்து கொண்டு இருப்பதை நாம் கவனிக்க வேண்டும்.

2000 அடி வரை துளையிட்டு குழாய் இறக்கி அங்கிருந்து பூமிக்கடியில் பக்க வாட்டில் மூன்று கிலோமீட்டர் அளவிற்கு துளையிடுவார்கள். இப்படி எல்லா திசை களிலும் பக்கவாட்டில் குழாய்களை செலுத்தி விடுவார்கள் துளையிட்ட பின் 600 வகையான வேதி பொருட்களை மணலுடன் கலந்து அதிக அழுத்தத்துடன் இந்த குழாய்களுக்குள் செலுத்தி நிலக்கரி படிமங்களை சிறு சிறு துகள் களாக சிதர செய்வார்கள். பின்னர் உட் செலுத்திய கலவையோடு மீத்தேனை உரிந்து எடுப்பார்கள். உட்செலுத்தப்படும் 600




**காவிரி படுகையில் மீத்தேன் எடுக்க கிரேட் ஈஸ்டர்ன் எனர்ஜி கார்பரேசன் மட்டும் உரிமம் பெற்று இருப்பதாக நாம் தவராக நினைத்து கொண்டு இருக்கிறோம். நம் பகுதியில் ஜிஜிஎச் நிறுவணம் மீத்தேன் எடுக்க உரிமை பெற்று கச்சா எண்ணை போன்று மீத்தேன் எடுக்கிறது. அதை நிகிமிலி நிறுவணத்தின் மூலம் பல்வேறு தொழிற்சாலைக்கு எரிபொருளாக வழங்க படுகிறது.திருவாரூர் மன்னார்குடி சாலையில் உள்ள வெள்ளகுடி கிராமத்தில் பல தொழில் நிறுவனங்கள் நிகிமிலி நிறுவனத்திடம் எரிபொருள் பெருவதர்க்காக அங்குள்ள ஏழை குடியிருப்புகளை காலி செய்ய சொல்லி மிரட்டி வருகிறது. இதை மாவட்ட நிர்வாகமோ, தமிழக அரசோ கவனத்தில் கொள்ளாமல் தொழில் நிறுவணங்களுக்காக மக்களை காவு கொடுக்க காத்திருக்கிறது. . .**

வகையான வேதி பொருட்களில்(நி மீமீஜ்) எனப்படும் மிகக்கொடிய யுரேனியம், ஈயம், ரேடியம், மெத்தனால், ஹைட்ரோ குளோரிக் அமிலம், ஃபார்மல்-டி-ஹைட்ரேட் மற்றும் பென்சின் கார்சிநோஜென் கலவைகளும் மற்றும் பெயர் வெளியிடாத பல வேதிப் பொருட்களும் இதில் இருப்பது தான் ஆபத் தானது. இப்படி உட்செலுத்தப்படும் இந்த கலவை முழுமையாக வெளியில் வராமல் மண்ணோடும் நீர் தொகுப்போடும் கலந்து மிகப்பெரிய பாதிப்புகளை அந்த பகுதிகளில் ஏற்படுத்தும். மீத்தேன் எரிவாயு எடுக்க பட்டால் நாம் இழக்க வேண்டியவைகள் ஏராளம்:

1. நிலத்தடிநீர் ஒட்டுமொத்தமாக உறிஞ்ச படுவதால் விவசாயம் செய்ய இப்போது இருக்கும் மிச்ச சொச்ச நீரும் பிற் காலத்தில் கிடைக்காமல் வறட்சி ஏற்பட்டு விவ சாயம் என்பதே கேள்விக்குறியாய் போகும் அவல நிலைக்கு தமிழகத்தின் நெற்களஞ் சியமான காவேரி படுகை தள்ளப்படும்.

2. மீத்தேன் எடுப்பதற்காக உறிஞ்சி வெளியே கொட்டப்படும் நீர் கடல் நீரை விட பன்மடங்கு உப்புத் தன்மை கொண்டது. இது வெளியே கொட்டப் படும்போது ஆறுகளிலும் குளங்களிலும் கலந்து விவசாய நிலங்கள் உப்பலங்களாக மாற்றிவிடும்.

3. மீத்தேன் எடுக்கும் போது நிலத்தில் இருக்கும் குடிநீரோடு கலந்து மீத்தேன் வாயு வரும் ஆபத்து இருக்கிறது. சமீபத்தில் சென்னை யில் எண்ணெய் குழாயில் ஏற்பட்ட கசிவால்



குடிநீர் தீ பற்றி எரிந்ததை நாம் அறிவோம். அது போல் மீத்தேன் எடுக்கப்படும் குழாய் களில் கசிவு ஏற்பட்டால் அந்த நீரானது நம் சுற்றுபுரத்தோடு கலந்து சுகாரத்தை கேள்வி குறியாக்கும்?

*4.* நிலத்தின் அடியில் நெருக்கமாக தோண்டி வெடி வைப்பதால் தஞ்சை, திரு வாரூர், நாகை ஆகிய மாவட்டங்களில் பூகம் பம் ஏற்படக்கூடிய ஆபத்துகளை இந்த வெடி வைப்பு உருவாக்கும்.

*5.* மீத்தேன் எரிவாயுவை கொண்டு செல்ல குழாய் பதிப்பது, சாலை அமைப்பது போன்ற பணிகளை செய்யும் போது நமது விவசாய நிலங்கள் இன்னும் பாதிப்படையும். இந்த குழாய்களில் கசிவு ஏற்பட்டாலோ அல்லது உடைந்துபோனாலோ ஒருபுறம் நமது சுற்றுசூழல் மாசுபடும் மறுபுறம் தனது தொழில் நுட்ப கோளாறுகளை மறைக்க குழாய்களில் ஏற்பட்ட சேதத்திர்காக தனது வாழ்வாதா ரத்தை காப்பதற்காக போராடும் மக்களின் மீதே தீவிரவாத வழக்கு போடவும், தேச விரோத செயல் என அப்பாவிகள் மீது குற்றம் சுமத்தவும் வாய்ப்புள்ளது. இத்தகைய கொடூரமான மக்கள் விரோத செயலை தான் நாடுமுழுவதும் வாழ்வாதாரத்தை காப்பதற்காக போராடும் அப்பாவி மக்களுக்கு எதிராக ஆளும் அரசுகள் தொடர்ந்து செய்து வருகின்றது.

*6.* போராட்டங்களை நசுக்க செய்யும் பசப்பு வார்த்தையான வேலைவாய்ப்பும் அந்த பகுதியில் உள்ளவர்களுக்கு கிடைக்க அறவே வாய்ப்பில்லை. தொழில்நுட்ப அறிவு உள்ளவர்களால் மட்டுமே இந்த பணியை செய்ய முடியும் எனக்கூறி நம்மவர்களை அந்த நிறுவனங்கள் புறக்கணித்துவிடும்.

*7.* புற்றுநோய், தோல் நோய், சுவாச கோளாறு, மரபணு மாற்று கோளாறுகள், மூலை நரம்பு கோளாறுகள் என பல்வேறு நோய்கள் ஏற்பட வாய்ப்புள்ளது.

*8.* மீத்தேன் வாயுவையும், நீரையும் நிலத்தில் இருந்து வெளியேற்றிவிட்டால் கிழே ஏற்படும் வெற்றிடத்தில் கடல் நீர் உட்புகுந்து குடிநீர் உப்பு நீராக மாறி குடிநீர் இல்லாத நிலையை ஏற்படுத்தும்.

*9.* தஞ்சை மாவட்டத்தில் 8வட்டங்கள், திருவாரூர் மாவட்டத்தில் 7வட்டங்கள், மற்றும் நாகை மாவட்டத்தில் 8வட்டங்களில் வாழும் 53இலட்சம் மக்களும் காவேரி படுகையில் உள்ள கிட்ட தட்ட இரண்டு கோடி மக்களும் வாழ இடமில்லாமல் வேறு வாழ்விடம் தேடி அகதிகளாக மாறும் அபாய நிலை ஏற்படும்.

இப்படியாக இன்னும் ஏராளமாகவும் தாரளமாகவும் பட்டியலிடலாம். அரசால் தீட்டபடுகின்ற திட்டங்கள் மக்களுக்கானதாக இருக்க வேண்டும் அல்லது மக்களின் வாழ் வியலை சிதைக்காமல் இருக்க வேண்டும்.

மக்களுக்கான அரசு என்றால் அது தான் வகுக்கும் திட்டங்களை மக்களின் வாழ் வாதாரங்களை கவனத்தில் கொண்டு தீட்ட வேண்டும் அப்படி இல்லாமல் மக்களை காவு கொடுத்து பன்னாட்டு நிறுவனங்களை வளர்க்க நினைக்கும் ஒரு முதலாளித்துவ அரசு எப்படி மக்களுக்கான அரசாக இருக்க முடியும்.

ஆரோக்கியமான மண் என்பது உயிருள்ள ஒரு அமைப்பு அதை சிதைத்துவிட்டு இயற்கையை எப்படி பாதுகாக்க முடியும். எதிர்கால இந்தியாவின் மக்கள் தொகைக்கு ஏற்ப இங்கு உணவு உற்பத்தி செய்யப்பட வேண்டும் அதற்கு தரிசு நிலங்களை கூட விளை நிலங்களாக மாற்றி விவசாயம் செய்யபட வேண்டும், இப்படியாக உருப்படியான எந்த நடவடிக்கையும் எடுக்காமல் உணவு உற்பத்தி மண்டலமாகவும் தமிழகத்தின் நெற்களஞ் சியமாக இருக்கின்ற காவேரி படுகையை சிர ழித்து எண்ணெய் உற்பத்தியும், மீத்தேன் வாயுவும், நிலகரியும் எடுபதற்கு விளை நிலங்களை கொடுப்பது மக்களுக்கு அரசு செய்யும் துரோகமாகும் எனவே உடனடியாக அரசு இந்த மாபாதக திட்டத்தை கைவிட வேண்டும். வனவிலங்குகளுக்கு பாதுகாக் கப்பட்ட பகுதி இருப்பதுபோல், பறவை களுக்கு சரணால யங்கள் இருப்பதுபோல், தொழில் நிறுவனங்களுக்கு தனியாக தொழிற்பேட்டை கள் இருப்பதுபோல் தமிழகத்தின் நெற்களஞ்சியமான இந்த காவேரி படுகையை பாதுகாக்கப்பட்ட விவசாய பகுதியாக அரசு அறிவித்து இந்த தாய் மண்ணை காக்க வேண்டும்! மக்கள் நலம் பாதுகாக்கப்பட வேண்டும்!!



# இந்தியச் சிறைச்சாலைகள் முஸ்லிம்கள் மற்றும் தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்விடங்களா?

முஸ்லிம்கள், தலித்கள், ஆதிவாசிகள் இந்திய சமுதாயத்தில் ஒடுக்கப்பட்டு ஓரங்கட்டப்பட்டு அரசால் தொடர்ந்து வஞ்சிக்கப்பட்டு வருகின்ற இம்மூன்று சமுகங்கள் தான் மொத்த இந்தியச் சிறைசாளைகளில் வாழும் சிறைகைதிகளில் அரைவாசிக்கும் அதிகமானோர். இரண்டு மாதங்களுக்கு முன்பு சிறைத் துறையால் வெளியிடப்பட்ட அறிக்கையே அதிரவைக்கும் இத்தகவலை விளம்பியது. இந்தியாவின் மொத்த ஜனத்தொகையில் இம் மூன்று சமுதாயங்களின் மொத்த விகிதாச்சாரம் வெறும் 39 சதவீதம் தான். ஆனால் இந்திய சிறைகளில் இவர்களின் பங்கோ 53 சதவீதத் திற்கும் அதிகமானது என்றே இவ்வறிக்கை கூறுகிறது.

2013-ல் எடுக்கப்பட்ட சிறைத்துறை கணக்கெடுப்பு 4.2 இலட்சம் மக்கள் சிறையிலிருப்பதாக தெரிவிக்கின்றது. அதில் கிட்டதட்ட 20 சதவீதம் முஸ்லிம்களே ஆனால் இந்திய மக்கள் தொகையில் முஸ்லிம்களின் மொத்த பங்கோ வெறும் 13 சதவீதம் என்று தான் 2001(**Census**) மக்கள் தொகை கணக்கெடுப்பு கூறுகிறது. 2011ல் மத வாரியாக எடுக்கப்பட்ட கணக்கெடுப்பு வெளிக்கொணரப்பட்டாலும் அதன் விகிதாசாரத்தில் பெரிதொன்றும் மாற்றம் இருக்க போவதில்லை. சிறைக் கைதிகளில் 22 சதவிகிதத்தினர் தலித்கள், அதா வது தலித்களில் நால்வரில் ஒருவர் சிறையில் இருக்கின்றனர் என்பது கவலைக்குரியதாகும். ஆனால் 2011ன் மக்கள் தொகை கணக்கெடுப்பு அவர்களின் மொத்த விகிதாச்சாரம் 17 சதவீதம் மட்டுமே என்கிறது. இதில் ஆதிவாசிகளின் பங்கு 11 சதவீதம் என தெரிவிக்கின்றது இவ்வறிக்கை. ஆனால் மொத்த ஜனத் தொகையில் அவர்களின் பங்கோ வெறும் 9 சதவீதம் மட்டுமே.

சிறைக்கதிகளில் இம்மூன்று சமூகத்தினரே அரைவாசிக்கும் மேல் இருப்பதால் இச்சமூகங்களை சார்ந்தவர்கள் அக்கிரமங்களையும் அடாவடித் தனங்களையும் அரங்கேற்றுபவர்கள் என்பதல்ல. மாறாக அவர்கள் பொருளாதார ரீதியாகவும் சமூக ரீதி யாகவும் பின் தங்கியவர்கள் இப்படி பின் தங்கியவர்கள் என்பதாலேயே இவர்கள் குறி வைக்கப்பட்டு பொய் வழக்குகளின் மூலம் கைதிகளாகவே காலங்களை கழிக்கின்றார்கள் இது இந்த மூன்று சமூகத்தின் மீதான அரசின் ஓரவஞ்சனையையே காட்டுகின்றது.

இந்த சமூகங்களை சேந்தவர்கள் தாங்கள் மீது இட்டுக்கட்டப்படும் வழக்குகளை வாதாடுவதற்கு கூட வக்கற்றவர்களாக பொருளாதார ரீதியில் பின்தங்கியவர்களாக உள்ளனர். இன்னும் எந்த அளவிற்கு இவர்களின் நிலை உள்ளதென்றால் புனையப்படும் பொய் வழக்குகளில் பிணை எடுப்பதற்கு கூட வருமான வழியற்றவர்கள் என்பதே பெரும்பாலான நிபுணர்களின் கருத்தாகவும் உள்ளது. மேலும் சிலர் கூறுகையில் இச்சமூகங்கள் பொய் வழக்குகளை கொண்டே குறிவைக்கப் படுகின்றார்கள் என்கின்றனர்.

முன்னாள் தில்லி உயர்நீதிமன்ற நீதிபதி மற்றும் சச்சார் கமிட்டியின் தலைவருமான ராஜேந்திர சச்சார் குறிப்பிடுகையில்:

“முஸ்லிம் இளைஞர்கள் பல வழக்குகளில் ஆயுள் கைதிகளாகவே ஆயுளை கழிக்கிறார்கள் “ என்றார்

வழக்கறிஞர் மற்றும் மனித உரிமை ஆர்வலரு மான கொலின் கோன் சிலேவ்ஸ் (**Colin gon slaves**) கூறுகையில்:

“இம்மூன்று சமுதாயங்களிலும் வறு

## OUT OF PROPORTION

**PERCENTAGE OF POPULATION**

| | In Prison | India |
|---|---|---|
| Muslims | 20% | 13.4% |
| Dalits | 22% | 16.6% |
| Adivasis | 11% | 8.6% |
| Total | 53% | 38.6% |

Source: Prison Statistics of India 2013; Census

மையே வளமாக வாழ்கிறது இதுவே அவர்களை சட்ட அமைப்பினுள் அடியெடுத்து வைப்பதற்கு தடையாக இருக்கின்றது. மேலும் நமது அரசமைப்பு இன மற்றும் சாதிய பேதங்களை சாராம்சமாக கொண்டே பிணையப்பட்டுள்ளது. ஆகையால் தான் இச்சமூதாயங்களை சார்ந்தவர்கள் காவல்துறை மற்றும் நீதித்துறையிலும் அரிதாகவே அங்கம் வகிக்கின்றனர்" என்று கூறினார்.

இப்படியாக அரசுத்துறைகளில் இந்த சமூகங்களின் பிரதிநிதித்துவம் குறைவாக உள்ளதே அவர்களின் இந்த நிலைக்கு காரணமாக அமைந்திருக்கிறது .

சிறைக்கைதிகளில் கிட்ட தட்ட 68 சதவீதம் விசாரணை கைதிகளாகவே உள்ளனர்.

சச்சார் கமிட்டியின் உறுப்பினர் மற்றும் செயலாளருமான அபு ஸாலிஹ் ஷெரிப் முஸ்லிம்களின் நிலை பற்றியான புதிப்பிக்கப்பட்டதோர் அறிக்கையை வெளியிட்டுள்ளார். அதில் அவர் குறிப்பிடுகிறார்:

"(முஸ்லிம்கள்) சிறைகளிலேயே தங்கள் காலங்களை கழிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது ஏனெனில் சட்டங்களை பெரும்பாலும் ஆளும் அரசுகள் முஸ்லிம்களுக்கு எதிராகவே பயன்படுத்து கின்றன, தடுப்பு காவல் சட்டங்களின் கீழ் சிறை கைதிகளாக இருப்பவர்களில் கிட்ட தட்ட எண்ணிக்கையில் சரிபாதியினர் முஸ்லிம்கள் என்பது கவனிக்கத்தக்கது ஆக இவைகளே அரசாங்கம் விரைவாக விசாரித்து விடைக்கான வேண்டிய முக்கிய விசயமாகும்"

வழக்கறிஞரும் மற்றும் தலித்களின் தேசிய அமைப்பைச் சேர்ந்தவருமான ரமேஷ் நாதன் குற்றஞ்சாட்டி அறிக்கை வெளியிடுகையில்:

"தலித்களின் மீது பொய்யான வழக்குகளை புனைவது அவர்களை அச்சுறுத்துவத்தின் ஓர் அம்சமே அதன் விளைவு தான் ஒடுக்கப்பட்ட சமுதாயங்களை சார்ந்த அதிகமானோர் சிறைகளில் இன்று சிக்கி தவிக்கின்றனர்" என்றார்.

ஓர் வழக்குரைஞனாக என் அனுபவத்தில் பார்கையில்: எப்போதெல்லாம் ஓர் தலித் வன் கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் வழக்கு தொடுக்கின்றார்களோ அப்பொழுதெல்லாம் புனையப்பட்டதோர் பொய் எதிர் வழக்கை சில குற்றவியல் சட்டங்களின் கீழ் குற்றவாளிகளால் கொடுக்கப்படுகிறது" என்றும் கூறினார்

**(NCRB)** தேசிய குற்றவியல் ஆவணக் காப்பகம் 1995ஆம் ஆண்டு முதல் சிறைசாலைகளின் புள்ளி விவரங்களை ஆண்டு தோறும் வெளியிடுகின்றது. இருப்பினும் அவை சாதிவாரியாக 1999ஆம் ஆண்டு முதல் தரப்படுகின்றது. முஸ்லிம்கள் தலித்கள் மற்றும் ஆதிவாசிகளின் விகிதாச்சாரம் கடந்த 15 ஆண்டுகளாகவே மாற்றமில்லாமல் காணப்படுவது அமைப்பு முறையில் சிக்கல் இருப்பதையே காண்பிக்கின்றது.

ஆகா இந்நிலைமார ஏதோ அங்கொன்றும் இங்கொன்றுமாய் நடத்தப்படும் ஆர்ப்பாட்டங்களும் போராட்டங்களும் முடிவாகாது மாறாக நீதிக்கான போராடங்களை மூன்று சமூகங்களும் ஒருங்கே இணைந்து முன்னெடுத்து செல்ல வேண்டும் அதற்கு முஸ்லிம்கள் அடித்தளமிட வேண்டும். நாளை விடியும் இந்த வஞ்சிக்கப்பட்ட சமூகங்களின் வைகறையின் வெளிச்சமானது நிம்மதியாகவும், சுகந்திரமானதாகவும் அமைய இறைமறை கொண்டு கரம் கோர்ப்போம் களம் காண்போம்.

**Source: NCRB Report 2014, ( times of india, subadh varma Nov24,2014)**

- மு.இம்தியாஸ் அஹமது.

**ஆர்.எஸ்.எஸ்.இற்கும் தீவிரவாதத்திற்கும் உண்டான தொடர்பு**
**அன்றும்! அன்றும்!!**
**இன்ஷா அல்லாஹ் அடுத்த இதழில்**

# குண்டுவெடிப்பு வழக்குகள்

## 14 ஆண்டுகள் சிறைவாசத்திற்கு பின் மேலும் 12 முஸ்லிம்கள் விடுதலை.

நவம்பர் 20 ஆம் நாள் 2014 அன்று"குர்லா" நீதிமன்றத்தில் அது நடந்தது. இந்தத் தீர்ப்பில் எட்டு முஸ்லிம் இளைஞர்கள் விடுதலைச் செய்யப்பட்டார்கள். மொத்தமாக நவம்பர் 2014 இல் விடுதலை செய்யப்பட்டவர்கள் விபரம் :

(அ) குஜராத் - இல் ஒரு நீதிமன்றம் 3பேரை விடுதலை செய்தது.

(அ) ஹைதராபாத் - நீதிமன்றம் ஒரு ஜியாவுல் ஹக் - ஐ விடுதலை செய்தது.

இதில் குர்லா நீதிமன்றம் விடுதலை செய்தர்வகள் (8) அத்தனைப் பேரும் இந்திய மாணவர் இஸ்லாமிய இயக்கம் "SIMI" தடை செய்யப்பட்ட பின்னணியில் 2001 செப் டம்பர் 27ஆம் நாள் கைது செய்யப்பட்ட வர்கள்.

முதலில் கைது செய்யப்பட்ட எட்டுப் பேரும் மாணவர்கள் இஸ்லாமிய இயக்கத் தோடு தொடர்புடையவர்கள். அந்த இயக்கம் தடை செய்யப்பட்டு விட்டது. அதனால் கைது செய்கின்றோம் என்றார்கள்.

ஆனால் இந்திய மாணவர் இஸ்லாமிய இயக்கம், தடை செய்யப்பட்ட தடையாணை வந்து சேர்வதற்குள் கைது செய்துவிட்டார்கள். ஆகவே இந்த கைது செல்லாது என வழக்கறிஞர்கள் வாதாடினார்கள். உடனேயே கைது செய்யப்பட்டவர்கள் அனைவரும் பின்னர் விடுவிக்கப்பட்டு விட்டார்கள்.

ஆனால் காவல் துறையால் பொறுத்துக் கொள்ள இயலவில்லை. உடனேயே அவர்களை மீண்டும் கைதுப் செய்து விட்டார்கள். இப்போது வேறு காரங்களைக் கூறினார்கள். அந்த காரணங்கள் :

(அ) மும்பை பேருந்து நிறுத்தத்தில் நின்றுக் கொண்டு கோஷம் போட்டார்கள்.

(ஆ) இந்தியாவுக்கு எதிராகப் போர் தொடுக்கத் திட்டம் போட்டார்கள்.

இப்படியெல்லாம் பொய்யை அளந்துக் கொட்டினார்கள். கைது செய்ததற்கு ஆதாரமாக அவர்களிடம் சில இலக்கியங்களும் பிலேடன் அவர்களுடைய போட்டோக்களும் இருந்தன என்றார்கள். ஆனால் எதையும் நீதி மன்றத்தில் காட்டி டவில்லை.

இவர்களுக்கெதிராக சாட்சியம் சொல்ல, காவல்துறையை சார்ந்த சிலரையே அழைத்து வந்தார்கள். இந்த சாட்சியங்கள் தூர்ந்து போயின. காவல் துறை பொய் சாட்சி யங்களை நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால் பிணையும் கிடைக்கவில்லை.

இவர்கள் விடுவிக்கப்படுவார்கள் என்ற நிலை நெருங்கியபோது, 2006 ஆம் ஆண்டு மும்பை இரயில் குண்டு வெடிப்புகள் நடந்தன. அதில் 188 பேர் இறந்தார்கள், 800 பேர் காய மடைந்தார்கள். இந்த மும்பை வெடிகுண்டு வழக்கோடு இவர்களை சம்பந்தப்படுத் தினார்கள். அதுவும் இந்த வழக்கோடு நீதிமன்றத்தில் எடுபடவில்லை. அதனால் அவர்களை விடுதலை செய்கின்றேன் எனக் கூறி விடுதலைச் செய்து விட்டார்கள்.

மும்பை இரயில் குண்டுவெடிப்பு தீர்ப்பு இந்த மாதம் (ஜனவரி 2015) வரலாம் வந்தால் என்ன நடக்கும் என்பதை பொறுத் திருந்து பார்ப்போம்.

ஆனால் இப்போது இவர்கள் விடுதலை செய்யப்பட்டு விட்டதால் தீர்ப்பு சாதக மாகவே அமையும். இன்ஷா அல்லாஹ்.

இதிலிருந்து இந்த அப்பாவிகளை சிக்க வைக்கத்தான் 2006 மும்பை இரயில் குண்டு வெடிப்பு ஏற்பாடு செய்யப்பட்டதோ என எண்ணிடத் தோன்றுகிறது. உண்மையான குற்றவாளி விரைவில் வெளிச்சத்திற்கு வரு வார்கள் என நம்பலாம்.(இன்ஷா அல்லாஹ்).

#### 2006 குஜராத் குண்டுவெடிப்பு வழக்குகளிலும் விடுதலை

மும்பை குர்லா நீதிமன்றம் தீர்ப்பு வழங்கிய அதே நாளில் குஜராத், அஹமதாபாத் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு ஒன்றில் மூன்று பேரை விடுதலை செய்தது.

பிப்ரவரி மாதம் 19 ஆம் நாள் 2006 ஆம் ஆண்டு குஜராத்தில் உள்ள காலுப்பூர் இரயில் நிலையத்தில் நடந்த குண்டு வெடிப்பு வழக்கில் தான் அடுத்த தீர்ப்பு.

இந்த காலுப்பூர் குண்டு வெடிப்பில் மூன்று முஸ்லிம் இளைஞர்கள், கைது



செய்யப்பட்டார்கள். அவர்கள் ;

அப்ரோஸ் பத்தான் (வயது 33),

பிலால் அஹ்மத் (வயது 32),

முஸ்தஃபா செய்யித்(வயது 30)

என்பவராவர். இந்த குண்டுவெடிப்பில் 10 பேர் காயம் பட்டார்கள்.

இந்த வழக்கில் மிகப்பெரிய வேடிக்கை என்னவென்றால் குற்றம் சுமத்தப்பட்ட மூன்று பேருக்கும் இந்த குண்டு வெடிப்பைப் பற்றித் தெரியாது. அதேபோல அவர்கள் இந்த குண்டு வெடிப்பில் குற்றவாளிகளாகச் சேர்க்கப் பட்டிருக்கின்றார்கள் என்பதும் தெரியாது. அவர்கள் மீது அவ்ரங்காபாதத்திற்கு ஆயுதங்கள் கடத்தினார்கள் என்ற குற்றச் சாட்டு மட்டுமே இருந்தது.

குஜராத்தில் எந்த அளவுக்கு முஸ்லிம்கள் நொந்தும், செத்தும் கொண்டிருக் கிறார்கள் என்றால், சிறையிலிருப்பவர்களுக்கு நாம் என்னென்ன நிகழ்வுகளில் குற்றம் சாட்டப் பட்டிருக்கின்றோம் என்பதே தெரியவில்லை. அவர்கள் தகவல் அறியும் உரிமையின் கீழ் மனுப்போட்டு அதைத் தெரிந்துகொள்ள முயற்சி செய்தார்கள்.

தகவால் அறியும் உரிமை - மனுவை பரிசீலனைச் செய்த காவல்துறையினர், நாங்கள் எந்த தகவளையும் தந்திட இயலாது, காரணம் வழக்கு நடந்துக் கொண்டிருக்கிறது என்றனர்.

வழக்கறிஞர் ஷஹீத் நதீம், என்பவர்தான் குற்றம் சுமத்தப்பட்ட முஸ்லிம்களுக்காக வாதாடினார் கள். அவர்கள் இந்த அவலங்களை நீதிமன்றத் தில் திறம்பட எடுத்து சொன்னார்கள். நீதி மன்றம் அவர்களை விடுதலை செய்தது.

**அவ்ரங்கா பாத் ஆயுதம் கடத்தல்**

இங்கே லாரி லாரியாக ஆயுதங் களையும் ஆர்.டி.எக்ஸ் வகை வெடிமருந்து களையும் கடத்தினார்கள். கடத்தியவர் நமது இராணுவ அதிகாரி கலோனல் பிரசாந்த் புரோகித் என்பவராவார். இது பின் நாட்களில் தாம் உலகுக்கு தெரியவந்தது.

இந்த இராணுவ அதிகாரிதான் ஆயுதங் களையும்,வெடிப்பொருட்களையும் கடத்து கின்றார் என்பதை அறிந்திடாத காவல் துறையினர் அவற்றை பிடித்து விட்டார்கள். ஆனால் உண்மையான குற்றவாளியை கைது செய்திட இயலாத நிலையில் பழியை முஸ்லிம் கள் மேல் போடா முடிவு செய்தார்கள். அதி லும் இந்த அப்பாவி இளைஞர்கள்தான் கைது செய்யப்பட்டார்கள்.

தற்போது இந்த வழக்கிலும் அவர்கள் விடுதலை செய்யப்பட்டார்கள்.

**ஹைதராபாத் திரைப்பட அரங்கு குண்டு வெடிப்பிலும் விடுதலை**

2006 ஆம் ஆண்டு மே திங்களில் ஓடியோன் என்ற திரைப்பட அரங்கில் குண்டு வெடித்தது. இதில் குண்டு வைத்த இந்துத்துவ தீவிரவாதிகளை கைது செய்யவில்லை என்றும் பழியை முஸ்லிம்கள் மேல்தான் போட்டிட வேண்டும் என்றும் மேலிடத்தில் முடிவு செய்தார்கள்.

நான்கு ஆண்டுகள் கழித்து 2010 ஆம் ஆண்டு ஜியாவுல் ஹக் என்ற முஸ்லிம் இளைஞன் கைது செய்யப்பட்டான்.

**NIA** என்ற புதிதாக அமைக்கப்பட்ட தேசியப் புலனாய்வுக்குழுவும் இதில் தன்னால் இயன்ற மட்டும் பொய்களை கட்டவிழ்த்து விட்டது. எதுவும் நீதிமன்றத்தில் நிற்கவில்லை. அதனால் ஜியாவுல் ஹக் ஐக் நவம்பர் 25 ஆம் நாள் நீதிமன்றம் விடுவித்தது. அப்போது இந்த குண்டுவெடிப்புகள் பற்றிய செய்திகள் நொடிக்கு மூன்று முறை காட்டிய தொலைக் காட்சிகள் அவர்கள் விடுதலை செய்யப்பட்ட போது கண்ணை மூடிக்கொண்டன. இந்த 12 விடுதலைகளிளிருந்தும் பெறப்படும் உண்மை என்னவெனில் இந்தக் குண்டுவெடிப்புகளை உண்மையிலே நடத்தியது யார்? இந்த குண்டுவெடிப்புகள் நடக்கவில்லை என எடுத்துக் கொள்ளலாமா?

செய்தி ஆதாரம் : Radiance Views Weekly 7 - 13, டிசம்பர் 2014

- MGM

விளம்பரங்களுக்கு - 81481 29887

**VAIGARAI VELICHAM**

52/1,Mannady Street, Room No.7,
Mannady, Chennai - 600 001.
Tel - 044 25224887
Mob: 9841675657
E-Mail: darultrust@yahoo.com
Web: www.darultrust.in




# 2027இல் இஸ்ரேல் இருக்காது

- நேர்காணல் - ஷெய்க் அஹ்மத் யாஸீன்

இஸ்லாத்திற்காக தன் இன்னுயிரை ஈந்த முதியவர், நடக்க இயலாத நிலையிலும் இஸ்லாத்தை விட்டுக்கொடுக்காமல் பாலஸ் தீனர்களை வழி நடத்தியவர், இஸ்ரேலியர் களுக்கு சிம்ம சொப்பனமாக விளங்கியவர். தொழுதுவிட்டு வரும் போது இஸ்ரேலிய இராணுவத்தினரால் வான்தாக்குதல் மூலமாக கொலை செய்யப்பட்டவர். ஹமாசின் ஆன்மீக தலைவர் ஷேக் அஹமது யாசீன் அவர்கள்.

(மிகப் பிரபலமான ஒரு நேர்காணல் இது. ஹமாஸ் இயக்கத்தின் ஸ்தாபகத் தலைவர் ஷெய்க் அஹ்மத் யாஸீனை பிரபல அல்ஜஸீரா ஊடகவியலாளர் அஹ்மத் மன்ஸுர் நேர் காணல் கண்டார். சுமார் ஒரு தசாப்தத்திற்கு முன்னரான இந்நேர்காணலை சடுதியாக காணக்கிடைத்தது. அதன் சிறியதொரு பகுதி இது. 2027 இல் இஸ்ரேல் இருக்காது என இந்நேர்காணலின் ஷெய்க் அஹ்மத் யாஸீன் வலியுறுத்தி கூறுகிறார்.)



**அஹ்மத் மன்ஸுர்**: இஸ்ரேல் உருவாகிய 1948 காலப்பகுதியை நீங்கள் கண்டுள்ளீர்கள். அது உருவாகி இப்போது (1998) 50 வருடங்கள் கடந்திருக்கின்றன. அதன் எதிர்காலம் குறித்த உங்கள் பார்வை என்ன?

**அஹ்மத் யாஸீன்**: நான் சொல்வது, இஸ்ரேல் அநியாயத்தின் மீதும் கற்பழிப்பின் மீதும் எழுந்துள்ளது. அநியாயம், கற்பழிப்பின் மீதெழும் நாடுகள் எல்லாம் அழிந்தே தீரும்.

**அஹ்மத் மன்ஸுர்**: நிலைத்து தாக்குப் பிடிக்கக் கூடியவாறான அனைத்து பலத்தை அது கொண்டிருந்தாலுமா?

**அஹ்மத் யாஸீன்**: பலம் தொடர்ந்து நிலைத் திருப்பதில்லை. உலகத்தில் சக்தி தொடர்ந்து ஒருவரிடம் நிலைத்திருப்பதில்லை. அது அடிப்படையிலிருந்து ஆரம்பிக்கிறது. பின்னர் வளர்ந்து குழந்தைப் பருவம், வாலிபம், முதுமை என்றாகிறது. பின்னர் அதன் கதை முடிந்து விடுகிறது.

**அஹ்மத் மன்ஸுர்**: இப்போது நீங்கள் இருக்கும் கட்டம் என்ன?

**அஹ்மத் யாஸீன்**: இஸ்ரேல் அடுத்த நூற்றாண் டின் முதற் காற்பகுதி வரை இருக்கும். வரையறுத்துச் சொல்வதாயிருந்தால், 2027 இல் இஸ்ரேல் இருக்காது.

**அஹ்மத் மன்ஸுர்**: எந்த அடிப்படையில் இப்படிச் சொல்கிறீர்கள்?

**அஹ்மத் யாஸீன்**: ஏனென்றால், தலைமுறைகள் ஒவ்வொரு நாட்பது ஆண்டுகளிலும் மாற்ற முறுவதாக அல்குர்ஆன் எமக்குச் சொல்கிறது.



Assassinated Sheikh Ahmed Ismail Yassin

முதற் நாட்பதுகளில் நாங்கள் படுகொலை செய்யப்பட்டோம். இரண்டாவதில் இன்திபாழா எழுந்தது. எதிரியை எதிர்கொள்ளல், சவால்விடுதல், போராட்டம், குண்டுகள் எனக் காணப்பட்டது. மூன்றாவது நாட்பதுகளில் இன்ஷா அல்லாஹ் இஸ்ரேலின் நிரந்தர அஸ்தமனம் நிகழும்.

**அஹ்மத் மன்ஸுர்**: இந்த அவதானத்தை எங்கிருந்து பெற்றீர்கள்?

**அஹ்மத் யாஸீன்**: இது அல்குர்ஆனிலிருந்து பெறப்பட்டது. பனூ இஸ்ரவேலர்களை உதாரணத்திற்கு எடுத்துக் கொண்டால், 40 வருடங்கள் அவர்கள் அலைந்து திரியச் செய்யப்பட்டது ஏன்? அந்தக் காலம் நோய் வாய்ப்பட்ட களைப்படைந்து திரிந்த சமூகத்தை மாற்றியது. எதிர்வரும் பரம்பரை விடுதலையின் தலைமுறையாக இருக்கும் இன்ஷா அல்லாஹ்.

**அஹ்மத் மன்ஸுர்**: எதிர்காலத்தை எப்படிப் பாரக்கிறீர்கள்.

**அஹ்மத் யாஸீன்**: நான் சொல்வது, எமது பாதை கஷ்டமானது. அது தியாகங்களையும் பொறுமையையும் வேண்டிநிற்கிறது. ஆனால் எதிர்காலம் எங்களுக்குத்தான். அது சந்தேகமற வரும். அல்லாஹு தஆலா தனது வாக்குறுதிகளை மீற மாட்டான்.

**அஹ்மத் மன்ஸுர்**: வாழ்க்கையில் உங்கள் இலட்சியம் என்ன? இவ்வுலக வாழ்வில் எதனை சாதிக்க விரும்புகிறீர்கள்?

**அஹ்மத் யாஸீன்**: நான் ஒரு மனிதன். எனது எதிர்பார்ப்பு ஒன்று தான். அல்லாஹ் என்னை பொருந்திக் கொள்ள வேண்டும் என்பதுதான் எனது ஒரே எதிர்பார்ப்பு

இந்த பேட்டியினை ஃபேஸ்புக்கின் பக்கத்திலிருந்து நீக்கக்கோரி அல்ஜசீரா ஊடகவியலாளர் மன்சூர் அவர்களுக்கு பேஸ்புக் கடிதம் எழுதியது.

**<http://www.moroccoworldnews.com/2014/08/135786/facebook-warns-aljazeeras-ahmed-mansour-over-sheikh-yassine-video/>**

***முஃமின்களில் நின்றுமுள்ள மனிதர்கள் அல்லாஹ்விடம் அவர்கள் செய்துள்ள வாக்குறுதியில் உண்மையாக நடந்து கொண்டார்கள்; அவர்களில் சிலர் (ஷஹீதாக வேண்டும் என்ற) தம் இலட்சியத்தையும் அடைந்தார்கள்; வேறு சிலர் (ஆர்வத்துடன் அதை) எதிர் பார்த்துக் கொண்டு இருக்கிறார்கள் - (எந்த நிலைமையிலும்) அவர்கள் தங்கள் வாக்குறுதியிலிருந்து சிறிதும் மாறுபட வில்லை.***

***அல்குர்ஆன் 33:23***

இந்த குர்ஆன் ஆயத்து அனஸ் பின் நள்ர் (ரலி) அவர்களுடைய விஷயத்தில் இறக்கப்பட்டது என ஹதிஸ் கலை வல்லுனர்கள் கருதுகின்றனர். அனஸ் பின் நள்ர் (ரலி) அவர்கள் ஷஹீதாக்கப்பட்டபோது அவர்களுடைய உடலில் 80க்கும் மேற்பட்ட வெட்டுக்காயங்கள் இருந்தன. அவர்களுடைய சகோதரி அவரின் விரலில் உள்ள அடையாளத்தை வைத்து தான் இறந்தது அவர் என இனங்கண்டு கொண்டார்கள்.

ஷஹீத் ஆகும் லட்சியத்தை மனதில் கொண்டிருந்த ஷேக்அஹமது யாசீன் அவர்கள் எதிரிகளின் தாக்குதலில் உடல் சின்னா பின்னப்படுத்தப்பட்டு ஷஹீத் ஆனார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

**- ஏஹ்மதுல்லாஹ்**

### அமெரிக்காவின் உளவுத்துறை செய்த அநியாயங்கள்!.

# இரகசிய சித்திரவதைக் கூடங்களை பற்றிய ஆய்வறிக்கையும் பெஷாவர் தாக்குதலும்




40க்கும் மேற்பட்ட ஜிஹாதி குழுக்கள் இஸ்ரேலிய உளவுத்துறையான மொசாத்-ஆல் இயக்கப்படுகின்றன என்ற உண்மையை மனதில்வைத்து கொண்டு இதனை படிக்க கோருகிறோம்.

இஸ்லாத்தின் பெயராலும் இஸ்லாமியர்கள் பெயராலும் தொடர்ந்து தீவிரவாத தாக்குதல்கள் நடத்தப்பட்டு அந்த பழி தொடர்ந்து முஸ்லிம்களின் தலைமீது சுமத்தப்படுகிறது. இதை உணர்ந்து கொள்ளாமல் அவசரகுடுக்கைகளாக சில இஸ்லாமியர்களும் இஸ்லாமிய இயக்கங்களும் முஸ்லிம்கள் தான் செய்தார்கள் என்ற ரீதியிலேயே இதனை பார்ப்பது மட்டுமல்லாமல் பரப்பியும் வருவது வருந்தத்தக்கது வேதனைக்குரியது. தொடர்ந்து பல வருடங்களாக முஸ்லிம்கள் மீது சுமத்தப்பட்டு வரும் பொய்யான பழிகளை துடைக்க தாருல் இஸ்லாம் முயன்று வருகிறது.

மாலேகான் குண்டு வெடிப்புகள் மற்றும் இந்தியாவெங்கும் நடந்த குண்டு வெடிப்புகள் நடந்தவுடன் அடுத்த சில நிமிடங்களில் முஸ்லிம்களின் மீது குற்றம் சுமத்தப்பட்டது. அதற்கு ஆதாரமாக சில செய்தி நிறுவனங்களுக்கு இந்தியன் முஜாஹிதீன் பெயரில் வந்த இமெயில் காட்டப்பட்டது.

முஸ்லிம்களே முஸ்லிம்களை கொல்வார்கள். பள்ளிவாசல்களில் குண்டு வைப்பார்கள். நோன்பு திறக்கும்போது குண்டு வைத்து கொல்வார்கள் என சொல்லி நம்மை நம்ப சொன்னார்கள். சில முஸ்லிம்கள் நம்பினார்கள். அறிக்கை விட்டார்கள். பல முஸ்லிம்கள் இந்த மடமையை கண்டிக்க தயங்கினார்கள்

ஆனால் பின்வந்த நாட்களில் இவை அனைத்தும் பொய்யானது. தாருல் இஸ்லாம் மட்டுமே தன்னுடைய வைகறை வெளிச்சம் பத்திரிகையின் வாயிலாக தக்க ஆதாரத்துடன் அவ்வப்போது முஸ்லிம்களின் மீதான பழியை மறுத்துவந்தது. அப்போது ஒரு சிலரைத்தவிர இது மற்றவர்களுக்கு செவிடன் காதில் ஊதிய சங்காக ஆனது. அப்பொழுதும் சில இஸ்லாமியர்களும் இஸ்லாமிய தலைவர்களும்(?) இதனை வேகமாக பரப்பி முஸ்லிம்களை கண்டிப்பதாக அறிக்கை விட்டனர். இந்த தீவிரவாதிகள் எல்லாம் இஸ்லாத்தை சேர்ந்தவர்கள் அல்ல என வழக்கம் போல் ஃபத்வாக்களை கொடுத்து வந்தனர்.

ஆனால் இதை முஸ்லிம்கள் செய்யவே இல்லை, செய்தது இந்துத்துவா சக்திகளே அதன் பின்னணியில் இருந்தது அமெரிக்கா இஸ்ரேல் போன்ற நாடுகள் என்பதை வைகறை வெளிச்சம் ஆழமாகவும் அழுத்தமாக பதிந்து வந்தது. அப்போது நமுட்டு சிரிப்பு சிரித்தவர்கள் பின்னர் இந்த உண்மைகள் வெளிவந்தவுடன் இவ்வளவு தெளிவாக உண்மையை எவ்வாறு வைகறை வெளிச்சம் எழுத முடிந்தது என ஆச்சரியத்து நின்றனர்.

அதே போல் உண்மைகளை மூடி மறைக்க அஜ்மல் கசாபை தூக்கிலிட்டவர்கள் அடுத்ததாக அஃப்சல்குருவை தூக்கிலிடஉள்ளனர் என்ற உண்மையை வைகறை எழுதியது. அந்த மாதமே அஃப்சல் குரு தூக்கிலிடப்பட்டார்.

எவ்வாறு வைகறை வெளிச்சம் பத்திரிக்கையால் இவ்வாறு மிகச்சரியாக எழுது முடிகிறது என அனைவரும் ஆச்சசரியத்து நின்றனர்.

இதே போல் அனைத்து குண்டு வெடிப்புகளின் பின்னணியில் டேவிட் கோல் மென் ஹெட்லி என்ற அமெரிக்கரின் கையுள் ளது அவர் சி.ஐ.ஏ.வின் உளவாளி. அவரின் லாப்டாப்பில் இருந்து தான் இமெயில்கள் அனுப்பப்பட்டன என்ற உண்மையை வைகறை வெளிச்சம் எழுதியது. இந்த செய்தி பின்னர் சி.ஐ.ஏ உளவாளி என்ற உண்மையை மட்டும் தவிர்த்து மற்ற பத்திரிக்கைகளில் வெளிவந்தது.

<http://www.telegraph.co.uk/news/worldnews/asia/india/9825243/Mumbai-2611-plotter-David-Headley-sentenced-to-35-years.html>

<http://timesofindia.indiatimes.com/home/stoi/deep-focus/America-sacrificed-Mumbai-to-keep-Headley-in-play/articleshow/26289166.cms>

<http://www.propublica.org/article/david-headley-homegrown-terrorist>



UNCLASSIFIED
~~TOP SECRET~~[redacted]NOFORN

**Senate Select Committee on Intelligence**

***Committee Study of the Central Intelligence Agency's Detention and Interrogation Program***

UNITED STATES SENATE

**Foreword by Senate Select Committee on Intelligence Chairman Dianne Feinstein**

**Findings and Conclusions**

**Executive Summary**

*Approved December 13, 2012*

*Updated for Release April 3, 2014*

*Declassification Revisions December 3, 2014*

~~TOP SECRET~~[redacted]NOFORN
UNCLASSIFIED

இந்தியாவில் பிடிபட்ட ஹெட்லியை மிகபத்திரமாக காங்கிரஸ் அரசு அமெரிக்கா விற்கு அனுப்பி வைத்தது. பின்னர் எங்களிடம் அவனை ஒப்படையுங்கள் என நீலிக்கண்ணீர் வடித்தது. ஆனால் அமெரிக்கா அவனை இந்தியாவிடம் ஒப்படைக்கவில்லை. மாறாக அவனை காண்பிக்ககூட செய்யாமல் தாங்கள் 35 வருட சிறைதண்டணையை அவனுக்கு வழங்கிவிட்டதாக பொய் சொல்லி விட்டு (ஜேம்ஸ்பாண்டு படங்களில் வருவது போல்) அவனை வேறுபெயரில் வேரு இடத்திற்கு அனுப்பிவிட்டது. பின்னர் மும்பை தாக்குதலை திட்டமிட்டவனும் இவன் தான் என்ற உண்மையும் வெளிவந்தன.

மும்பைதாக்குதலை பொறுத்தவரை இதனை திட்டமிட்டு நடத்தியது ஐ.பி என்ற இந்திய உளவுத்துறையும் மற்றும் அபிநவ் பாரத் என்ற இந்துத்துவ தீவிரவாத குழுவும் என்ற உண்மையை தாருல் இஸ்லாம் தெளிவாக பதிய வைத்தது. பின்னர் கர்கரேயை கொலை செய்தது யார்? என்ற நூலின் மூலம் இந்த உண்மையை மஹாராஷ்டிராவின் முன்னாள் ஐ.ஜி.முஷ்ரிஃப் அவர்கள் வெளி கொணர்ந் தார்கள். பின்னர் அந்நூலை ஊரெங்கும் எடுத்து செல்லும் பணியை தாருல் இஸ்லாம் மேற்கொண்டது. இதன் மூலம் முஸ்லிம்கள் தன்னம்பிக்கை பெற்றனர். பின்னர் இப்பணியில் பாகுபாடின்றி அனைத்து முஸ்லிம்களும் அனைத்து இயக்கங்களும் தங்களை இணைத்து கொண்டனர். தற்போது மும்பைதாக்குதலை முஸ்லிம்கள் செய்ய வில்லை என தெளிவாக அனைத்து இடங் களிலும் பதிய வைத்து வருகின்றனர். ஒரு நாள் இந்த உண்மையும் நீதிமன்றத்தின் வாயிலாக வெளிவரும். இன்ஷாஅல்லாஹ். அதற்கான முயற்சியையும் தாருல்இஸ்லாம் செய்து வருகின்றது.

அதே போல் கமலஹாசன் விஸ்வரூபம் படத்தின் மூலம் தாலிபான்களை தீவிர வாதியாக அடையாளம் காட்ட முற்பட்ட போது அதனை நீதிமன்றம் வரை கொண்டு சென்றோம். பின்னர் அவர் பணிந்தார். தாலி பான்கள் யார் என்பதை அரங்குகளின் வாயி லாக உணர்த்திய போது கம்யூனிஸ்டுகளும் முற் போக்கு சிந்தனை கொண்டவர்களும் தாங்கள் இதுவரை தவறான சிந்தனையில் இருந்து விட்டதை உணர்ந்து தாருல் டிரஸ்டின் காப்பாளர் குலாம் முஹம்மது அவர்களிடம் நன்றி கூறி கலைந்தனர். தாலிபான்களின் தியாக வரலாறு என்ற வேர்கள் பதிப்பகத்தின்

வெளியீட்டையும் வாங்கி சென்றனர்.

தற்போது பாகிஸ்தானில் நடைபெற்ற மாணவர்களின் மீதான தாக்குதல். இந்த தாக்குதலை நடத்த வேண்டிய கட்டாயம் யாருக்கு இருக்கிறது? சற்றே சிந்தித்து பாருங்கள். பாகிஸ்தான் இராணுவத்தின் பலர் மற்றும் பாகிஸ்தானின் உளவுத்துறை தாலிபான்களுக்கு குறிப்பாக வடக்கு மாகாண எல்லையோரம் உள்ள தாலிபான்களுக்கு ஆதரவாகவே உள்ளது. இதன் காரணமாகவே அமெரிக்கா பாகிஸ்தானை நம்பாமல் அவ்வப்போது இவர்களின் மீது விமான தாக்குதல்கள் நடத்தி வருகின்றது. எனினும் அதில் வெற்றி பெறவில்லை. தற்போது ஆப்கானிஸ்தானை விட்டு முழுவதுமாக வெளியேறிவிட்டது. இஃதோர் அவமானம் அமெரிக்காவிற்கு. எனவே, பாகிஸ்தானின் இராணுவத்தையும் பாகிஸ்தான் மக்களையும் எல்லையோர தாலிபான்களுக்கு (தஹ்ரீகே தாலிபான்) எதிராக திருப்பவே இந்த தாக்குதல்.

இது மட்டுமல்ல மலாலா விஷயத்தில் அமெரிக்கா விளையாடிய விளையாட்டு தற்போது வெளிவந்து சந்தி சிரிக்கிறது. அவசர அவசரமாக மலாலாவுக்கு நோபல் பரிசு வழங்கப்பட்ட விஷயமும் மிக சர்ச்சைக்குள்ளாகி வருகிறது. மலாலா தாலிபான்களுக்கு எதிரான கருத்துக்களை முன்வைத்தவர் என்பது தெரிந்ததே.

அடுத்ததாக அமெரிக்காவின் செனட் சபை அமெரிக்க உளவுத்துறை தீவிரவாதிகள் என சந்தேகப்பட்டவர்களை சித்ரவதை செய்ததை விசாரித்து ஓர் அறிக்கையை வெளியிட்டுள்ளது. அதில் சி.ஐ.ஏ எல்லை தாண்டி செயல்பட்டுள்ளது. அது சித்ரவதையின் வழியாக பொய்யான தகவல்களை பெற்றதை தவிர எதனையும் உருப்படியாக பெறவில்லை. சி.ஐ.ஏ அமெரிக்காவை தவறாக வழி நடத்தியுள்ளது. எனவே, இந்த சித்ரவதை செய் தவர்களை தண்டிக்க வேண்டும் என்று அதில் அறிவுறுத்தியுள்ளது. இது சித்ரவதை தீவிரவாதி களை கலங்கடித்துள்ளது. எனவே, அவர்கள் இதுவரை செய்ததை நியாயப்படுத்த வேண்டுமென்றால் தாலிபான்கள் மிகக்கொடுமையானவர்கள் என்று உறுதிப்படுத்த வேண்டும். எனவே தான் பள்ளி மழலையர் மீதான இந்த தாக்குதல். இப்போது விளங்குகிறதா உண்மை? இவர்கள் ஏற்கனவே, தாலிபான்கள் மீது அபாண்டம் சுமத்த தாலிபான்களை கொண்டே யுவான்னி ரிட்லி என்ற மேற்கத்திய பத்திரிக்கையாளரை கொலை செய்ய திட்டமிட்டனர். அதற்காக தாலிபான்கள் பிடித்து வைத்திருந்த யுவான்னி ரிட்லி இஸ்ரேல் உளவாளி என்பது போன்ற காட்சிகளை உருவாக்கினர். தாலிபான்கள் யுவான்னி ரிட்லியை கொலை செய்வார்கள் என எதிர் பார்த்து காத்திருந்தனர். ஆனால் தாலிபான்களும் அவர்களின் உளவுத்துறையும் இவர்களை விட சிறந்தவர்கள். அவர்கள் யுவான்னி ரிட்லியை பற்றிய உண்மைகளை கண்டு பிடித்தனர். அவரை இன்முகத்துடன் நடத்தி அவருக்கு குர்ஆனை பரிசளித்து விடுவித்தனர். பின்னர் அவர் இஸ்லாத்தை ஏற்றார். பாலஸ்தீனத்திற்கு உதவி கப்பலை அனுப்பினார். இங்கிலாந்து பிரதமரின் மைத்துனி இஸ்லாத்திற்கு வர காரணமானார்.

http://www.theguardian.com/us-news/2014/dec/10/cia-report-prosecutions-international-law-icc

எனவே, இந்த உண்மைகளை விளங்காமல் தான்தோன்றித்தனமாக அறிக்கைகள் விடுவதை நாம் தவிர்த்துக்கொள்ள வேண்டும். ஒன்று உண்மைகளை ஆய்ந்து வெளியிடும் தன்மை கொண்டவர்களாக அந்த அறிவு பெற்றவர்களாக நம் தரத்தை உயர்த்திக் கொண்டு செய்திகளை பரப்ப வேண்டும்.



அல்லது வாயை மூடிக்கொண்டு மௌனமாக இருக்கவேண்டும். கடந்த பல வருடங்களாக முஸ்லிம்களையும் மற்றவர்களையும் அந்த தரத்திற்கு உயர்த்தும் பணியில் தாருல் இஸ்லாம் ஈடுபட்டு வந்தாலும் பொய்யர்கள் விரிக்கும் வலையில் மாயையில் முஸ்லிம்கள் தொடர்ந்து விழுந்து விடுகின்றனர். இதுவரை தந்துள்ள செய்திகளே போதும் எனினும் பாகிஸ்தான் தாக்குதல் பற்றிய ஆதாரப் பூர்வமான செய்திகளை கூடுதலாக சேகரிக்கும் பணியில் வைகறை வெளிச்சம் தொடர்ந்து ஈடுபட்டுள்ளது. விரைவில் வைகறை வெளிச்சத்தில் வெளியிடுகிறோம். இன்ஷா அல்லாஹ்

இறுதியாக எந்த ஓர் இறை நம்பிக்கை கொண்ட முஸ்லிமும் அநியாயமாக மாற்று நம்பிக்கை கொண்டவர்களையே கொலை செய்ய மாட்டான், முடியாது எனும்போது அவன் அநியாயமாக முஸ்லிம் மாணவர்களை கொலை செய்வான் என நம்புவது மடமை யிலும் மடமை.

அமெரிக்காவிற்கு தாலிபான்களின் பெயரால் ஒருதாக்குதல் நடத்த வேண்டியதன் அவ சியத்தை முன்பக்கத்தில் விவரித்துள்ளோம். அதில் ஒன்று உளவுத்துறை மீதான செனட் தேர்வு கமிட்டியின் அறிக்கை. ஏப்ரல் 3,2014ல் இந்த அறிக்கையை அதாவது அமெரிக்க உளவுத்துறையான சி.ஐ.ஏ வின் கைதுகள் மற்றும் விசாரணைகள் மீதான அறிக்கையை அமெரிக்க ஜனாதிபதிக்கு மக்கள் மத்தியில் வெளியிடுவதற்காக அனுப்பப்பட்டது என அறிக்கை கூறுகிறது.

இந்த கமிட்டியின் மார்ச் 2009ல் இருந்து ஆரம்பமானது என்றாலும் இது டிசம்பர் 2007ல் இருந்து சி.ஐ.ஏ.வால் அழிக்கப் பட்ட கைதிகளின் விசாரணை சம்பந்தப்பட்ட வீடியோக்களுக்கும் சென்றது.

கமிட்டியின் மொத்த அறிக்கை 6700 பக்கங்களைக்கொண்டது. இவை வெள்ளை மாளிகைக்கு, சி.ஐ.ஏ.விற்கு, நீதித்துறைக்கு, பாதுகாப்புத்துறைக்கு, மாநில துறைக்கு, தேசிய பாதுகாப்பு இயக்குநரகத்திற்கு அனுப்பப் பட்டுள்ளது.

செப்டம்பர் 11,2011 தாக்குதலுக்கு பிறகு அதே போன்றதொரு தாக்குதலை தடுக்க என்ன நடவடிக்கை வேண்டுமென்றாலும் எடுக் கலாம் என அரசியல் தலைவர்கள் சி.ஐ.ஏ விற்கு அளித்த அதிகாரத்தையும் பொதுமக்கள் இவர் களுக்கு அளித்த ஆதரவையும் இவர்கள் தவ றாக பயன்படுத்திக்கொண்டதாக இந்த கமிட்டியின் தலைவர் குற்றம் சாட்டுகிறார்.

இந்த அறிக்கையின் முக்கிய நோக்கமே எந்த வித அழுத்தமும் எந்த வித பயமும் இல்லாத காலத்திலும் உளவுத்துறை அமெரிக்க நாட்டின் சட்டங்களையும் விதிகளையும் மீறி செயல்பட்டுள்ளது எனவும் குற்றஞ் சாட்டுகிறார்.

சி.ஐ.ஏ அரசாங்கம் அல்லாத இரண்டு ஒப்பந்ததாரர்களால் இயக்கப்பட்டுள்ளது. காலவரையற்ற ரகசிய கைதுகள் செய்யப் பட்டுள்ளன. இது அமெரிக்க சட்டத்திற்கும் அமெரிக்கா நிறைவேற்றியுள்ள ஒப்பந்தங் களுக்கும் அமெரிக்க தரத்திற்கும் எதிராக அவர்கள் கொடூரமான முறையில் சித்ரவதை செய்யப்பட்டுள்ளார்கள் எனவும் அறிக்கை கூறுகிறது.

2001 முதல் 2009 வரையுள்ள ஆவணங்களை ஆய்வு செய்ததில் கமிட்டிக்கு பல புதிய தகவல்கள் கிடைத்துள்ளன. பத்துக்கும் மேற்பட்ட முறை முழுமையாக இந்த அறிக்கை ஆய்வு செய்யப்பட்ட பின்னரே வெளியிடப்பட்டது என கூறப்பட்டுள்ளது..

இதில் நன்கு அறியப்பட்ட 119 நபர்களை சி.ஐ.ஏ ரகசிய விசாரணைக் குட்படுத்தி சித்ரவதை செய்ததை பற்றியும் உள்ளது. இப்படிப்பட்ட கைதுகளையும் சித்ர வதைகளையும் நியாயப்படுத்த சி.ஐ.ஏ பாது காப்பிற்காகவும் தீவிரவாத சதிகளை முறிய டிக்கவும் குறிப்பிட்ட தீவிரவாதிகளை கைது செய்யவும் இதை செய்ததாக கூறியது. ஆனால் இவை அனைத்தும் பொய் என்பதையும் சி.ஐ.ஏ வின் ஒவ்வொரு அறிக்கையிலும் ஓட்டைகள் உள்ளதையும் இந்த அறிக்கையில் போதுமான ஆதாரங்களோடும் போதுமான தகவல் களோடும் தந்துள்ளதாக கமிட்டியின் தலைவர் கூறுகிறார்.

மேலும் கமிட்டியின் மொத்த அறிக்கை யையும் தற்போது வெளிப்படுத்த முடிவெடுக்க வில்லை என்றும் அவர் கூறுகிறார். 6700 பக்கங்களையும் வெளியிடுவது இதனை தாமதப்படுத்திவிடும் என்பதால் தற்போது உடனடியாக இது வெளியிடப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையின் நோக்கம் காலவரையற்ற விசாரணை கைதுகளையும் அப்போது நடைபெறும் சித்ரவதைகளையும் தடுக்கவும் இது சம்பந்தமான அமெரிக்க கொள்கையில் மாற்றம் கொண்டுவரவும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிபர் ஒபாமா 13491 ஜனவரி 2009 என்ற செயல் ஆணையில் சி.ஐ.ஏ வை "மாறுதல் அடிப்படையிலான குறுகிய கால விசாரணை கைதுகளை" தவிர்த்து நீண்டகால விசாரணை கைதுகளை தடுத்துள்ளார். அதில் விசாரணை

வழிமுறைகளையும் வரையறுத்துள்ளார். அதில் சில இராணுவ கள புத்தகத்தில் உள்ளவை. எனினும் இவை அமெரிக்க சட்டத்திற்குள் வராதவை. மாற்றமானவை எனவும் அறிக்கை கூறுகிறது.

அமெரிக்க சட்டத்திற்கும் ஒப்பந்தங் களுக்கும் மாற்றமானவை இந்த 2002 முதல் 2007 வரையிலான கைதுகள். இந்த விசாரணை முறைகள் மிகவும் கொடூரமானவை, மனித தன்மையற்றவை, கேவலமானவை. இதற்கான ஆதாரங்கள் மாற்றமுடியாதவை மறுக்க முடியாதவை என அறிக்கை கூறுகிறது.

இதில் சி.ஐ.ஏ அபூசுபைதாவையும் அப்துல்ரஹீம் அல் நஷ்ரி என்பவரையும் செய்த கொடுமைகளை 2008ம் ஆண்டிற்கான ஆயிரக்கணக்கான சி.ஐ.வின் தகவல்களை ஆய்வு செய்ததில் சி.ஐ.ஏ 2005ல் இதற்கான வீடியோ ஆதாரங்களை அழித்துள்ளது தெரியவந்ததாக அறிக்கை கூறுகிறது.

இந்த விசாரணை நீதித்துறையின் விசாரனணயினால் சிக்கலானது. அரசு வழங் கறிஞர் (அட்டார்னி ஜெனரல்) மிக்கயில் முகாசே (**Michael Mukasey**) அழிக்கப்பட்ட வீடியோ பதிவுகளைப்பற்றி முதலில் விசாரித் தார். பின்னர் அது ஜெனரல் ஹோல்டர் என் பவரால் 2009ல் விசாரிக்கப்பட்டது. கமிட்டி யினால் விசாரிக்கப்பட்ட சி.ஐ.ஏவின் பணி யாட்கள் மற்றும் ஒப்பந்ததாரர்கள் நீதிமன்ற அழுத்தத்தின் கீழ் இருந்ததனால் சி.ஐ.ஏ தங்களுடைய பணியாட்களை கமிட்டியின் முன்னால் ஆஜராக நிர்ப்பந்திக்கவில்லை. இந்த கமிட்டியின் அறிக்கை முடிவடையும் வரை இது தான் நிலைமை என்கிறார் கமிட்டியின் தலைவர்.

2009இல் இருந்து 2012 வரை கமிட்டியின் ஒரு பிரிவு ஆறு மில்லியன் (அறுபது இலட்சம்) பக்கங்களை ஆய்வு செய்துள்ளது.

**கமிட்டியின் அறிக்கை**

1. சி.ஐ.ஏஇன் மேம்பட்ட விசா ரணை முறைகள் உளவுத்தகவல்களை பெற பயனுள்ளவை அல்ல அல்லது இவை கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து ஒத்து ழைப்பை நல்க வல்லவை அல்ல.

உதாரணத்திற்கு சி,ஐ.ஏ ஆவணங்களின் படி 39 கைதிகளில் 7 பேர் சி.ஐ.ஏவின் இந்த மேம்பட்ட விசாரணைக்கு (கூடுதலான சித்ரவதைகள்) உட்படுத்தப்பட்டனர். ஆனால் இவர்களிடமிருந்து எந்த தகவல்களும் பெறப்படவில்லை. வழக்கமாக சி.ஐ.ஏவின் விசாரணையின் கீழ் வந்தவுடன் இந்த கைதிகள் இந்த மேம்பட்ட விசாரணைக்கு உட்படுத்தப் பட்டனர். ஆனால் மற்ற கைதிகள் இதற்கு முன்னரே அல்லது இந்த விசாரணை முறை களுக்கு உட்படுத்தப்படாமலே பயனுள்ள சரியான தகவல்களை தந்துள்ளனர்.

சி.ஐ.ஏ.வின் இந்த மேம்பட்ட விசாரணை முறையில் பல கைதிகள் பல தவறான புனையப்பட்ட செய்திகளை தந்துள் ளனர். இதன் விளைவாக உளவுத்தகவல்கள் தவறுக்கு உள்ளானது. இந்த தகவல்களில் பல தீவிரவாத அச்சுறுத்தல்களை பற்றியது. இதற்கு உளவுத்துறை உச்சபட்ச முன்னுரிமை கொடுத் துள்ளது. எனவே, சி.ஐ.ஏஇன் மேம்பட்ட விசாரணை முறைகள் பலனற்றவை என அறிக்கை கூறுகிறது.

2. இந்த சி.ஐ.ஏ.இன் மேம்பட்ட விசாரணை முறைகளை நியாயப்படுத்த சொல்லப்பட்டவை அனைத்தும் அவர் களுடைய கையாலாகத்தன்மையை வெளிக் காட்டுபவை

வெள்ளை மாளிகைக்கும், தேசிய பாதுகாப்பு கவுன்சிலுக்கும் நீதித்துறைக்கும் இன்ஸ்பெக்டர் ஜெனரல் சி.ஐ.ஏ அலுவலகத் திற்கும் காங்கிரசுக்கும் பொதுமக்களுக்கும் தங்களுடைய இந்த மேம்பட்ட விசாரணை முறைகள் குறிப்பிட்ட தீவிரவாத சதித்திட்டங் களை பெற்றுத்தந்தன, குறிப்பிட்ட தீவிரவாதி களை பிடிக்க உதவின என சி.ஐ.ஏ கூறியது. சி.ஐ.ஏ இந்த உதாரணங்களின் மூலம் இந்த விசாரணை முறைகள் பலனுள்ளவை என்பது மட்டுமல்ல மிகவும் தேவையானவை எனவும் மக்களின் வாழ்வை பாதுகாக்க எடுக்கப்பட்ட கிடைப்பதற்கரிய தகவல்கள் இதன் மூலம் தான் கிடைத்தது எனவும் காட்டிக்கொண்டது.

இந்த கமிட்டி சி.ஐ.ஏவின் மேம்பட்ட விசாரணையின் மூலம் தீவிரவாத எதிர்ப்பில் வெற்றி பெற்றதாக காட்டிக்கொள்ளப்பட்ட முக்கியமான 20 நிகழ்வுகளை மறு ஆய்வுக்கு எடுத்துக்கொண்டதில் இவை அனைத்தும் அடிப்படையிலேயே தவறானவை என்பது கண்டறியப்பட்டது. சில வழக்குகளில் இவர் கள் வெற்றிப்பெற்றதாக காட்டிக்கொண்ட தீவிரவாத ஒழிப்பு நடவடிக்கை வெற்றி களுக்கும் சி.ஐ.ஏவின் கைகளில் அகப்பட்டு சிறைப்பட்டவர்கள் மேம்பட்ட விசாரணை (சித்ரவதைகளுக்கு) முறைகளுக்கு உட்படுத் தப்படு முன்னரும் உட்பட்ட பின்னரும் தந்த தகவல்களுக்கும் சம்பந்தமேயில்லை.

இன்ஷா அல்லாஹ் அடுத்த இதழில் .............

**- ரஹ்மதுல்லாஹ்**



# தள்ளாடும் தமிழகம்

- M.R

*மது தீமைகளின் தாய்.*

*(நபிமொழி)*

**சிறுகதை**

நான் 7ம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்த பொழுது, எங்கள் ஆசிரியர் மதுவின் தீமையை விளக்கி எங்களுக்கு ஒரு சிறிய கதையைச் சொன்னார்.

முன்னொரு காலத்தில் ஒரு நல்ல மனிதன் பயணம் மேற்கொண்டான். அவன் போகும் வழியில் கொள்ளையர்களிடம் அகப்பட்டுக் கொண்டான். கொள்ளையர்களிடம் பிடிபட்ட இவனிடம் எந்தப் பொருளும் இல்லை. ஆனால் இவனைப் பிடித்த கொள்ளையர்கள் இவனை சும்மா விட மனதில்லாமல், நாங்கள் உனக்கு ஒரு வாய்ப்புத் தருகிறோம், அதைப் பயன்படுத்தி நாங்கள் சொல்வதை நிறைவேற்றி இங்கிருந்து செல்லலாம், இல்லையென்றால் உன்னை கொன்று விடுவோமென்று கூறினர்.

சரியென்று ஒப்புக்கொண்ட அந்த மனிதரிடம், ஒரு மதுக்குப்பி, ஒரு குழந்தை அதன் அருகில் ஒரு கொலை ஆயுதத்துடன் மற்றும் ஒரு தொழுநோயுள்ள பெண் காண்பிக்கப்பட்டு, நீ இந்த மதுவை அருந்த வேண்டும் அல்லது இந்தக் குழந்தையை அந்த ஆயுதத்தால் கொல்ல வேண்டும் அல்லது தொழுநோயுள்ள இந்தப் பெண்ணுடன் உறவு கொல்ல வேண்டும். இல்லையென்றால் நாங்கள் உன்னைக் கொன்று விடுவோமென்று சொல்லப்பட்டது.

இதனைக் கேட்ட அந்த மனிதன், தொழுலுளுநோயுள்ள பெண்ணிடம் உறவு கொள்வதை அருவருப்பாக எண்ணி, பச்சிளங் குழந்தையைக் கொல்வது மிகப் பெரிய பாவம் என்றெண்ணி, மதுவை அருந்தினார்.

விளைவு, அவர் மது அருந்தி அந்த மதுவின் போதை தலைக்கேரிய உடன், தொழுலுளுநோயுள்ள அந்தப் பெண் அழகியாகக் காட்சியளித்தால். உடனே அவர் அவளுடன் உறவு கொண்டார். அப்படி அவர் உறவு கொள்ளும் பொழுது அந்தக் குழந்தை வீறிட்டழவே, அதனை மிகப் பெரிய தொல்லையாக எண்ணிய அவர் அந்த ஆயுதத்தால் குழந்தையைக் கொன்று, எதையெல்லாம் செய்யக்கூடாது என்று மதுவை அருந்தினாரோ, அப்படிப்பட்ட எல்லாக் காரியங்களையும் செய்து முடித்தார் என்று கூறிய அந்த ஆசிரியர், அந்த இளம் வயதிலேயே எங்களுக்கு மதுவின் தீமையைப் போதித்தார். ஆம் மது தான் எல்லாத் தீமைகளுக்கும் தாய்.

இப்படிப்பட்ட தீமைகளின் தாயான மதுவைத்தான், மது நாட்டுக்கு வீட்டுக்கு உயிருக்குக் கேடு என்றும் குடி குடியைக் கெடுக்கும் குடிப்பழக்கம் உடல் நலத்தைக் கெடுக்கும் என்ற வாசகங்களுடன், மக்களுக்கு நன்மையைச் செய்ய வேண்டிய அரசு நேர் முரணான முட்டாள்கள் செய்யும் காரியத்தை, பல எதிர்ப்புகளுக்கும், ஆட்சேபனைகளுக்கும் செவிசாய்க்காமல், வெட்கமும் இல்லாமல் ஆள்பவர்கள் செய்து வருகிறார்கள்.

**யாருக்கு லாபம்?**

அள்ள அள்ளக் குறையாத லாபத்தைத் தருவது தான் டாஸ்மாக் வருமானம். கடந்த மூன்று நிதியாண்டுகளில் தமிழக அரசுக்கு டாஸ்மாக் மூலம் கிடைத்த லாபம் மட்டும் ரூபாய் 31,300 கோடிகள் (2011 - 2012 விற்று வரவு ரூபாய் 21,137.68 கொள்முதல் ரூபாய் 12,255.84 நிர்வாகச் செலவுகள் ரூபாய் 140.27 - நிகர லாபம் ரூபாய் 8741.57/ 2012 - 2013 விற்று வரவு ரூபாய் 24,371.15 கொள்முதல் ரூபாய் 13,611.25 நிர்வாகச் செலவுகள் ரூபாய் 105.49 - நிகர லாபம் ரூபாய் 10,654.41/ 2013 - 2014 விற்று வரவு ரூபாய் 25,413.52 கொள்முதல் ரூபாய் 13,406.91 நிர்வாகச் செலவுகள் ரூபாய் (சுமார்) 110 - நிகர லாபம் ரூபாய் 11,896.61

(ரூபாய் கோடிகளில்). இதல்லாமல், இவற்றிற்கு விதிக்கப்படும் உற்பத்தி வரி, விற்பனை வரி போன்ற வரிகளும் அரசுக்கு வருமானமே. இவ்வளவு லாபமும், அரசியல்வாதிகள், அலுவலர்கள் மற்றும் இதரப் படிகள் எல்லாம் கடந்த பின் அரசாங்க கருவூலத்தில் ஈட்டியது மட்டுமே. இவ்வளவிற்கும் முன்னால் அதன் வருமானம்?

<http://www.tnbudget.tn.gov.in/revenue%20receipts/receipts.pdf> -- 14‹ பக்கம்

இதுமட்டுமா, டாஸ்மாக்கிற்கு மதுவை விநியோகம் செய்யும் நிறுவனங்களில் கனிச மானவை அரசியல்வாதிகளுக்கும், அரசியலின் தலைவிதியை நிர்ணயிப்பதாகச் சொல்லப்படும் பெரிய தலைகளுக்கும் சொந்தமானவை. இதிலெல்லாம் ஆளும் கட்சி எதிர்கட்சி என்று பேதம் பிரித்துப் பார்க்காமல் சமத்துவம் தலைத்தோங்கும் தொழிலிது. இதில் இவர்களுக்கு வரும் வருமானத்தின் அளவு நினைத்துப் பார்க்க முடியாத அளவாக இருக்கிறது.

#### பாதிக்கப்படுவது யார்?

இந்த மதுவின் கோரப்பிடியில் சிக்கி சின்னாபின்னமாவதில் பெரும் பகுதியினர், தலித்துகள், பழங்குடியினர், ஆதிதிராவிடர் மற்றும் தினக்கூலிகளே. இவர்கள் செய்யும் தொழில் மற்றும் அமைவிடம் இவர்களை இந்தக் குடியை நோக்கி அழைத்துச் செல்வதாகச் சொல்லப்பட்டாலும், இவர்கள் தான் மிகப்பெரிய ஓட்டு வங்கி. இவர்களை குடிப் பழக்கத்திலிருந்து அப்புறப்படுத்தினால், இவர்கள் சிந்திக்க ஆரம்பித்து விடுவார்கள் என்று கருதும் அரசியல்வாதிகள், தங்கள் ஓட்டு வங்கியை இழக்காமல் இருப்பதற்கும் மற்றும் தங்கள் கூட்டங்கள் போன்றவற்றிற்கு ஆட்களைத் திரட்டுவதற்கும் முக்கியமானதாகக் கருதுவது இவர்களையும், இவர்களுக்கு ஊற்றிக்கொடுக்கும் மதுவையும் தான்.

ஆதலால் தான் மதுவினால் மிக மோசமாகச் சீரழியும் இந்தச் சமுதாயத்தினரை காப்பாற்றும் எண்ணமில்லாமல், எல்லா எதிர்ப்புகளுக்கும், விமர்சனங்களுக்கும், மதுவினால் அன்றாடம் செய்தித்தாள்களை நிரப்பும் கொலை, கொள்ளை, கற்பழிப்பு, தற்கொலை, மனைவியை அடித்தல், மனைவி மக்களுடன் தகராறு, தந்தையே அல்லது சகோதரனே பெண்ணிடம் தவறான உறவுக்கு முயல்தல், தெருச்சண்டை, பலவித நோய்கள் இன்னும் மனிதன் வெட்கித் தலைகுனிய வேண்டிய எல்லா செய்திகளையும் படித்தும், பார்த்தும், கேட்டும் இந்த அரசியல்வாதிகள் கண்டுகொள்ளாமல் இருக்கிறார்கள். சமீபத்தில் தருமபுரி மருத்து வமனையில் குழந்தைகள் இறந்த பொழுது, அது குறித்துக் கூறிய அந்தத் தொகுதியின் பாராளு மன்ற உறுப்பினர் அன்புமணி கூறும் பொழுது, மதுப் பு(ப)ழக்கம் இங்கு அதிகமாக இருப்பதும் இந்த இறப்புகளுக்கு ஒரு காரணம் என்று கூறினார். அவர் கூறுவதில் உண்மையில்லாமலில்லை. ஈட்டும் வருமானத்தில் பாதிக்கும் அதிகமாக மதுக் குடித்தால், குடும்பச் செலவிற்கு என்ன செய்வது? ஊட்டச் சத்துக்கள் இல்லாத உணவினால், உடலுக்குத் தேவையான சத்துக்கள் கிடைக்காதே! பிறகு பிறக்கும் குழந்தைகள் எப்படி சரியான எடையில் பிறக்கும்?

#### சீரழிக்கும் சினிமா

முன்பெல்லாம் சினிமாவில் வில்லனாக வருபவர் மது அருந்துவார். நாயகனாக வருபவர் மதுவை ஒழிக்கப் போராடுவார். இன்றைய சினிமாவில், நாயகனாக வருபவரும், அவருடன் வரும் தோழர்களும் மதுவையும், உடலின் அங்கங்கள் தெரியும் வகையில் வலம் வரும் பெண்களையும் சிலாகித்து, மது அருந்தாதவன் மற்றும் பெண் தொடர்பு இல்லாதவன் வாழத் தகுதி இல்லாதவன் போல சித்தரித்து ஒருவன் குடிகாரனாகவும், விபச்சாரகனாகவும் மாறுவதற்கு உதவும் வகையில் தான் காட்சியகளையமைக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், வேலை கிடைத் தால், கல்யாணமானால், பிறந்த நாளென்றால், புது வருடமென்றால், பண்டிகை என்றால், நண்பர்கள் சந்தித்துக் கொண்டால் கண்டிப்பாக மது அருந்த வேண்டும் என்பதை வலியுறுத்தி காட்சிகளமைக்கப்பட்டு மனித சமுதாயத்தை இந்தக் கூத்தாடிகள் சீரழிக்கிறார்கள்.

#### முஸ்லிம்கள் என்ன செய்ய வேண்டும்

இணைவைப்பு, மது அருந்துதல் போன்ற தீங்குகளை தடுத்து நிறுத்த வேண்டியது முஸ்லிம்களின் முக்கியமான கடமை. வேறெங்குமே மதுவையோ அல்லது மது அருந்துவதையோ தீமையென்று சொல்ல வில்லை. இஸ்லாமிய மார்க்கம் மட்டும் தான் அதை ஹராமாக்கியிருக்கிறது. அதற்கு நாம் செய்ய வேண்டியது, அந்தத் தீமையைச் செய்தவரை வெறுக்காமல் அந்தத் தீமையை வெறுத்து, அந்தத் தீமையை செய்தவரிடம் உண்மைகளை எடுத்துச் சொல்லி, எப்படி மலம் கழித்த குழந்தையை அந்த மலத்திலிருந்து தூக்கி அப்புறப்படுத்தி ஒரு தாய் சுத்தம் செய்வாரோ, அது போல அந்த மனிதர்களை மது என்னும் மலத்திலிருந்து சுத்தம் செய்து, அவர்களிடம் அல்லாஹ்வின் மார்க்கமான இஸ்லாத்தைச் சொல்லி, அவர்கள் இந்த உலகிலும், மறு உலகிலும் வெற்றிபெற பாடுபட வேண்டும்.